உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 புரட்டாதி 6 சனிக்கிழமை (22-09-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:300

# ஜெயலலிதா முதலமைச்சராக நியமிக்கப்பட்டமை செல்லாது!

## உயர் நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பு உடனே பதவியிலிருந்து விலகினார்

சென்னை,செப்ரெம்பர்22

**தமிழக முதலமைச்சராக ஜெயலலிதா பதவியேற்றது செல்லாது என இந்திய உயர் நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பளித்தது.**

**இதனையடுத்து உடனடியாகவே அவர் நேற்றுப் பதவி விலகினார்.**

தமிழக சட்டசபைத் தேர்தலில் ஜெயலலிதாவின் அ.தி.மு.க. பெரு வெற்றியீட்டியதையடுத்து, கடந்த மே 14 ஆம் திகதி அவரை அப்போதைய தமிழக ஆளுநர் பாத்திமா பீவி முதலமைச்சராகப் பதவியேற்க அழைத்தார்.

அவ்வாறு அவரை முதலமைச்சராகப் பதவியேற்க தமிழக ஆளுநர் வழங்கிய அனுமதியே இந்திய அரசமைப்பு ஏற்பாடுகளுக்கு முரணானது என்று நேற்றைய தீர்ப்பில் இந்திய உயர் நீதிமன்றம் தெரிவித்தது.

கிரிமினல் வழக்கு ஒன்றில் இரண்டு ஆண்டுகளுக்கு மேல் சிறைத் தண்டனை பெற்ற ஒருவர், அடுத்த ஏழு ஆண்டுகளுக்குத் தேர்தலில் போட்டியிடத் தகுதியற்றவர்

(2 ஆம் பக்கம் பார்க்க)



இராஜினாமாக் கடிதத்தை சமர்ப்பித்தபின் ஆளுநர் மாளிகைக்கு முன் செய்தியாளர்களிடம் உரையாடியபோது.

### ஆளுநர் ரங்கராஜன் முன்னிலையில்

## புதிய முதல்வராக நேற்றிரவு பன்னீர்ச்செல்வம் பதவி ஏற்பு!

### சசிகலாவின் நெருங்கிய உறவினராம்

சென்னை,செப்.22

தமிழகத்தின் புதிய முதலமைச்சராக ஓ.பன்னீர்ச்செல்வம் நேற்றிரவு தமிழக ஆளுநர் ரங்கராஜன் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

ஜெயலலிதாவின் நெருங்கிய தோழியான சசிகலாவுக்கு இவர் உறவினர் என்று தெரிவிக்கப்படுகின்றது. ஜெயலலிதாவின் அரசில் இவர் வருவாய்த்துறை அமைச்சராக இருந்தவர்.

சசிகலாவின் உறவினர் என்பதாலும் - தமக்கு மிக நெருங்கிய - நம்பிக்கைக்குரிய - நபராக இவர் இருந்ததாலுமே இவருக்கு முக்கிய பொறுப்பான நிதியுடன் தொடர்புடைய - வருவாய்த்துறையை ஜெயலலிதா முன்னர் வழங்கியிருந்ததாகவும் -

(2ஆம் பக்கம் பார்க்க)

## வாஜ்பாய், கருணாநிதிக்கு எதிராக ஜெயலலிதாவின் ஆதரவாளர் கோஷம்

### கொடும்பாவியும் எரிப்பு

சென்னை,செப்.22

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை அடுத்து முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவின் வீட்டின் முன்பாகக் கூடிய அ.தி.மு.கவின் தொண்டர்கள் தி.மு.க.தலைவர் மு.கருணாநிதி, பிரதமர் வாஜ்பாய் ஆகியோருக்கு எதிராகக் கோஷங்கள் எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மு.கருணாநிதியையும்,பிரதமர் வாஜ்பாயையும் கடுமையாகத் தூஷித்த ஆர்ப்பாட்டக்காரர்கள் பிர

(14 ஆம் பக்கம் பார்க்க)

## அரசமைப்பின் 17ஆவது திருத்தச் சட்ட வரைவில் மாற்றங்களைச் செய்ய உயர் நீதிமன்றம் சிபாரிசு

கொழும்பு,செப்.22

நீதி, பொலீஸ், தேர்தல், பொதுச் சேவை ஆகிய துறைகள் தொடர்பாக நான்கு ஆணைக்குழுக்களை நியமிக்க வகைசெய்யும் அரசமைப்பின் 17 ஆவது திருத்தச் சட்டத்தின் வரைவில் சில மாற்றங்களைச் செய்யும்படி உயர் நீதிமன்றம் சட்டமா அதிபருக்கு ஆலோசனை வழங்கியது.

இந்தச் சட்டவரைவு நேற்றுப் பிரத நீதியரசர் சரத் என்.சில்வா தலைமையிலான மூன்று நீதியரசர்களைக் கொண்ட உயர் நீதிமன்றத்தினால் பரிசீலனை செய்யப்பட்டது.

நான்கு பத்திரிகை நிறுவனங்களும், சுதந்திர ஊடக இயக்கமும் இந்த அரசமைப்புத் திருத்தத்தை ஆட்சே

(14 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு - கிழக்கில் குழந்தைகளுக்கு இன்று போலியோ தடுப்பு மருந்து

### குடாநாட்டில் 148 நிலையங்கள்

யாழ்ப்பாணம்,செப்.22

வடக்கு - கிழக்கில் ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு போலியோ தடுப்பு சொட்டு மருந்து வழங்கும் பணிகள் இன்று காலை 8 மணிமுதல் மாலை 4 மணிவரை நடைபெறும்.

யாழ்.குடாநாட்டில் இதற்கான சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாகவும் -

இதன்படி குடாநாட்டில் உள்ள 7 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளைச் சேர்ந்த 148 நிலையங்களில் சொட்டு மருந்து வழங்கப்படும் என்றும் -

(14 ஆம் பக்கம் பார்க்க)

## புதுக்குடியிருப்பில் துக்கம் அனுஷ்டிப்பு

மட்டக்களப்பு,செப்.22

மட்டக்களப்பு நகருக்குத் தெற்கே 15 கிலோமீற்றருக்கு அப்பால் உள்ள புதுக்குடியிருப்புக் கிராமத்தில் 1990 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 21 ஆம் திகதி பொதுமக்கள் 17 பேர் படுகொலை செய்யப்பட்ட 11 ஆவது வருட நினைவுதினம் நேற்று வெள்ளிக்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது.

படுகொலை செய்யப்பட்ட பொதுமக்களின் ஆத்மசாந்திக்காக புதுக்குடியிருப்புப் பிள்ளையார் ஆலயத்தில் விசேட பூசைகளும் நடத்தப்பட்டன. இறந்தவர்களின் நினைவாகக் கட்டப்பட்டிருக்கும் நினைவுத் தூபிக்கும் உறவினர்கள் அஞ்சலி செலுத்தினர்.

ஸ்ரீலங்கா இராணுவத்தினருடன் இணைந்து முஸ்லிம் ஊர்காவல் படையினரே இப்படுகொலைகளைச் செய்ததாக அக்கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

இச்சம்பவத்தில் பெண்கள், குழந்தைகள் உட்பட 17 பேர் படுகொலை செய்யப்பட்டதுடன் பலர் காயமடைந்திருந்தனர்.

(க-21)

## 17 ஆவது அரசமைப்புத் திருத்தம்; நாடாளுமன்றில் திங்களன்று விவாதம்

### அன்றிரவே வாக்கெடுப்பும்

17 ஆவது அரசமைப்புச் சீர்திருத்தப் பிரேரணையை நாளைமறுதினம் திங்களன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து, அன்றே விவாதம் நடத்தி வாக்கெடுப்புக்கு விடுவது என அரசியல் கட்சித் தலைவர்கள் முடிவுசெய்துள்ளனர்.

சபாநாயகர் அனுரா பண்டாரநாயக்க தலைமையில் நேற்று நடைபெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் இது தொடர்பாக இணக்கப்பாடு ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

இதன்பிரகாரம் அரசமைப்புச் சீர்திருத்தப் பிரேரணை மீதான இறுதி வாக்களிப்பு திங்களன்று இரவே நடைபெறும்.

(உ-3-7)

## தமிழ்த்தினப் போட்டிகளில்

## யாழ்.மாவட்டத்திற்கு மேலும் ஐந்து தங்கப் பதக்கங்கள்!

கொழும்பு,செப்.22

கொழும்பில் நேற்று நடைபெற்ற தேசிய மட்ட தமிழ்த்தினப் போட்டிகளின் இரண்டாம் கட்டப் போட்டிகளில் யாழ்.மாவட்டத்துக்கு மேலும் 5 தங்கப்பதக்கங்களும் ஒரு வெள்ளிப்பதக்கமும் கிடைத்துள்ளன.

கடந்த 15 ஆம் திகதி நடைபெற்ற முதற்கட்டப் போட்டிகளில் யாழ்.மாவட்டத்துக்கு 3 தங்கப்பதக்கங்களும், மூன்று வெள்ளிப்பதக்கங்களும் கிடைத்தமை தெரிந்ததே.

நேற்றைய போட்டிகள் பம்பலப்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## 17 ஆவது திருத்தம் குறித்து கட்சிகள் இடையே இணக்கம்

கொழும்பு,செப்.22

நான்கு சுதந்திர ஆணைக்குழுக்கள் நியமிப்பது தொடர்பான 17ஆவது அரசமைப்புத் திருத்த ஏற்பாடுகள் குறித்து, பிரதான கட்சிகளுக்கு இடையில் இணக்கப்பாடு ஏற்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

நான்கு ஆணைக்குழுக்கள் அமைக்கும் விடயத்தை ஐ.தே.கட்சி கொள்கை அளவில் முன்மொழிந்த போதிலும் -

அந்த ஆணைக்குழுக்களில்

(14 ஆம் பக்கம் பார்க்க)

மறந்துவிடாதீர்கள்!

போலியோ சொட்டுமருந்து கொடுக்கும் தினம் இன்று!

- யாழ். றோட்டறிக் கழகம்

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# வயலில் கிடந்த மர்மப் பொருள் வெடித்துச் சிறுவன் படுகாயம்

## தட்டிப் பார்த்ததால் நிகழ்ந்த விபரீதம்

யாழ்ப்பாணம்,செப்.22

செம்மணி வீதியிலுள்ள தமது வயலில் வேலை செய்துகொண்டிருந்த போது நிலத்தில் தென்பட்ட வட்ட வடிவமான மர்மப் பொருளைத தட்டிப் பார்த்தபோது அது வெடித்ததனால் சிறுவன் ஒருவன் படுகாயமடைந்தான்.

நேற்று இடம்பெற்ற இச் சம்பவத்தில் கல்வியங்காட்டைச் சேர்ந்த தேவராசா ராஜ்குமார் (வயது 13) என்ற கோப்பாய் மகாவித்தியாலயத்தில் கல்வி பயிலும் சிறுவனே படுகாயமடைந்தான்.

இச் சிறுவன் முகம், நெஞ்சு, கைகளில் கடும் காயங்களுடன் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளான். (க-9-ரி)



**இலங்கை வங்கியின் 62ஆவது வருட பூர்த்தியை முன்னிட்டு யாழ்.மாவட்ட இலங்கை வங்கி ஊழியர்களால் யாழ்.மருத்துவமனைக்கு அண்மையில் இரு குளிர்சாதனப் பெட்டிகள் அன்பளிப்புச் செய்யப்பட்டன.**

**இலங்கை வங்கியின் யாழ்.பிரதேச முகாமையாளர் பீ.ஏ.அருமைநாயகம், யாழ்.வைத்தியப் பணிப்பாளர் செல்வி ந.கனகரட்ணம், வைத்திய அதிகாரி திருமதி நாகேந்திரா ஆகியோரிடம் அவற்றைக் கையளித்தபோது எடுக்கப்பட்ட படம். அருகில் யாழ்.இரண்டாம் கிளை முகாமையாளர் கே.விக்னராஜா காணப்படுகின்றார். (க)**

# மீன் பிடித் தடைக்கு எதிராக வடமராட்சியில் ஆர்ப்பாட்டம்

## செவ்வாயன்று நடத்த ஏற்பாடு

யாழ்ப்பாணம்,செப்.22

வடமராட்சிக் கடலில் மீன் பிடிக்க விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்குமாறுகோரி எதிர்வரும் செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டம் ஒன்றை அங்கு நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

வல்வை நகரசபைத் தலைவர் எம்.கே.சிவாஜிலிங்கம் ஆதிகோயிலடி கடற் தொழிலாளர் சங்கத்துடன இணைந்து இதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருவதாகவும் -

ஆர்ப்பாட்டம் நடத்தி உடன் சாதகமான பதில் கிடைக்காவிட்டால் குடாநாடு முழுவதும் இந்தப் போராட்டத்தை விஸ்தரிப்பதென முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை -

தமிழர் விடுதலைக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமகாராசா வடமராட்சிக்கு நேற்று முன்தினம்சென்று மீன்பிடித் தடையால் பாதிக்கப்பட்டுள்ள மீனவர்களுடன் கலந்துரையாடினார். (க-3-9-ரி)

## புலி உறுப்பினர் உயிரிழப்பு

வவுனியா,செப்.22

முகமாலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வாகன விபத்து ஒன்றில் நீலமுகிலன் (அல்பிரட் மினோதன் - யாழ்ப்பாணம்) என்ற போராளி மரணமானதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். (க-3)

## சைவச் சிறுவர் இல்லத்தில் நாளை லயன்ஸ் நிகழ்ச்சி

யாழ்ப்பாணம்,செப்.22

நல்லூர் லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் திருநெல்வேலி சைவச் சிறுவர் இல்லத்தில் விசேட நிகழ்வொன்று நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு இடம் பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் லயன்ஸ் கழகத்தின் வலயத் தலைவர் அ.நல்லதம்பி மற்றும் நல்லூர் லயன்ஸ் கழக உறுப்பினர்கள் பங்குபற்றுவர்.

சிறார்களுடன் கலந்துறவாடி அவர்களுக்கு மதியஉணவு மற்றும் கற்றல் உபகரணங்களை லயன்ஸ் கழகம் வழங்கவிருக்கின்றது. (க-3)

## உலர் உணவு நிவாரணம்

தென்மராட்சி,செப்.22

இடம் பெயர்ந்த மக்களுக்கான 95 ஏபி இலக்க புள்ளிகளுக்கான (செப்ரெம்பர் மாத) உலர் உணவு நிவாரணப் பொருள்கள் ப.நோ.கூ. சங்கக் கிளைக்கடைகளில் வழங்கப்பட்டு வருகின்றது.

இதேவேளை, அனுமதிப் பத்திரம் மூலம் நிவாரண உலர் உணவுப் பொருள்கள் பெறுபவர்களுக்கு இன்னமும் அனுமதிப்பத்திரம் (பொர்மிட்) வழங்கப்படவில்லை எனத்தெரிவிக்கப்பட்டது. (க-117)

## முதியோர் தின விழா

தென்மராட்சி,செப்.22

கட்டைவேலி நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர் சர்வதேச சிறுவர் மற்றும் முதியோர் தின விழாவை எதிர்வரும் ஒக்ரோபர் நான்காம் திகதி கொண்டாடவுள்ளனர்.

அன்றையதினம் டாக்டர் சா.சிவயோகன், டாக்டர் தயா.சோமசுந்தரம் ஆகியோரால் தொகுக்கப்பட்ட யாழ்.சாந்திக நிலைய பிரசுரமான 'முதுமை' என்னும் நூல் வெளியீட்டு விழாவும் நடைபெறும்.

சங்கத்தினால் நடத்தப்படும் பாலர் பாடசாலைகளின் மாணவர்களுக்கு போசாக்கு உணவு வழங்கும் திட்டமும் அன்றையதினம் ஆரம்பித்து வைக்கப்படும். (க-117)

# அமைச்சர்கள் குறைந்தும் செலவீனத்தில் மாற்றமில்லை

கொழும்பு,செப்.22

அமைச்சர்களின் எண்ணிக்கை இருபதாகக் குறைக்கப்பட்ட போதும்- அமைச்சரவைக்கான செலவீனத் தொகை குறையவில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

அமைச்சர் பதவிகளை இராஜினாமாச் செய்த ஜி.எல்.பீரிஸ், எஸ்.பி.திஸநாயக்கா, மஹிந்த விஜேசேகரா ஆகியோரின் பணியாளர்களும் பதவிகள் வழங்கப்படாத பேராசிரியர் லெஸ்லி குணவர்த்தனா, சுமேதா ஜயசேன ஆகியோரின் பணியாளர்களும் மட்டுமே சேவையில் இருந்து நிறுத்தப்பட்டுள்ளனர்.

அவர்களது செலவீனங்களும் அந்த அமைச்சர்களின் செலவீனங்களும் மட்டுமே மீதப்படுத்தப் பட்டுள்ளன என்றும் -

ஏனையோரின் செலவீனங்கள் முன்னரைப் போன்றே இருப்பதாகவும - தெரிவிக்கப்படுகின்றது.

பதவியிழந்த பிரதி அமைச்சர்களில் டலஸ் அழகப்பெரும மட்டுமே தனது வாகனங்களைத் திரும்ப ஒப்படைத்துள்ளார் என்றும் -

ஏனையோரின் வாகனங்களுக்கான எரிபொருள் தேவையை அந்த அந்த அமைச்சுக்களே ஈடுசெய்து வருகின்றன என்றும் - கூறப்பட்டது.

# 11 சிப்பாய்களின் மரண விசாரணை நேற்று மல்லாகம் நீதிமன்றில்!

வலி.வடக்கு,செப்.22

வடமராட்சிக் கடலில் கடந்த ஞாயிற்றுக்கிழமை துருப்புக்காவிக் கப்பல் தாக்கப்பட்ட சம்பவத்தில் உயிரிழந்த 11 கடற்படைச் சிப்பாய்களின் மரண விசாரணை நேற்று மல்லாகம் நீதிமன்றத்தில் இடம்பெற்றது.

நீதிவான் பா.சுப்பிரமணியம் முன்னிலையில் இடம்பெற்ற இந்த மரண விசாரணையில் லெப்டினன்ட் தகநாயக்க, காங்கேசன்துறை குற்றத் தடுப்புப் பிரிவு இன்ஸ்பெக்டர் ஜீவ சாந்தகுமார ராஜபக்ஷ, தாக்குதலில் ஈடுபட்ட டோறா படகின் சிரேஷ்ட உத்தியோகத்தரான ராமநாயக்க ஆகியோர் சாட்சியம் அளித்தனர்.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த கடற்படைச் சிப்பாய் ஒருவர் ஆபத்தான நிலையில் மகரகம இராணுவ ஆஸ்பத்திரியில் அனு மதிக்கப்பட்டுள்ளதாக நீதிவானின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

அவரது வாக்குமூலத்தை உடனடியாகப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று நீதிவான் தெரிவித்தார். பிரேத பரிசோதனை அறிக்கை கிடைக்கும் வரை விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது. (க-3-86)

# புதிய முதல்வராக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அப்பணியில் அவர் விசுவாசமாகச செயற்பட்டதால் இப்போது தமது இடத்துக்கு அவரை முதலமைச்சர் பதவிக்கு ஜெயலலிதா தெரிவு செய்ததாகவும் - கூறப்படுகின்றது.

ஜெயலலிதா பதவியிலிருந்து விலகுவதாக நேற்றுப் பிற்பகல் அறிவித்த பின்னர் அ.தி.மு.கவின் சட்ட மன்ற உறுப்பினர்கள் ஒன்று கூடி தமது சட்டமன்றத் தலைவராக ஓ.பன்னீர்செல்வத்தைத் தெரிவு செய்ததாகவும் -

அதையடுத்து அவர் முதல்வராகப் பதவியேற்றதாகவும் - அறிவிக்கப்பட்டது.

முதலமைச்சர் ஜெயலலிதா பதவி இழந்ததால் அவரால் நியமிக்கப்பட்ட 24 அமைச்சர்களும் தமது அமைச்சர் பதவிகளை இழந்ததாக அறிவிக்கப்பட்டது.

எனினும் புதிய முதல்வரோடு சேர்ந்து, இந்த அமைச்சர்கள் அனைவரும் மீண்டும் அமைச்சர்களாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர்.

கடந்த பொதுத் தேர்தலில் பன்னீர்செல்வம், பெரியபுலம் தொகுதியில் போட்டியிட்டு வெற்றிபெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.(உ)

# ஜெயலலிதா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என இந்தியத் தேர்தல் சட்டங்கள் தெரிவிக்கின்றன.

முன்னர் ஜெயலலிதா முதலமைச்சராக இருந்தபோது அவரால் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் 'டான்ஸி' நிலப்பேர ஊழல் வழக்கில் ஜெயலிதாவுக்கு மூன்று ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. அந்தத் தீர்ப்பை எதிர்த்து அவர் மேன் முறையீடு செய்திருப்பதால் அவர் வெளியே இருக்கின்றார்.

கடந்த சட்டமன்றத் தேர்தல்களில் பல்வேறு தொகுதிகளில் போட்டியிடுவதற்கு அவர் சார்பில் சமர்ப்பிக்கப்பட்ட நான்கு மனுக்கள், அவர் தேர்தலில் போட்டியிடத் தகுதியற்றவர் என்ற காரணத்தால் நிராகரிக்கப்பட்டன.

எனினும் அவரது கட்சி தேர்தலில் பெரு வெற்றியீட்டியதையடுத்து அவரை முதலமைச்சராகப் பதவியேற்க ஆளுநர் பாத்திமா பீவி அனுமதித்தார்.

அதை எதிர்த்து இந்திய உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ஆறு மனுக்கள் மீதே நேற்றுத் தீர்ப்பு வழங்கப்பட்டது. நீதியரசர் எஸ்.பி.பருச்சா தலைமையிலான ஐந்து நீதியரசர்களைக்கொண்ட மன்று 3 - 2 ஆகப் பிரிந்து இந்தத் தீர்ப்பை வழங்கியது.

இரு நீதியரசர்கள் தனியான தீர்ப்பு எழுதியபோதிலும் பெரும்பான்மையான நீதியரசர்களின் தீர்ப்பைத் தாங்கள் ஏற்பதாக அவர்கள் தெரிவித்தனர்.

அரசமைப்பின் 164 ஆவது பிரிவின்படி, சட்டமன்ற உறுப்பினராக இல்லாத ஒருவரை ஒரு மாநிலத்தின் முதலமைச்சராக நியமிக்கலாம் என்றாலும் -

அரசமைப்பின் 173, 191 ஆகியவற்றில் கூறப்பட்டுள்ள சரத்துக்களின்படியும் அவருக்குத் தகுதியிருக்க வேண்டும் என்றும் -

அப்படித் தகுதியில்லாதவரை முதலமைச்சராக நியமிக்க முடியாது என்றும் - நீதியரசர்கள் தமது தீர்ப்பில் தெரிவித்தனர்.

அரசமைப்பின் 164 ஆவது பிரிவின்படி, ஒருவரை முதலமைச்சராக நியமிக்க ஆளுநருக்குத் தனிப்பட்ட அதிகாரம் உள்ளது என்பதை நீதிமன்றம் ஏற்றுக்கொள்கின்றது. அதேசமயம், அரசமைப்புச் சட்டப் பிரிவுகளின்படி ஒருவர் அந்தப் பதவிக்குத் தகுதியுடையவராக இல்லையென்றால் அவரை நியமிக்காமல் மறுப்பதற்கும் ஆளுநருக்கு உரிமை உள்ளது என்பதில் சந்தேகம் இல்லை என்றும் நீதியரசர்கள் தெரிவித்துள்ளனர்.

மக்கள் தீர்ப்பு மதிக்கப்பட வேண்டுமென்றாலும் அது அரசமைப்புக்கு உட்பட்டிருக்க வேண்டும் என்றும் நீதியரசர்கள் தெரிவித்தனர்.

முதலமைச்சர் பதவியிலிருந்து ஜெயலலிதா நீக்கப்பட்டாலும் அவராலும், அவரது அமைச்சரவையாலும் அரசமைப்பு எல்லைக்குள்ளும் சட்டப்படியாகவும் மேற்கொள்ளப்பட்ட முடிவுகள் அனைத்தும் செல்லுபடியாகும் என்றும் நீதியரசர்கள் தெரிவித்துள்ளனர்.

உயர்நீதிமன்றத் தீர்ப்பையடுத்து ஜெயலிதா பிற்பகல் ஆளுநர் மாளிகைக்குச் சென்று ஆளுநர் ரங்கராஜனைச் சந்தித்தார். தமது பதவி விலகலை ஆளுநருக்கு அவர் தெரியப்படுத்தினார்.

அதன் பின்னர் ஆளுநர் மாளிகை வாசலில் வைத்து அவர் செய்தியாளர்களுடன் பேசினார். அப்போது அவர் கூறியதாவது:-

தொடர்ந்து அ.தி.மு.க. அரசுதான இருக்கப் போகிறது. நீதிமன்றத்தில் என்மீதுள்ள வழக்குகளை நான் சந்தித்து, நான் நிரபராதி என்பதை நிரூபித்து, மீண்டும் தேர்தலில் நின்று, சட்டமன்ற உறுப்பினராக வெற்றி பெற்று, மீண்டும் தமிழக ஆட்சிக்கு நானே தலைமையேற்பேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன் - என்றார்.

இதேவேளை, தமிழக முன்னாள் ஆளுநர் பாத்திமா பீவி நேற்று செய்தி நிறுவனம் ஒன்றுக்குப் பேட்டி அளித்தபோது -

தமிழகத்தில் அன்று நிலவிய பல்வேறு சூழ்நிலைகளையும், முக்கிய விடயங்களையும் கவனத்தில் கொண்டுதான் அப்போது நடவடிக்கை எடுத்ததாகத் தெரிவித்துள்ளார். (உ3-7)


# சவூதி அரேபியாவில் வேலை வாய்ப்பு

## சவூதி அரேபியாவில் கீழ்க்காணும் பதவிகளுக்கு உடனடி வேலைவாய்ப்பு

1.Partychief (Land Surveyor)
2.Instrument (Asst. Surveyor)

மூன்று வருடகால ஒப்பந்தம், இலவச தங்குமிடம், தகைமை, சேவை அனுபவ அடிப்படையில் சம்பளம், நாள் ஒன்றுக்கு 10 மணித்தியால வேலை; 6 நாள்களுக்கு, இலவச மருத்துவ வசதி (கண், பல்லு முன்னைய கால நோய் தவிர்ந்த) ஒப்பந்த காலத்தின் பின் விடுமுறை, 1 1/2 மாத (விடுமுறைச் சம்பளம் + போனஸ்)

தகுதி வாய்ந்த விண்ணப்பதாரி தனது சுயவிவரக் கோவையை (சேவை அனுபவமிருப்பின் குறிப்பிடவும்) Fax மூலமாக அனுப்பவும்.

தெரிவுசெய்யப்படுமிடத்து உடனடிப் பயணத்திற்குத் தயாராக வேண்டும்.

மேலதிக் தொடர்புகளுக்கு:-

**MEDINAS PRIVATE LIMITED**

57, Galle Road, Bambalapitiya
Tel: 507871 Fax: 824158
Mobile: 072 - 244785

(C-18354)

### அமெரிக்காவுக்கு ஒத்துழைப்பதை எதிர்த்து

# பாகிஸ்தானில் நேற்று முழுநாள் ஹர்த்தால்

## இயல்பு வாழ்க்கை முற்றாக ஸ்தம்பிதம்

இஸ்லாமாபாத்,செப்.22

ஒஸாமா பின்லேடனைக் கைது செய்யும் அமெரிக்க முயற்சிக்குப் பாகிஸ்தான் ஆதரவு வழங்குவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று பாகிஸ்தானில முழுநாள் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

இஸ்லாமியத் தீவிரவாதிகள் அழைப்புவிடுத்திருந்த இந்த ஹர்த்தாலுக்கு நாடு முழுவதும் இருந்து பெரும் ஆதரவு கிடைத்ததாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடைகள், பாடசாலைகள், வங்கிகள், அரச மற்றும் தனியார் அலுவலகங்கள் அனைத்தும் இழுத்து மூடப்பட்டிருந்தன. போக்குவரத்து முற்றாக நிறுத்தப்பட்டிருந்தது. தெருக்கள் மக்கள் நடமாட்டமின்றி வெறிச்சோடிக்கிடந்தன. இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை முற்று முழுதாக ஸ்தம்பித்துப்போயிருந்தது.

தலைநகர் இஸ்லாமாபாத், கராச்சி, லாகூர் போன்ற முக்கிய இடங்களில் முஸ்லீம் ஆதரவாளர்கள் பலர் ஆர்ப்பாட்டங்களையும் நடத்தினர். ஒஸாமா பின்லேடனின் பெரிய அளவிலான உருவப் படங்களைத் தாங்கியவாறு அவர்கள் பாகிஸ்தான் அரசுக்கு எதிராகக் கோஷங்களை எழுப்பினர்.

சில இடங்களில் ஆர்ப்பாட்டக் காரர்களைக் கலைக்கப் பொலீஸார் தடியடிப் பிரயோகமும் கண்ணீர்ப் புகைக்குண்டு வீச்சும் மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

1999ஆம் ஆண்டு ஜெனரல் முஷாரப் ஆட்சியைக் கைப்பற்றிப் பாகிஸ்தானில் இராணுவ ஆட்சியைப் பிரகடனப்படுத்திய பின்னர் அங்கு அரசுக்கு எதிராக நடத்தப்பட்ட பெரும் மக்கள் போராட்டம் இது என்பது குறிப்பிடத்தக்கது. (ம-6)

## அமெரிக்காவில் நிஜமாகும் திரைப்படக் கதைகள்

நியூயோர்க்,செப்.22

அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட பயங்கரவாதச் செயல்கள் தொடர்பான இரு திரைப்படங்களின் கருப்பொருள்கள், அண்மையில் அமெரிக்காவில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவங்களால் நிதர்சனமாகிவிட்டன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதில் ஒரு திரைப்படம் 'நியூயோர்க் அண்டர் சீஜ்' என்பதாகும். இந்தப்படத்தில் பயங்கரவாதிகள் நியூயோர்க் நகர் மீது தாக்குதல்களை மேற்கொள்வதும் அதனை முறியடிக்க அமெரிக்க அரச படைகள் அழைக்கப்பட்ட விதமும் சித்திரிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி பயணம் செய்யும் 'எயர்போஸ் வண்' என்னும் விமானத்தைத் தாக்கி அழிக்க பயங்கரவாதிகள் மேற்கொள்ளும் முயற்சிகள் 'எயர்போஸ் வண்' என்னும் திரைப்படத்தில் சித்திரிக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாதிகள் அந்த விமானத்தை அழிப்பதற்கு மேற்கொண்ட முயற்சிகள் அனைத்தும் தோல்வியில் முடிவடைய ஜனாதிபதி எவ்வாறு உயிர் பிழைத்தார் என்ற விவரம் அப்படத்தில் சித்திரிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் தனது 'எயர்போஸ் வண்' என்னும் விமானத்தில் சான் அன்றூஸ் விமான நிலையத்திற்கு வந்தபோது அந்த விமானத்தை அழிக்க அண்மையில் நடத்தப்பட்ட தாக்குதல்களின் போது தீவிரவாதிகள் முயற்சிகள் மேற்கொண்டதாகக் கூறப்பட்டது.

எனவே இத்தகைய சம்பவங்கள் திரைப்படங்களின் கருக்கள் நிஜமாகி வருவதையே எடுத்துக்காட்டுவதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.(ம)



ஆப்கானிஸ்தான் மீது எந்தநேரத்திலும் தாக்குதல் நடத்துவதற்குத் தயாராக வளைகுடாப் பகுதியில் நிறுத்திவைக்கப்பட்டிருக்கும் அமெரிக்க விமானந் தாங்கிக் கப்பலில் உத்தரவை எதிர்பார்த்துக் காத்திருக்கும் அமெரிக்க யுத்தவிமானம் ஒன்று.

உள்ளேயுள்ள படத்தில் ஆப்கானிஸ்தான் - தஜிகிஸ்தான் எல்லையில் காவலில் ஈடுபட்டுள்ள ரஷ்யப் படையினரைக் காணலாம்.

# பின்லேடனை அமெரிக்காவிடம் தலிபான் ஒப்படைக்கவேண்டும்

## அதிபர் புஷ் நாடாளுமன்றத்தில் உரை

அமெரிக்கா மீது கடந்த வாரம் நடத்தப்பட்ட தீவிரவாதத் தாக்குதலுக்குக் காரணமான ஒஸாமா பின்லேடனையும் அவரது அமைப்பைச் சேர்ந்த அனைத்து உறுப்பினர்களையும் தலிபான்கள் அமெரிக்காவிடம் ஒப்படைக்கவேண்டும். இல்லையேல் அமெரிக்காவின் கடும் இராணுவ நடவடிக்கைகளுக்கு அந்த நாடு முகங்கொடுக்கவேண்டிவரும்.

இவ்வாறு அமெரிக்க நாடாளுமன்றத்தில் - இறுகிய முகத்துடன் - நேற்று உரையாற்றிய அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ. புஷ் தெரிவித்தார்.

அதிபர் உரையாற்றியபோது, தீவிரவாதத்துக்கு எதிராக அமெரிக்கா கடும் நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்த தருணங்களில் எல்லாம் அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் எழுந்து நின்று கைதட்டி அவரது கருத்துக்களை வரவேற்றனர்.

அமெரிக்காவுக்கு இராஜிய விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ள பிரிட்டிஷ் பிரதமர் ரோனி பிளயரும் அமெரிக்க அதிபர் உரையாற்றிய போது நாடாளுமன்றத்தில் அமர்ந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அதிபர் புஷ் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

நியூயோர்க்கிலும் வாஷிங்ரனிலும் கடந்த 11ஆம் திகதி இடம்பெற்ற தாக்குதல்கள் மூலம் ஏற்பட்ட மனிதப் பேரழிவுக்குக் காரணமானவர்கள் ஒஸாமா பின்லேடனும் அவரது 'அல் கைதா' அமைப்பு உறுப்பினர்களுமே ஆவர்.

எனவே ஆப்கானிஸ்தானில் மறைந்து வாழும் சர்வதேசப் பயங்கரவாதியான ஒஸாமா பின்லேடனையும் அவரது 'அல் கைதா' என்ற தீவிரவாத அமைப்பைச் சேர்ந்த அனைத்து உறுப்பினர்களையும் தலிபான் அரசாங்கம் உடனடியாக அமெரிக்காவிடம் ஒப்படைக்கவேண்டும்.

தலிபான் அரசுக்கு எதிராக அமெரிக்கா நடவடிக்கை எடுக்காதிருக்க வேண்டுமானால், பேச்சுக்களுக்கு இடமில்லாத பின்வரும் நான்கு கோரிக்கைகளை அது நிறைவேற்றவேண்டும்.

★ எல்லாத் தீவிரவாதப் பயிற்சி முகாம்களையும் தலிபான் அரசு உடனே மூடிவிடவேண்டும்.

★ அவை மூடப்பட்டுவிட்டனவா என்பதை உறுதிப்படுத்துவதற்கு அமெரிக்காவுக்கு முழுவாய்ப்பும் அதிகாரமும் தரப்படவேண்டும்.

★ ஆப்கானிஸ்தானில் சட்ட விரோதமாகத் தடுத்துவைக்கப்பட்டுள்ள எல்லா வெளிநாட்டவர்களையும் விடுதலை செய்யவேண்டும்.

★ ஒஸாமா பின்லேடனும் அவரது அமைப்பின் சகல உறுப்பினர்களும் அமெரிக்காவிடம் ஒப்படைக்கப்படவேண்டும்.

இந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றுவதே அமெரிக்காவின் தாக்குதலைத் தவிர்ப்பதற்கான வழி.

தீவிரவாத நடவடிக்கைகளில் இருந்து அமெரிக்க மக்களைப் பாதுகாக்கும் தேசிய வழிமுறைகளை உருவாக்குவதற்காக 'தாயகப் பாதுகாப்பு அமைச்சு' என்ற ஒரு பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. தீவிரவாதத்தை எதிர்த்துப் போராட அமெரிக்கா உறுதி பூண்டுள்ளது. அமெரிக்கா மீதான தாக்குதலுக்கு நாடு, இனம், அல்லது மதத்தின் அடிப்படையில் எவரையும் தனித்துக் குற்றஞ்சாட்ட முடியாது.

ஆனால் தீவிரவாதச் செயலில் ஈடுபட்டவர்கள் நீதியின் முன் நிறுத்தப்படுவர். அரசியல், பொருளாதாரம், இராணுவம் என்ற அனைத்து ரீதியாகவும் உலகத் தீவிரவாதத்தை ஒழிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

அமெரிக்கா செயற்படவேண்டிய நேரம் வந்துவிட்டது. நீண்டதொரு போருக்கு அமெரிக்க வீரர்களைத் தயாராக இருக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

தீவிரவாதிகளுக்குப் புகலிடம் வழங்கும் நாடுகளை எச்சரிக்க அமெரிக்கா விரும்புகின்றது. உலக நாடுகள் இந்தக் கட்டத்தில் அமெரிக்காவின் பக்கமா, தீவிரவாதிகளின் பக்கமா என்பதைத் தீர்மானிக்க வேண்டியது அவசியம்.

தீவிரவாதிகளுக்கு தஞ்சம் அளித்து, உதவி புரிந்து, ஊக்குவிக்கும் நாடுகளை அமெரிக்கா தனது எதிரிகளாகக் கருதும்.

தீவிரவாதிகளின் தாக்குதலில் சிதைந்துபோன நியூயோர்க் நகரம் மீண்டும் உருவாக்கப்படும் - என்றார். (ம)

### பின்லேடனை ஒப்படைக்க தலிபான் மறுப்பு

இஸ்லாமாபாத்,செப்.22

ஒஸாமா பின்லேடனை ஆப்கானிஸ்தான் அமெரிக்காவிடம் ஒப்படைக்காது - என்று தலிபான் அரசு மீண்டும் திட்டவட்டமாகக் கூறிவிட்டது.

இஸ்லாமாபாத்தில் உள்ள தலிபான் தூதுவர் இத்தகவலை நேற்று வெளியிட்டார். (ம)

# படையினர் - தீவிரவாதிகள் மோதலில் பிலிப்பைன்ஸில் 10 பொதுமக்கள் பலி!

தென் பிலிப்பைன்ஸில் அரச படையினருக்கும் முன்னாள் தீவிரவாதிகளுக்கும் இடையில் இடம்பெற்ற மோதல்களின் இடையில் சிக்கி 10 பொதுமக்கள் உயிரிழந்தனர்; மேலும் 3 படையினரும் 30 பொதுமக்களும் காயமடைந்துள்ளனர்.

தென் பிலிப்பைன்ஸின் மொராவ் பகுதியில் படையினர் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது அவர்கள் மீது துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகவும் -

அதனைத் தொடர்ந்தே இந்த மோதல்கள் ஆரம்பமானதாகவும் - தெரிவிக்கப்படுகிறது.

மோதல்களில் 70க்கும் மேற்பட்ட தீவிரவாதிகளும் 180 படையினரும் ஈடுபட்டதாக அரசதரப்புச் செய்தி ஒன்று தெரிவித்தது.

தென் பிலிப்பைன்ஸில் கிளர்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டுவந்த எம்.எல்.எம். தீவிரவாத அமைப்புடன் 1996இல் அரசாங்கம் சமாதான ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொண்டது. இதனையடுத்து தீவிரவாதிகள் தமது

### உலக அரங்கில்

ஆயுதங்களை ஒப்படைத்துவிட்டு சகஜ வாழ்வுக்குத் திரும்பி இருந்தனர்.

எனினும் சில தீவிரவாதிகள் தங்கள் ஆயுதங்களுடன் அப்போது தலைமறைவாகி இருந்தனர். அவர்களே தற்போதைய மோதல்களுக்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது. (ம-10)

# மத்தியகிழக்கில் மீண்டும் வன்முறை

ஜெருஸலேம்,செப்.22

மத்திய கிழக்கில் கடந்த ஒருசில நாள்களாக யுத்தநிறுத்தம் கடைப்பிடிக்கப்பட்டுவரும் வேளையில் மேற்குக்கரையில் மீண்டும் ஒரு வன்முறைச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

மேற்குக்கரையின் பெத்தலகேம் நகரில் இஸ்ரேலியப் பெண் ஒருவரை பலஸ்தீனர் ஒருவர் சுட்டுக் கொன்றுள்ளார்.

காரில் அமர்ந்திருந்த அவரையும் அவரது கணவரையும் நோக்கி பலஸ்தீனர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாக இஸ்ரேலியப் பொலீஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் குறித்துக் கருத்துத் தெரிவித்த இஸ்ரேலிய அதிகாரி ஒருவர் -

"பலஸ்தீனர்களின் தாக்குதல் போர் நிறுத்தம் குறித்து வழங்கிய உறுதிமொழிகளை, வாக்குறுதிகளை மீறிவிட்டார்கள்" - என்றார்.

இதேவேளை -

போர் நிறுத்தத்தை மேலும் உறுதிப்படுத்தும் நோக்குடன் இஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சர் ஷிமோன் பெரஸும் பலஸ்தீனத் தலைவர் யஸர் அரபாத்தும் சந்தித்துப் பேசியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ம-10)

# மத்திய ஆசியாவில் அமெ.படைகள் நிலைகொள்ள அனுமதிக்காதீர்கள்!

## ரஷ்யா கடும் தொனியில் ஆலோசனை

மொஸ்கோ,செப்.22

மத்திய ஆசியாவில் அமெரிக்கப் படைகள் நிலைகொள்வதற்கு அனுமதிக்க வேண்டாம் - என்று ரஷ்யா மத்திய ஆசிய நாடுகளுக்கு - குறிப்பாக ஆப்கானிஸ்தானின் எல்லையில் உள்ள நாடுகளுக்கு - கடுமையான தொனியில் ஆலோசனை வழங்கி உள்ளது.

ஆப்கானிஸ்தான்மீது தாக்குதல் நடத்தத் தனது விமானத் தளங்களையும் இராணுவத் தளங்களையும் பயன்படுத்த தஜிகிஸ்தானும் உஸ்பெகிஸ்தானும் அனுமதி வழங்குவதாக அறிவித்ததைத் தொடர்ந்து ரஷ்யா மேற்படி கடும் தொனியிலான ஆலோசனையை மத்திய ஆசிய நாடுகளுக்கு வழங்கியுள்ளது.

உஸ்பெகிஸ்தானுக்கு விஜயம் மேற்கொண்ட ரஷ்ய ஆயுதப் படைகளின் தளபதி ஜெனரல் அனடொனி உஸ்பெகிஸ்தான் தலைவர்களுக்கு இந்த ஆலோசனையை நேரில் வழங்கினார்.

தற்போதைய நிலை குறித்து உஸ்பெகிஸ்தான் தலைவர்களுடன் விரிவாக ஆராய்ந்த ரஷ்யத் தளபதி-

"அமெரிக்கா மேற்கொள்ளும் படை நடவடிக்கைகளில் ஒருபோதும் ரஷ்யா சேர்ந்துகொள்ளாது. எதிர்காலத்தில் அதில் பங்குபற்றும் திட்டங்கள் எவையும் கூட எம்மிடம் இல்லை" - என்று தெரிவித்ததாகக் கூறப்படுகிறது. (ம)

# உலாமாக்களின் முடிவை அமெரிக்கா நிராகரிப்பு

நியூயோர்க்,செப்.22

ஒஸாமா பின்லேடன் தாமாகவே ஆப்கானிஸ்தானை விட்டு வெளியேறிவிடவேண்டும் என்று அந்த நாட்டின் உலாமாக்கள் தெரிவித்த ஆலோசனையை அமெரிக்கா நிராகரித்துவிட்டது.

பின்லேடனையும் அவரது அமைப்பைச் சேர்ந்த முக்கிய உறுப்பினர்களையும் அமெரிக்காவின் பொறுப்புள்ள அதிகாரிகளிடம் ஒப்படைக்க வேண்டும் எனவும் அது தெரிவித்துள்ளது.

"ஆப்கானிஸ்தானின் மதத் தலைவர்கள் எடுத்துள்ள முடிவு அமெரிக்காவின் விருப்பத்தை நிறைவேற்றவில்லை. ஆப்கானிஸ்தானிடம் இருந்து நாம் ஆலோசனைகளை அல்ல நடவடிக்கைகளையே எதிர்பார்க்கின்றோம்" - என்று வெள்ளை மாளிகை அதிகாரியான ஏரிபெரஷர் தெரிவித்தார். (ம-10)

### வடமராட்சிக் கல்வி வலயத்திலிருந்து

# இறுதியாகத் தெரிவு செய்யப்பட்ட 35 தொண்டர் ஆசிரியர்கள்

வடமராட்சிகிழக்கு, செப். 22

வடமராட்சி கல்வி வலயத்திலிருந்துஇறுதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள 35 தொண்டர் ஆசிரியர்களின் பெயர் விவரங்கள் வடக்கு—கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளரினால் வெளியிடப்பட்டுள்ளன.

அண்மையில் தொண்டர் ஆசிரியர்களுக்கு நடைபெற்ற நேர்முகப் பரீட்சையில் 31-12-1998 ஆம் ஆண்டுக்கு முன்னர் பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றியவர்களில் தெரிவானோரின் பெயர் விவரங்களே இதில் அடங்கியுள்ளன.

இவ்வாறு தெரிவாகியுள்ளவர்கள் சம்பந்தமான ஆட்சேபனைகளையோ அல்லது இக்காலப் பகுதியில் கடமையாற்றியும், பெயர்கள் இடம்பெறாமை பற்றிய முறையீடுகளையோ எதிர்வரும் 31 ஆம்திகதிக்கு முன்னர் எழுத்து மூலம் தகுந்த காரணங்களுடன் சமர்ப்பிக்கும்படி அறிவிக்கப்பட்டுள்ளது.

தெரிவாகியுள்ளோரின் விவரத்தை வடமராட்சி வலயக் கல்வித் திணைக்கள விளம்பரப் பலகையில் பார்வையிடலாம். (க-182)

## 3 ஆம் ஆண்டு நினைவலைகள்



### அமரர் மதியாபரணம் மகேசன்

(ரேவதி ஜுவல்லறி)

தோற்றம் 27-01-1959 மறைவு 27-09-1998

திதி: 22-09-2001

அன்பின் உறைவிடமே! எம்
குடும்பத்தின் ஒளி விளக்கே!
துன்பம் சூழ்ந்த போதும் - எம்மை
கலங்காமல் காத்த தெய்வமே!
கண்களுக்குள் கனவாகி எம்
உயிருக்குள் உறைந்துவிட்ட தெய்வமே!
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

தாய், சகோதரர்கள்,
மனைவி.

வளாக வீதி,
திருநெல்வேலி

(92545)

## மரண அறிவித்தல்

### திருமதி மாணிக்கவாசகர் மகேஸ்வரி

சங்கானையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட, மாணிக்கவாசகர் மகேஸ்வரி அவர்கள் நேற்று (21-09-2001) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கவாசகரின் அன்பு மனைவியும், சறோஜினிதேவி (கனடா), காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் விஜயகுமார் (செல்வராசா ஸ்ரோஸ், உடுவில்), காலஞ்சென்ற மல்லிகாதேவி, மற்றும் கமலாதேவி, சுசிலாதேவி, சிவகுமாரி (கொழும்பு), சிவசுந்தரமூர்த்தி (கனடா), ஜெயக்குமாரி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் இரத்தினபாலசிங்கம் (கனடா), புஸ்பரதி (கொழும்பு), நாகேஸ்வரி, தியாகராஜா, காலஞ்சென்ற தருமராசா, மற்றும் பாலசுப்பிரமணியம், யோகேஸ்வரன் (கொழும்பு), பாலசரஸ்வதி (கனடா), தெய்வேந்திரம் (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், கிரிஜா, குணசீலன் (கனடா), ரஜீதா, சுதாகர், அஜந்தா, லக்ஸன், தியக்ஸன், தினேஸ், சுஜனேஸ், அனித்தா, தனுஷன், சிந்துஜா, ஜானுஜா, சிவாஜன், ஆரணி, நிராஜினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22-09-2001) சனிக்கிழமை காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கராச்சி இந்து மாயானத்திற்கு எடுத்துச செல்லப்படும்.

தகவல்:
மா. விஜயகுமார் (மகன்)

சேச் றோட்,
சங்கானை.

(92553)

### யாழ். பல்கலைக்கழக

# பட்டப்பின் கல்வி டிப்ளோமா பரீட்சை முடிவுகள் வெளியாகின

யாழ்ப்பாணம், செப். 22

யாழ். பல்கலைக் கழகத்தில் பகுதிநேரமாகவும் முழுநேரமாகவும் பட்டப்பின் கல்வி டிப்ளோமா கற்கை நெறியை மேற்கொண்டவர்களின் பரீட்சை முடிவுகள் நேற்று வெளியிடப்பட்டன:

அதன்படி,முழுநேரக்கற்கை நெறியை (2001) மேற்கொண்ட மாணவர்களில், இரட்ணம் ஜெயசீலன் என்பவர் பேராசிரியர் பி. சந்திரசேகரம் ஞாபகார்த்த தங்கப் பதக்கத்தைப் பெறுகிறார்.

முழுநேரக் கற்கை நெறியில் சித்தியடைந்த ஏனையோரின் பெயர் விவரம் வருமாறு:-

★ விசேட சித்தி-: ஆர். ஜெயசீலன், திருமதி எஸ். செபமாலைதாசன்.

★ திறமைச்சித்தி-: ஏ. அன்ரனிப்பிள்ளை, திருமதி எஸ். நேசகுமார், கே. இராஜதுரை, திருமதி ஆர். உதயரட்ணம்.

★ சாதாரண சித்தி:- திருமதி எம். அருள்நேசன், என். கிருபாகரன், கே. பாஸ்கரன், திருமதி ரி. திருச்செல்வம், வி. விக்கினேஸ்வரன், ஏ. விமலேந்திரன்.

பகுதிநேரக் கற்கை நெறியில் (1999) சித்தியடைந்தோர் விவரம் வருமாறு:-

★ விசேட சித்தி-: ஏ. ஆனந்தராசா, எம். ஆனந்தராசா, செல்வி கே. ஆறுமுகம், எஸ். மனோகரன், செல்வி வி. நாகேஸ்வரசர்மா, செல்வி எம். பரமேஸ்வரநாதன், வி. ஆர். ராஜ்குமார் —

ஜி. இரட்ணசிங்கம், கே. சண்முகநாதன், கே. சரவணபவன், திருமதி கே. சிவாஜி, எம். சிவபாதம், செல்வி எஸ். சிவராஜா, செல்வி வீ. சுப்பிரமணியம்.

★ திறமைச் சித்தி;-திருமதி எம். பகீரதன், செல்வி வி. குணரட்ணம், வி.ஜெயராசா, செல்வி எஸ், கனகலிங்கம், செல்வி எஸ். கந்தையா, செல்வி யு. கந்தையா, திருமதி பி.கந்தசாமி, வி. கருணாநிதி —

எஸ். கிருபானந்தன், கே. கிருஷ்ணகுமார், ரி. கிரிதரன், என்.மனோரஞ்சிதன் எஸ். ரவிச்சந்திரன், பி. சற்குணநாதன், கே சிவகுமார், திருமதி எம். சிவகுமார், திருமதி வி. ஸ்ரீவடிவேலு, செல்வி ஆர். தர்மலிங்கம், ரி. தயாளன்,கே.தெட்சணாமூர்த்தி.

★ சாதாரண சித்தி:- திருமதி வி. அரவிந்தன், கே. ஆர். பி. அருளானந்தம், ரி. அருணகிரிராஜா, வி.சந்திரதேவன், வி.சந்திரசேகர், கே. ஈஸ்வரன், எஸ். இளங்கீரன், ஆர், ஞானேஸ்வரன் ஆர். ஜெயரட்ணசிங்கம்— திருமதி ஜெ. ஜெயதரன், செல்வி ஜி. கமலநாதன். திருமதி ஜி. கமலேந்திரன், திருமேதி கே, கபிலன், செல்வி ஜே கார்த்திகேசு, திருமதி எஸ். கருணாகரன், திருமதி வி. கதிரேசபிள்ளை, திருமதி பி. லிங்கசபேசன்—

திருமதி ஆர். லோகநாதன், திருமதி ஆர். லோகேஸ்ரவன், செல்வி வி. மீனாட்சிசுந்தரம், செல்வி. மேரி அனற் மிராண்டா, வி. எம். முத்துராஜா. ஆர். நாகேந்திரன், ஆர் நித்தியகுமார், எஸ், பரமேஸ்வரன், திருமதி எஸ். பரம்சோதி, செல்வி கே. பொன்னம்பலம்—

எம். பிரபாகரன். ஏ. பிரபானந்தன், திருமதி ஐ. இராமச்சந்திரா, எஸ். இராமநாதன், திருமதி எஸ். ரட்ணேஸ்வரன், திருமதி வி. ரவீந்திரன், என், சபாரட்ணசிங்க, திருமதி ஆர். சகாயசீலன்—

கே. சத்தியதாசன், திருமதி ஜே. சற்குணரட்ணம் கே. செபநேசன், எம். செல்வச்சந்திரன், கே. சிவகரன், செல்வி எல். ஏ. எஸ். சிவலிங்கம், ஆர். சிவசங்கர், எஸ். சோமசுந்தரம்—

கே. ஸ்ரீநந்தகோபன், ஆர். ஸ்ரீதரன், பி. ஸ்ரீவிக்கினேஸ்வரன், செல்வி ஏ. சுந்தரம், எஸ். சுந்தரலிங்கம், திருமதி ஏ. தனபாலசிங்கம், திருமதி ஆர். தயானந்தன், ஐ. தேவராஜா, ஜி. திருமாலழகன், எஸ். தியாகலிங்கம், கே. வாகீசன், திருமதி கே. விஜயகுமார், ஆர். ஏ. சேவியர்தாசன்

(ஐ-ரி-10)

## சமய சந்நிதிகளில்

அரியாலை, செப் .22

கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலயத்தில் பூரட்டாதி சனிப்பிரதோச விரதம் அனுஷ்டிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்தனர்.

இதனை ஒட்டி இன்று சனிக்கிழமையும் தொடர்ந்துவரும் சனிக்கிழமைகளிலும் மேற்படி ஆலயத்தில் பக்தர்கள் சென்று எல்லெண்ணெய் எரித்து விரதங்களை அனுஷ்டிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(ஐ-17)

★ ★ ★

கோண்டாவில் முத்தட்டிமடம் ஸ்ரீ ஞானவைரவர் கோயிலில் அலங்கார உற்சவத்தின் இரதோற்சவம் இன்று நடைபெறவுள்ளது.

(ஐ)

★ ★ ★

மருதனார்மடத்தில் அமைந்துள்ள ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேய சுவாமி கோயிலில் புரட்டாதிச் சனிக்கிழமையையொட்டி இன்று சனிக்கிழமை சனீஸ்வர தோஷ சாந்தி ஹோம பூசைகள் காலை 6 மணிக்கும் 7 மணிக்கும் முற்பகல் 11 மணிக்கும் சனீஸ்வரபகவானுக்கு அபிஷேகம் ஹோமம் 12 மணிக்கு பூசையும் இடம்பெறவுள்ளன.

(க-86)

## விளையாட்டு நிகழ்வுகள்

வலிகாமம் வலய சண்டிலிப்பாய் கல்விக் கோட்டத்திற்கு உட்பட்ட பாடசாலை அணிகளுக்கு இடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் கலந்துகொள்ளும் அணிகளின் விவரம் வருமாறு:-

### 16 வயதுப் பிரிவு

★ மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை எதிர் மானிப்பாய் இந்துக் கல்லூரி.

### 18 வயதுப் பிரிவு

★ பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி எதிர் மானிப்பாய் இந்துக் கல்லூரி.

(க-86-152)

★ ★ ★

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழகம் நடத்தி வரும்— 7 பேர் பங்குபற்றும்— உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் நவாலி அட்டகிரி விளையாட்டு மைதானத்தில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறவுள்ள மூன்றாம் இடத்திற்கான ஆட்டங்களில் கலந்துகொள்ளும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ அராலி சில்வஸ்ரார் வி. க. எதிர் சுழிபுரம் விக்ரோரியன்ஸ் வி. க.

★ குப்பிளான் ஞானகலா வி. க. எதிர் கொக்குவில் ஐக்கிய வி. க,

(க-86)

★ ★ ★

சர்வதேச சிறுவர் தினத்தையொட்டி யுனிசெவ் நிறுவனத்தின் ஆதரவில் சுகவாழ்வு நிலையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விளையாட்டுப் போட்டிகள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் சுகவாழ்வு நிலையத் தலைவர் வண.பிதா சூ.டேமியன் அடிகளார் தலைமையில் இடம்பெறவுள்ளன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யுனிசெவ் திட்ட இணைப்பாளர் செல்வி இலிநோரா ராஸ்கோவும் கௌரவ விருந்தினராக யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் து. வைத்திலிங்கமும் சிறப்பு விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக உளநலத்துறைப் பேராசிரியர் தயா சோமசுந்தரமும் ஆங்கிலக் கன்னியர் மடபாடசாலை அதிபர் சகோதரி எம். யோலன்ட், வடபிராந்திய போக்குவரத்துச் சபை பொது முகாமையாளர் எஸ். மணிவாசகன், சாந்திகம் உளவளத்துணை நிலையச் செயலாளர் எஸ். ரவீந்திரன், சமூக உளநல திட்ட இணைப்பாளர் ஆர். சந்திரசேகர சர்மா ஆகியோரும் கலந்துகொள்வர்.

(க-86)

★ ★ ★

சங்கானை உருத்திரா முன்பள்ளியினர் நடத்தும் விளையாட்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு உருத்திரா சனசமூக நிலையத்திற்கு அருகில் தலைவர் ச. பகீரதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி-மேற்கு பிரதேசசபைத் தலைவர் ந. திரிலோகநாதனும், சிறப்பு விருந்தினர்களாக வலி.மேற்கு பிரதேச செயலர் க. குணராசா, சிறுவர் ஆசிரியர் பயிற்சி நிலைய இயக்குநர் திருமதி பொன்மலர் இராஜேஸ்வரன் ஆகியோர் கலந்துகொள்வர்.

(க-29)

## ஷெல் வீச்சால் மக்கள் பீதி

அரியாலை, செப். 22

பாலையூர் இராணுவ முகாமில் இருந்து இராணுவத்தினர் நேற்று முன்தினம் காலை தொடக்கம் மாலை வரை விட்டுவிட்டு ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர்.

இந்த ஷெல் தாக்குதல் பூநகரி, கல்முனைப் பகுதிகளை நோக்கி மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஷெல் தாக்குதலால் கரையோரப் பகுதி மக்கள் பீதியடைந்து காணப்பட்டனர்.

(ஐ-17)

உதயன்

## ஜி.எல்.பீரிஸும் லக்ஷ்மன் கதிர்காமரும்

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசில் முன்னர் முக்கிய அமைச்சராகவும் பிரமுகராகவும் இருந்த பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் இப்போது அமைச்சர் பதவியை இராஜினாமாச் செய்துவிட்டு வெறும் நாடாளுமன்ற உறுப்பினராகப் பணிபுரிகின்றார்.

பெருங்கல்விமானான அவர், கொழும்புப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பதவியைத் தூக்கி எறிந்துவிட்டு அரசியலுக்கு வந்தவர். ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, அரசியலில் முன்பின் பழக்கமில்லாத - ஆனால் தமக்கு மிக நெருக்கமாகத் தெரிந்த - ஒரு சிலரை, தாம் பிரதமரானபோதே தமது அமைச்சரவையில் சேர்த்துக்கொண்டார். அந்த வரிசையில் ஜீ.எல்.பீரிஸுக்கு முக்கிய இடமுண்டு. இந்த வரிசையில் அடுத்தவர் லக்ஷ்மன் கதிர்காமர்.

இப்படித் தனக்கு நெருக்கமானவர்களை - அவர்கள் முன்பின் அரசியலில் ஈடுபடாமல் இருந்திருந்தாலும் கூட, அவர்களின் திறமை கருதி, ஜனாதிபதி அமைச்சராக்கியமை வியப்புக்குரியதாக அமையவில்லை.

1994இல் பிரதமராகவும், அடுத்த ஆண்டில் ஜனாதிபதியாகவும் சந்திரிகா பதவியேற்றபோது அவரின் முன்னால் முக்கிய விவகாரமாக இருந்தது இனப் பரச்சினைதான். அதற்குத் தீர்வு காணப் போவதாகச் சூளுரைத்துத்தான் அவர் அப்போது பெருவெற்றிகளை ஈட்டி ஆட்சிப்பீடத்தைக் கைப்பற்றினார்.

இனப்பிரச்சினையைத் தீர்க்கும் விவகாரத்தில் அவருக்கு உதவவேண்டிய முக்கிய துறைகள் இரண்டு இருந்தன. ஒன்று - இனப்பிரச்சினைக்கு முன்வைக்கப்படும் தீர்வை, நடைமுறைப்படுத்தக் கூடியதான அரசமைப்புமாற்றத்தை ஏற்படுத்துதல். மற்றையது - அது தொடர்பான விடயங்களை சர்வதேச மட்டத்தில் எடுத்துரைத்து, சமாளித்து, வெளிநாட்டு இணக்கத்தையும், உதவிகளையும் பெற்றுக்கொடுத்தல்.

இந்த இரண்டு விடயங்களில் ஒன்றைக் கையாளும் பொறுப்பு ஜீ.எல்.பீரிஸிடமும் மற்றையதைக் கையாளும் பொறுப்பு லக்ஷ்மன் கதிர்காமரிடமும் கொடுக்கப்பட்டன.

இவர்களில் ஒருவர் சிங்களவர்; மற்றையவர் தமிழர்.

சிங்களவரான ஜீ.எல்.பீரிஸ் இப்போது அமைச்சரவையில் இல்லை. தாம் அமைச்சர் பதவியிலிருந்து விலகியமை குறித்து விளக்குவதற்காக, கண்டி மல்வத்தை பௌத்த பீடாதிபதியை அவர் அண்மையில் சந்தித்தார். அப்போது அவர் கூறிய கருத்துக்கள் முக்கியமானவை.

"பட்டம் பதவிகளை விட தன்மானமே முக்கயம். பதவிகளைப் பெற்றுக்கொள்வதைவிட தன்மானத்தைப் பாதுகாப்பதே சாலச்சிறந்தது.

"அரசியல் அதிகாரம் என்பது மக்களுக்குச் சேவை செய்வதே. எதையும் செய்துவிட்டு அதிகாரத்தில் இருப்பது என்பது எனது கொள்கையல்ல."

- இப்படி அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் கூறியிருப்பதை சிங்களத் தலைவர்கள், அமைச்சர்கள் மட்டுமல்லாமல் தமிழர்களும் புரிந்துகொள்ளவேண்டும்.

ஜீ.எல்.பீரிஸும், லக்ஷ்மன் கதிர்காமரும் - தேர்தலில் மக்களைச் சந்திக்காமலேயே - ஜனாதிபதியின் கடைக்கண் பார்வை கிட்டியதால் - தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்ற உறுப்பினராகி, அமைச்சர் பதவிகளைப் பிடித்துக்கொண்டவர்கள்.

ஆனால், அடுத்த பொதுத் தேர்தலிலேயே ஜீ.எல்.பீரிஸ், மக்களைச் சந்தித்து, மிக அதிகமான விருப்பு வாக்குகளைப் பெற்று, தமது மக்கள் பிரதிநிதித்துவத்தை நிரூபித்துக்கொண்டார்.

ஆனால் அமைச்சரவையில் தமிழர் பிரதிநிதி என்ற பெயரோடு 1994ஆம் ஆண்டைய அமைச்சரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட கதிர்காமர், இன்று வரை மக்களைச் சந்திக்காமல் - தமிழர் என்றாலும் தமிழர்களால் கூட அங்கீகரிக்கப்பட முடியாத நிலையில் - 'பின்கதவால்' நாடாளுமன்றத்துக்குள் புகும் பாதையைத் தொடர்ந்து பின்பற்றி - தனது பதவியைத் தக்க வைத்துக் கொண்டிருக்கின்றார்.

"பட்டம், பதவிகளை விட தன்மானமே முக்கியம்" என்று பேராசிரியர் பீரிஸ் கூறும் கருத்து - உணர்வு - அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமருக்கும் சற்றுப் பிறக்கவேண்டும் என்பதே தமிழர்கள் பலரினதும் பிரார்த்தனையாகும்.

தன்மானத்தில் முக்கியமானது இனமானம். அதை உணர்வுபூர்வமாகப் புரிந்துகொண்டு அவர் செயற்படுவாரேயானால் உரிமைக்காகப் போராடும் தமிழினம் அவரைப் போற்றும்; இல்லையேல் தூற்றும்.

இது அவருக்கு மட்டுமல்ல, அனைத்துத் தமிழர் தலைவர்களுக்குமே பொருத்தமானதுதான்!

## இங்கிலீசு வாத்தியார் சொன்ன 'வீத்திறி' கதை

உடுவில் தம்பையா குலசிங்கம் என்றால் தெரியாதவர்களுக்கும் 'இங்கிலீசு வாத்தியார்' என்றால் பட்டென்று தெரிந்துவிடும். ரேட்டை உள்ளுக்கு விட்டு வேட்டி கட்டியிருப்பாரே.... அவரைத்தான் குறிப்பிடுகிறேன். அவர்தான் எங்களுக்கு ஆரம்பப் பாடசாலையில் ஆங்கில ஆசிரியராக இருந்தவர். பின்னர் இளைப்பாறி இருந்த காலத்தில் 'ஷெல்' பட்டுக் காலமாகிவிட்டார். அவர் அப்பொழுதெல்லாம் அடிக்கடி சொல்லும் கதை இப்பொழுது நினைவில் நிற்கிறது....

ஏறக்குறைய சம வயதுடைய மூன்று நண்பர்கள் ஆங்கிலத்தின் அவசியத்தை உணர்ந்து அதனைப் படிக்கவேண்டும் என ஆசைப்பட்டனர். தக்க ஆசிரியர் ஒருவரை அணுகித் தம் ஆசையை வெளியிட்டனர். ஆசிரியரும் அதற்கு உடன்பட்டு அவர்களுக்கு ஆங்கிலம் கற்பிக்க தொடங்கினார். ஆனால் ஆங்கிலம் செய்த பாவமோ அல்லது அவர்கள் செய்த பாவமோ தெரியவில்லை அவர்களின் வாயில் ஆங்கிலம் நுழைவதாகத் தெரியவில்லை. கடைசியில் ஆளுக்கு இரண்டொரு ஆங்கிலச் சொற்களை மட்டும் அறிமுகப்படுத்திவிட்டு அவைகளை மனப்பாடம் செய்யும்படி பணித்துவிட்டு ஆசிரியர் தப்பினால் போதும் என்று போய்விட்டார்.


முதலாவது ஆளுக்கு அவர் சொல்லிக் கொடுத்தது 'வீத்திறி' (நாம் மூவர்) என்பது இரண்டாவது ஆளுக்கு 'போர் ரென் ருபீஸ்' (பத்து ரூபாவுக்காக) என்பது மூன்றாவது ஆளுக்கு அதுகூடச் சிரமமாக இருக்கும் என்பதால் 'யேஸ் யேஸ்' (ஆம், ஆம்) என்பது.

மூவரும் நாளிரவும் பொழுதிலாமாக மனப்பாடம் செய்து ஒருவாறாக மேற்படி வார்த்தைகளைப் பேசக் கற்றுக்கொண்டுவிட்டனர்.

இப்படி இருக்கும்போது ஒரு தெருவோரத்தில் அடிபட்டு மயங்கிக் கிடந்த ஒருவரை இந்த இணைபிரியாத நண்பர்கள் வேடிக்கை பார்த்துக்கொண்டு, 'ஆங்கிலத்தில்' சிந்தித்துக்கொண்டு இருந்தனர். பொலீஸார் ஜீப்பில் வந்து குதிக்கிறார்கள்.

பொலீஸ் அதிகாரி இவர்களை அணுகி "இது யார் செய்த வேலையாக இருக்கும்?" என ஆங்கிலத்தில் கேட்கிறார். அதற்கு முதலாவது ஆள் 'வீத்திறி' என ஆங்கிலத்திலேயே பதிலளிக்கிறார்.

துப்பு அவ்வளவு விரைவில் துலங்குவதைக் கண்டு மகிழ்ந்த பொலீஸ் அதிகாரி மீண்டும் ஆங்கிலத்தில் "எதற்காக அப்படிச் செய்தீர்கள்?" என்று கேட்கிறார். இரண்டாவது ஆளும் ஆங்கிலத்தில் களைத்தவரா என்ன? அவர் "போர் ரென் ருபீஸ்" என்கிறார்.



'போயும் போயும் பத்து ரூபாவுக்காக இப்படியும் செய்வதா?' என்ற கேள்விக் குறியுடன் பொலீஸ் அதிகாரி "அப்படியானால் நீங்கள் குற்றத்தை ஒப்புக்கொள்கிறீர்கள். அப்படித்தானே?" என்கிறார். மூன்றாவது ஆளும் ஆங்கிலத்தில்தான் 'யேஸ், யேஸ்' என்கிறார்.

மூவரும் விலங்கு மாட்டப்பட்டு ஜீப்பில் ஏற்றப்பட்டனர்.

- இதுதான் இங்கிலீசு வாத்தியார் சொன்ன கதை. இதை வைத்துக்கொண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட சில சொற்கள் - சொற்றொடர்களை வைத்துக்கொண்டு சமாளிக்க முடியாது என்று நான் சொல்ல வரவில்லை. என் போன்றவர்கள் சில சிங்களச் சொற்களை வைத்துக்கொண்டு கொழும்பில் காலந்தள்ளவில்லையா? எதற்கும் பொருத்தமான வார்த்தைகளை பொருத்தமான இடங்களில் பயன்படுத்தும் விவேகம் இருக்க வேண்டும். தவறினால் 'வீத்திறி' கதைபோல விபரீதம்தான் ஏற்படும்.

நமது ஸ்ரீதரசிங் அவர்கள் தமது தந்தையார் பூபாலசிங்கம் பற்றிக் குறிப்பிடுகையில் அவரைச் சோவியத் யூனியனுக்கு அனுப்பி வைப்பதற்காக அவருடன் ரயிலில் பயணம் செய்தாராம். அப்பொழுது உடன் வந்த ஒரு 'புரொக்டர்' கொழும்பு சேரும்வரை ஆங்கிலத்தில் கொட்டோ கொட்டு என்று கொட்டியதும் 'யேஸ் நோ' என்ற இரண்டு சொற்களையும் வைத்துக் தமது தந்தையார் அவரைச் சமாளித்ததையும் வியந்து சொல்லியிருக்கிறார்.

எனது நண்பரொருவர், அவருக்கு ஆங்கிலம் புரிந்துகொள்ளும் அளவுக்குப் பேசவராது. இருந்தாலும் யாராவது ஆங்கிலத்தில் முழங்கும்போது இவர் இடையிடையே மட்டும் பொருத்தமான இடங்களில் 'உண்மைதான்' (oh... really) 'அப்படித்தான்' (of course) போன்ற கனதியான வார்த்தைகளைப் பாவிப்பதைப் பார்த்தால்... ஆங்கிலத்தில் அவர் ஒரு வின்னன் என்றுதான் சொல்லத் தோன்றும்.

இதென்ன பிரமாதம் நமது யுவதிகள் "ஹலோ ஹாய்" என்ற வார்த்தைகளை வைத்தே இமாய்த்துவிடுகிறார்களே... (ஹாய் என்பது யார் கண்டுபிடித்த ஆங்கிலமோ?)

ஆங்கிலப் பாவனை நம்மைவிட்டுப் போய்விடும் - சிங்கள மக்கள் இணைப்பு மொழியாக ஆங்கிலத்தை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்றிருந்தோம். கொம்பியூட்டரின் வருகையும், பாதுகாப்புப் படையினரின் வருகையும் இக்கருத்தை மாற்றிவருகிறது போலத் தெரிகிறது. தனிச் சிங்களத்தில் செய்து வந்த பணிகளைக்கூட ஆங்கிலத்தில்தான் செய்தாகவேண்டும் என்ற கட்டாயத்தைக் கொம்பியூட்டர்கள் உருவாக்கி வருகின்றன. 'கொம்பியூட்டர் படிக்கப் போகிறோம்' - 'ஆங்கில வகுப்புக்குப் போகிறோம்' என்று சொல்வோர்களின் தொகை அதிகரித்துவருகிறது.

அதேபோல இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளின் இணைப்பு மொழியாகவும் ஆங்கிலம் மாறிவிட்டது. அவர்களுக்குக் 'கொஞ்சம் போல'த்தான் தமிழ் தெரியும். எம்மவர்களுக்கு 'டிக்க டிக்கத்'தான் சிங்களம் தெரியும். அதனால் பயண விண்ணப்பம் முதல் முன்னுரிமைக் கடிதம், குடும்பப் பதிவு, பொலீஸ் முறைப்பாடு, சத்தியக்கடதாசி எல்லாவற்றுக்குமே ஆங்கிலத்தை விட்டால் வேறு வழியில்லை.

இந்த மாற்றங்கள் எல்லாம் தமிழ் மட்டுமே தெரிந்த சில கிராம அதிகாரிகள் போன்றவர்களுக்கு மட்டும் பெரும் விலங்காக இருந்து வருகிறதாம். அவர்களும் சில ஆங்கில வார்த்தைகளை மட்டுமே வைத்துக்கொண்டு 'காலட்சேபம்' நடத்தி வருவதாகத் தெரிகிறது. எனக்குள்ள கவலையெல்லாம் அவர்களில் யாரும் 'வீத்திறி' கதைபோல நடந்துகொள்ளக் கூடாது என்பதுதான்.

- சண் அங்கிள்.

## கனடாவில் நூல் வெளியீடு

காரைநகர்.செப்.22

மூதறிஞர் பண்டிதர் க.வைத்தீசுவரக் குருக்கள் சமயத்துக்கும் தமிழுக்கும் செய்த சேவையைக் கௌரவித்து அவருடைய 85ஆவது அகவை நிறைவு நாளான இன்று சனிக்கிழமை கனடாவில் நூல் வெளியீடு ஒன்று இடம்பெறவுள்ளது.

இதேவேளை -

கனடாவில் வசிக்கும் காரைநகர் மக்களால் மாதந்தோறும் வெளியிடப்படும் 'அன்பு நெறி' சஞ்சிகையின் செப்ரெம்பர் மாத இதழ் மூதறிஞரின் 85ஆவது அகவை சிறப்பு மலராக வெளிவருகிறது என்றும் -

இதில் இலங்கை இந்தியப் பேராசிரியர்களின் இருபதுக்கு மேற்பட்ட கட்டுரைகளும் அடங்கி உள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (க-73)

### நாளை

புரட்டாதி 07
ஞாயிற்றுக்கிழமை
திதி: ஷஷ்டி
முற்பகல் 7.36 வரை.
நட்சத்திரம் : கேட்டை
வைகறை 5.59 வரை.
சுபநேரம்: 9.02 - 10.32
ராகுகாலம் : 4.32 - 6.02
(பழைய நேரப்படி)

### ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்

தென்மராட்சி.செப்.22

பளைப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் 24ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு புலோலியில் இயங்கும் பிரதேச செயலகத்தில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-117)

### உதயவாக்கு

ஒரு தோழனைப் பெற்றுப் பேணுவதற்கு மூன்று விடயங்கள் தேவை. அவனை முன்னிலையில் கௌரவிப்பது, அவனில்லாத பொழுது புகழ்வது, அவனுடைய தேவைகளில் உதவுவது.

## நாட்டு நடப்பு

போச்சடா! எல்லாம் போச்சடா!!
கங்கைகள் தமிழ்நெஞ்சம் போல
கடுமையாய் வறண்டு போச்சு
நங்கையர் விடும் வெப்பமூச்சால்
நாடெல்லாம் வறட்சி ஆச்சு
எங்கனும் இருளே சூழ்ந்து நிற்க
ஏதுமே அறியாமலாச்சு
சங்க நல்நூல்கள் சாற்றும்
சரிதமும் மறந்தே பேச்சு
பொங்கிடும் இனமதபேதம் தன்னை
போக்கிடாது ஆட்சி போச்சு
வங்கக் கடலில் புயலும் போச்சு
வான மா மழையும் போச்சு!

- விகடகவி.

## கரவெட்டி பிரதேச செயலக பிரிவுக்கு தனியான கால்நடை நிலையம்

வடமராட்சி.செப்.22

வடமராட்சி தெற்கு மேற்கு (கரவெட்டி) பிரதேச செயலர் பிரிவுக்கென தனியான அரசினர் கால்நடை வைத்திய நிலையம் ஒன்று வடக்கு - கிழக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தினால் உருவாக்கப்பட்டுள்ளது.

இவ்வைத்திய நிலையத்துக்கான கால்நடை வைத்திய அதிகாரியாக டாக்டர் திருமதி புனிதம் தங்கராசா மீள் நியமனம் பெற்றுள்ளார்.

பருத்தித்துறை அரசினர் கால்நடை வைத்திய அலுவலகத்தின் உப அலுவலகம் செயற்பட்டுவரும் நவிண்டிலில் கரவெட்டி பிரதேச செயலகப் பிரிவுக்கான அரசினர் கால்நடை வைத்திய நிலையம் தற்போது இயங்கிவருகிறது.

மிகவிரைவில் புதிய இடத்தில் கரவெட்டிப் பகுதிக்கான அரசினர் கால்நடை வைத்திய நிலையம் இயங்கும் என கரவெட்டி அரசினர் கால்நடை வைத்திய அதிகாரி டாக்டர் திருமதி புனிதம் தங்கராசா தெரிவித்தார். (ஜ-173)

### உயிரியல், விவசாய விஞ்ஞான கற்கைநெறி

## வெற்றிடம் நிரப்பும் பட்டியல் மூலம் தெரிவான மாணவர் விவரம்

யாழ்ப்பாணம்,செப்.22

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 2001 - 2002 கல்வியாண்டுக்கான உயிரியல் விஞ்ஞான கற்கை நெறி. விவசாய விஞ்ஞானக் கற்கை நெறி ஆகியவற்றுக்கு வெற்றிடம் நிரப்பும் பட்டியல் - 01 இன் மூலம் தெரிவாகியுள்ளவர்களின் விவரங்கள் அவ்வப்பீடங்களின் பீடாதிபதி காரியாலய விளம்பரப் பலகையில் இடப்பட்டுள்ளன.

இவ்வெற்றிடம் நிரப்பும் பட்டியல் மூலம் உயிரியல் விஞ்ஞானக் கற்கை நெறிக்கு 26 பேரும் -

விவசாய விஞ்ஞானக் கற்கை நெறிக்கு 19 பேரும் தெரிவாகியுள்ளனர்.

இவர்கள் அடுத்த மாதம் 5ஆம் திகதிக்கு முன்பாகத் தமது பதிவுகளை மேற்கொள்ள வேண்டுமென பதிவாளர் அறிவித்துள்ளார். (ஜ-ரி)

### ஆய்வுகூட தொழிலநுட்பவியலாளர் நியமனம்

யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வு கூடத்தில் நிலவும் ஆய்வு கூட தொழில்நுட்பவியலாளர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யுமுகமாக, பயிற்சி பெற்று வெளியேறியவர்களில் ஒருவர் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த வாரம் முதல் இவர் தம் பணியை ஆரம்பித்துள்ளார்.

இதேவேளை மேலும் இருவர் இந்தப் பதவிக்கு நியமிக்கப்படவுள்ளதாக ஆய்வுகூட வட்டாரத்தில் இருந்து தெரியவருகிறது. (க-15)

### முன்பள்ளிகளின் பாடத்திட்டம் பற்றி கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், செப்.22

யாழ்.மாவட்டத்திலுள்ள முன்பள்ளி ஆசிரியர்களுக்கு முறையான பயிற்சி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நோக்கில் அமைக்கப்படவுள்ள முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சி மூலவள நிலையத்துக்காக பாடத்திட்டம் ஒன்றை உருவாக்குவதற்கான கலந்துரையாடல் ஒன்று நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 2மணிக்கு யாழ் சென்ஜோன்ஸ் தேவாலய சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் கல்வித்திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரிகள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மற்றும் கல்வி சார் அறிஞர்கள் பலர் கலந்துகொள்வர். (க-9-ரி)


கண்ணிகள் காத்திருக்கின்றன, கவனம்!

சிறுவர்கள் அளப்பரிய செல்வங்கள்..
யுத்தத்தால் அழிந்து சிதைந்துள்ள...
கண்ணிவெடிகள் நிறைந்த பிரதேசம்
அவர்களுக்கு எப்போதும் ஆபத்தானது!





# காரைநகர் ஈழத்து...
## மூதறிஞர் பண்டிதர் சிவத்திரு க...
# 85ஆவது அகவை மங்கல ந...

## சமுதாயத்தைப் பற்றிய சோகம் கொண்டவர்

சிவத்திரு கவைத்தீஸ்வரக் குருக்கள் நமது நாட்டில் இன்று வாழ்ந்து கொண்டிருக்கும் மூதறிஞர்களில் ஒருவர். அவர் எமது சமுதாயத்தின் இன்றைய நிலையைக் கண்டு உண்மையாகவே வேதனைப்படுபவர். ஆசார சீலராக விளங்கும் வைத்தீஸ்வரக் குருக்கள் பரந்த அரசியல் ஞானமும் சமூகப்பிரதிக்ஞையும் கொண்டவர்.

சிவத்திரு வைத்தீஸ்வரக் குருக்களின் புலமை ஆழ்ந்தடங்கியது. தனது வித்துவப் பெருமையையோ வரலாற்று அறிவையோ அவர் ஒரு பொழுதும் வெளிக்காட்ட விரும்புவதில்லை. சாதாரண அர்ச்சகராக மிகுந்த அடக்கத்தோடும் பக்தியோடும் தர்மநிஷ்டையோடும் வாழ்ந்து வருகின்றார். பிராமணர்க்கே உரித்தான கட்டுப்பாடான வாழ்க்கையினால் இந்த வயதிலும் நல்ல ஆரோக்கியத்துடன் இருக்கின்றார். எந்த வயதிலும் ஒருவன் சம்பூரணமான வாழ்வு வாழலாம் என்பதற்கு இவர் வாழ்க்கை முறை ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.

தமிழ் மக்கள் அனைவரினதும் கபீட்சத்திலும் முன்னேற்றத்திலும் ஆழ்ந்த கரிசனை கொண்டவர் குருக்கள். தந்தை செல்வாவின் தீர்க்க தரிசன பார்வையையும் அரசியல் நேர்மையையும் வியந்து போற்றுபவர். இவருடைய சோகமெல்லாம் சமுதாயத்தைப் பற்றிய சோகமே ஆகும். இதனை கம்பீரமான சோகம் (Majestic Grief) என்றும் அனைத்து மக்களுக்குமான சோகம் (Universal Grief) என்றும் குறிப்பிடுவார்கள். அக்கிரகாரத்தில் பிறந்த இந்த அந்தணர் தமது கோயில் குளம் பூசை என்று அடங்கிவிடாமல் சமுதாயத்தை குறித்து சிந்திப்பது புரிப்பை ஏற்படுத்துகின்றது. பெருந்தகை வாராவைப் பற்றி அறிஞர் அண்ணா பின்வருமாறு எழுதினார்.

*"இவர் பாலைவனத்தின் இடையிலுள்ள சோலை அக்கிரகாரத்தில் உதித்த அதிசயப் பிறவி! ஆனால் நாட்டா அவசியப் பிறவி என்று போற்றினேது"*

சிவத்திரு வைத்தீஸ்வரக் குருக்கள் யாழ்ப்பாணத்தில் வாராவைப் போல பெருந்தொகையான நூல்களையும் கட்டுரைகளையும் எழுதாமல் விட்டாலும் இவரும் சிறியன சிந்தியாதவர், உயர்ந்த இலட்சியங்களுக்காக வாழ்ந்து கொண்டிருப்பவர்.

எஸ்.ஜெயநேசன்
தென்னிந்தியத் திருச்சபை ஆயர்
வட்டுக்கோட்டை.

## ஆயிரம் பிறைகண்டு வாழ்க!

1979ஆம் ஆண்டு மார்கழித்திங்கள் ஈழத்தமிழ் மக்களோடு நான் மனங் கலந்து பழகி உறவாடிய இனிய காலம்.

இலங்கையில் யாழ்ப்பாணத்தை ஒட்டியுள்ள ஈழத்துச் சிதம்பரம் எனப் போற்றப்பெறும் காரைநகர் மணிவாசகர் சபை என்னைத் திருவாசக விழாவிற்கு அழைத்துப் பேசச் செய்து பெருமைப்படுத்தியது.

காரைநகர் மணிவாசகர் சபையின் அடித்தளமாகவும், அச்சபை நன்கு இயங்குவதற்கு வழிகாட்டியாகவும் விளங்கிவரும் திரு.கவைத்தீஸ்வரக் குருக்களின் நட்பு எனக்குக் கிடைத்தது. அவர் என்னை வரவேற்றுப் போற்றியதோடு நாடோறும் தமது இல்லத்தில் உணவருந்தி இன்புறுத்தினார். திரு.வைத்தீஸ்வரக் குருக்கள் இனிய பண்பாளர் ஆன்றவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோராய்த் திகழ்பவர். புலமை நலம் மிக்கவர். சான்றாண்மைக்கு ஆழியாய் விளங்குபவர்.

குருக்கள் அவர்கள் என்னை உபசரித்துப் போற்றியதோடு இலங்கைத் தமிழ் நாளேடுகளில் என் பேச்சை வெளியிடச் செய்தும் ஈழத்து மக்களுக்கு என்னை 'சைவப் பெரியார்' என அறிமுகப்படுத்தியும் பல இடங்கட்கும் அழைத்துச் சென்று பேசச் செய்தும் பெருமை சேர்த்தார். அரிய பல நூல்களை எனக்கு அன்பளிப்புக்களாகத் தந்துதவினார்.

அவர் ஆயிரம் ஆயிரம் பிறைகாண் விழாவைத் தொடர்ந்து நூற்றாண்டு விழா முதலிய அனைத்துச் சிறப்புக்களையும் எய்தி உடல் நலத்தோடு இனிது வாழ ஈழத்துச் சிதம்பரேசன் இன்னருள் புரியப் பிரார்த்திக்கின்றேன்.

தமிழாகரர்வித்துவான், திரு.வீ.சா.குருசாமி தேசிகர், எம்.ஏ.,
குருமபுரம்.

## தன் மனதை நயந்து வியக்கும் விழா

*தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்*
*தோன்றலின் தோன்றாமை நன்று* - என்பது திருவள்ளுவரின் திருவாக்கு.

இறைவன் நமக்கு இச்சரீரத்தைக் கொடுத்தது நாம் தன்னை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம் - என்பது நாவலரின் நல்வாக்கு.

வாழும் வரை புகழுடன் வாழ்வதும் வாழ்க்கையின் முடிவில் முத்திப் பேற்றை அடைவதும் சைவச் சான்றோர் பலரின் இலட்சியமாக இருந்து வந்துள்ளன.

தன்னைப் பிறர் பாராட்ட வேண்டும், புகழ்ந்துரைக்கவேண்டும் என்ற விருப்பு – எதிர்பார்ப்பு - ஏதோ ஓர் அளவிலே ஒவ்வொருவரிடமும் இருக்கின்றது ; சிலரிடம் வெளிப்படையாகவும் சிலரிடம் அடங்கியும் இருக்கின்றது!

உயர் பதவி, பெருஞ்செல்வம், ஆடம்பர வாழ்க்கை போன்றவை தமக்குப் புகழைத் தரும் எனச் சிலர் கருதுகின்றனர். பணத்தைப் பகிரங்கமாக வாரி வாரி வழங்குவதன் மூலம் 'வள்ளல்' என்ற பாராட்டிற்கு உரியவராகலாம் என்பது சிலரின் நம்பிக்கை. தம்மைத் தாமே விளம்பரப்படுத்துவது தம் புகழைப் பெருக்குவதாகச் சிலருக்குத் தெரிகின்றது ; கௌரவப் பட்டங்கள் பாராட்டு விழாக்கள் போன்றவை புகழை அதிகரிக்கும் சாதனங்களாகச் சிலருக்குத் தோன்றுகின்றன.

"புகழ்" என இவர்கள் கருதுவது, இலக்கியம் கூறும் "புகழி"லிருந்து பெரிதும் வேறுபட்டது!

மதிப்பிற்குரியவர், மகத்தானவர், தன்னலமற்றவர், பணியும் பண்பும் நிறைந்த சாதனையாளர் எனப் பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுப் பாராட்டப்படும் சிறப்பே "புகழ்" ஆகும்; உள்ளத்தாற் பொய்யாதொழுகி உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் உளனாகும் சிறப்பு, உண்மை, தூய்மை, நேர்மை முதலாம் நற்பண்புகளை அடித்தளமாகக் கொண்டது.

இலக்கண முனிவர் வித்துவ சிரோமணி சி.கணேசையர், யாழ்ப்பாணத்து ஆன்மீகச் செம்மல் யோகர்சுவாமிகள், தென்கோவை பண்டிதர், தமிழ் வித்தகர் ச.கந்தையாபிள்ளை ஆகியோரை ஆதர்சமாகக்கொண்டு ஆன்றவிந்தடங்கிய சான்றோனாக வாழ்ந்துவரும் சிவத்திரு கவைத்தீஸ்வரக் குருக்கள் அவர்களுக்கு இப்போது எடுக்கப்படும் விழா, 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற குறிக்கோளுடன் வாழும் ஒருவரின் நன்மனத்தை நயந்து வியக்கும் விழாவாக, யாருக்கு, யார், எவ்வாறு, எங்கே விழா எடுக்க வேண்டும் என்பதற்கு இலக்கணம் வகுக்கும் விழாவாக, அல்லும் பகலும் அநவரதமும் தன்னைத் துதிக்கும் ஓர் அணுக்கத் தொண்டருக்கு காரைநகரிலிருந்து பல நூறு மைல்களுக்கு அப்பாலுள்ள கனடாவில் வாழும் சைவத் தமிழ் அன்பர்களின் மனதுட் புகுந்து நின்று ஈழத்துச் சிதம்பரேஸ்வரன் நடத்துவிக்கும் விழாவாக அமைவதும் சிறப்புக்குரியது!

சி.சிவசரவணபவன் M.A.
(சிற்பி)

## மனிதருள் மாணிக்கம்

*கரிய மாலினும் கண்ணுதலானினும்*
*உரிய தாமரைமேல் உறைவானினும்*
*விரியும் பூ தம் ஓர் ஐந்தினும் மேல்னினும்*
*பெரியர் அந்தணர் பேணுதி உள்ளத்தால்*

மும்மூர்த்திகளிலும், உலகத் தோற்றத்திற்குக் காரணமான பஞ்ச பூதங்களிலும் சிறந்தவர் அந்தணர்கள் என்பது கவிச்சக்கரவர்த்தி கம்பனின் பதிவு. வாய்மை, ஒழுக்கம், கருணை, ஒப்புரவு நிரம்பிய மறையவர்கள் இருப்பதால்த்தான் மழையே பொழிகின்றது.

*வேதம் ஓதும் வேதியர்க்கோர் மழை*
*நீதி நின்றிடும் மன்னவர்க்கோர் மழை*
*மங்கை மாதர் கற்பினுக்கோர் மழை*

என்று திங்கள் மும்மாரி பெய்து வையகம் வளம் சிறக்கும் சம்பந்தக் குழந்தையும்

*வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்*
*வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக*
*ஆழ்க தீயதெல் லாம் அரன் நாமமே*
*சூழ்க வையகமுந் துயர் தீர்க்கவே.*

வையகம் துயர்தீர வைதிகர் வாழ வேண்டும் என்று உறுதி படக் கூறுகின்றது.

சிவஸ்ரீ குருக்கள் அவர்களது ஆழ்ந்த புலமை பாராட்டப்படவேண்டியது. பழைய நூல்களில் அவர் கொண்டிருக்கும் ஈடுபாடுபோற்றத்தக்கது. காரைநகர் தமிழ்வளர்ச்சிக் கழகத்தின் ஆணிவேராக விளங்கியவர் சிவத்திருக் குருக்கள் அவர்கள். ஈழத்துச் சிதம்பர புராணத்தை பண்டித இளமுருகனார், பண்டிதை பரமேஸ்வரி ஆகிய இருவராலும் ஆக்கமும் உரை விளக்கமும் செவ்விக்கப்பெற்று அச்சேற்றி உகாவாச் செய்த பெருமை குருக்கள் அவர்களையே சாரும். அதே போல இருபாலை சேனாதிராச முதலியாரின் மாணவரும், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் காலத்தவருமான திரு. கார்த்திகேயப் புலவர் எழுதிய திண்ணபுர அந்தாதிக்குத் தக்காரைக் கொண்டு உரை விளக்கம் காணவேண்டும் என்ற பேராவல் உந்த தருமையாதீன வித்துவான் செஞ்சொற்கொண்டல் தமிழாகரர் திருமுறைமாமணி- அமரர் டாக்டர் திரு. சொ. சிங்காரவேலன் அவர்களைக்கொண்டு ஆழ்ந்து அகன்ற செவ்விய உரை விளக்கத்தை வெளியிட்ட அரிய முயற்சியாளர். தெய்வப் பணியல்லாது வேறுபணியறியாத் தன்மையாளர். தூய அன்பினால் அனைவரையும் வசமாக்கும் பெரியார் பல்லாண்டு பல்லாண்டு சிறந்து வாழ்ந்து தமிழிற்கும், சைவத்திற்கும் மேலும் பல ஆக்கப் பணிகளைப் புரிந்து வாழ ஸ்ரீ சௌந்திரநாயகி உடனுறை ஸ்ரீ சுந்தரேஸ்வரப் பெருமான் திருவருள் பாலிக்க இறைஞ்சி வணங்குகின்றேன்.

நலமே நிறைக!!!

வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன் ஜே.பி.

## குன்றின் மேல் இட்ட விளக்கு

*"முப்பொழுதும் திருமேனி தீண்டுவார்க்கு அடியேன்"* என வணங்கி மகிழ்வார் சுந்தரர். இவ்வரிய பேற்றிற்கு இலக்காக இருப்பவர்கள் சிவத்திரு கவைத்தீஸ்வரக் குருக்கள் ஐயா அவர்கள் ஆவார். எளியேன்செய்த சிவபுண்ணியத்தால் பல ஆண்டுகளுக்கு முன் காரைநகரில் அவர்களைக்கண்டு மகிழும் பேறுடையன் ஆனேன். அவர்கள் அதுபொழுது காட்டிய அன்பும், வழங்கிய இன்சொற்களும் என்றும் என் நெஞ்சில் நீங்கா நினைவுகளாய் உள்ளன.

இவர்களின் சைவப் பணியும் தமிழ்ப் பணியும் எண்ணிப்போற்றி மகிழ்தற்குரியனவாம். காரைநகர் மணிவாசகர் சபை, காரைநகர் தமிழ் வளர்ச்சிக் கழகம் ஆகிய இரு அமைப்புக்களும் இவர்களால் நிறுவப்பெற்றனவாகும். இவற்றின் பணிகள் குன்றின்மேல் இட்ட விளக்கென விளங்கி நிற்கின்றன.

அறன் அறிந்த மூத்த அறிவுடைய பெருந்தகையாராகிய நம் ஐயா அவர்கட்கு எண்பத்தைந்து ஆண்டுகள் நிறைவுபெற உள்ளது. ஆண்டுகள் நிரம்பினும் ஐயா அவர்களின் திருவுள்ளம் என்றும் இளையதாய் அழகியதாய் இறைத் தொண்டாற்றி வரும் பாங்குடையதாய் நிலவி வரும். அவ்வகைப் பணி நம் சமயத்திற்கும் தமிழுக்கும் தொடர்ந்தும் அடர்ந்தும் நம்மனோரை உவப்பிக்கும் பாங்குடையதாகும் என்பது ஒருதலை.

உறுவது சீற்றின் செல்வம் எனக்கொள்ளும் உள்ளமும், பெறுவது சிவன்பால் அன்பாம் பேறு எனக்கருதி வாழும் பெற்றிமையும் உடைய ஐயா அவர்கள் பல்லாண்டு காலம் பயின்று அரனை அர்ச்சித்து வாழ இறைவனை இறைஞ்சுகின்றேன்.

*"மன்றுளார் அடியார் அவர் வான்புகழ்*
*நின்றது எங்கும் நிலவி உலகெலாம்"*

பேராசிரியர் டாக்டர் கு.சுந்தரமூர்த்தி எம்.ஏ.,பிஎச்டி.,
(முன்னாள் முதல்வர், கே.வி.எஸ்.என். கலைக்கல்லூரி, திருப்பனந்தாள்)
சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனம்,
தருமபுரம், மயிலாடுதுறை - 609001.

## பயன் கருதா பணியாளர்

என்றும் நலத்துடன் இனிதே வாழ்க!

காரைநகர் தந்த நவப்புதல்வர்களுள் ஒருவராக விளங்கும் மூதறிஞர் பண்டிதர் சிவஸ்ரீ கவைத்தீஸ்வரக் குருக்கள் அவர்களுக்கு எண்பத்தைந்தாவது அகவை நிறைவு பெறுவதோடு சதாபிஷேக வைபவத்தை காணும்பேறு கிடைத்துள்ளதையிட்டு சைவ உலகம் பூரிப்படைகின்றது. சைவத்திற்கும் தமிழுக்கும் தன் வாழ்நாளை அர்ப்பணித்து வரும் நல்லறிஞராக விளங்குபவர் சிவஸ்ரீ குருக்களாவர். அன்பு, எளிமை, அடக்கம், கல்வி, ஒழுக்கம், குடிப்பிறப்பு, வாய்மை, தூய்மை, அழுக்காறு இன்மை, அவாவின்மை ஆகிய நற்பண்புகளுக்கு உறைவிடமாக விளங்கும் அந்தணச் செம்மல் சிவஸ்ரீ குருக்களாவர். மனிதநேயப் பண்புகளாகிய அன்புடைமை, பண்புடைமை, அடக்குடைமை, ஒழுக்கமுடைமை, அறிவுடைமை ஆகியவற்றைத் தமது செல்வமாகக் கொண்டு வாழ்ந்து வருபவர். எமது சைவப் பாரம்பரியத்துக்கும் சிவாச்சாரிய பாரம்பரியத்திற்கும் நல்லதொரு இலக்கணமாகத் திகழ்பவர். பிறர் நலன் பேணும் பண்பும் பிறருக்கு உதவும் பண்பும் உடைய சீர்மையாளர். சிறந்தவொரு சிவாச்சாரிய பாரம்பரியத்தில் வந்த சிவாச்சாரியார். ஆற்றல்மிகு நல்லாசானாகப் பணியாற்றிய பின் நமது மூதாதையர் காட்டியவழி சைவசமய வளர்ச்சிக்கு உதவும் வகையில் பல்வேறு நிறுவனங்களில் பணியாற்றியது மட்டுமன்றி பல நூல்களை இயற்றியும், பதிப்பித்தும் அரும்பணியாற்றி வருபவர். காரைநகர் தமிழ் வளர்ச்சிக் கழகம், காரைநகர் மணிவாசகர் சபை ஆகியவற்றின் ஸ்தாபகராக விளங்கி இவ்விரு நிறுவனங்களும் சிறந்த வளர்ச்சியடைய ஊக்க சக்தியாக விளங்கி வருபவர்.

சிவஸ்ரீ குருக்களுடைய பயன் கருதாத இத்தகைய அரிய பணிகளினாலும் குண நலன்களினாலும் ஈர்க்கப்பட்ட காரைநகர் அன்பு நெஞ்சங்களும் வெளிநாடுகளில் வாழும் அன்பு நெஞ்சங்களும் இவரை கௌரவிக்க முன்வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. குறிப்பாக கனடாவில் உள்ள சைவசமய மன்றத்தினர் 'அன்பு நெறி' இதழை சிவஸ்ரீ குருக்களின் சிறப்பு இதழாக வெளியிடவும் அவர் பற்றிய நூலினை வெளியிடவும் விழா எடுக்கவும் முயற்சி எடுத்துள்ளதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். இத்தகைய அரிய முயற்சி அனைவரது பாராட்டுக்குரியதாகும். காரைநகர் சைவ அறிஞர் வரிசையில் தனக்கென ஓர் இடத்தை வகுத்துக்கொண்ட சிவஸ்ரீ குருக்கள் அவர்கள் நல்ல தேககசுகத்துடன் பல்லாண்டு காலம் இனிதே வாழ எல்லாம் வல்ல ஸ்ரீ சௌந்தராம்பிகா சமேத சுந்தரேஸ்வரர் பெருமானினதும் ஐயனாரினதும் திருவருள் பொலிவதாகுக! மேலும் சைவப் பாரம்பரியம் மேன்மையுற இப்பெருந்தகை எடுக்கும் முயற்சிகள் அனைத்தும் இறைவன் திருவருளால் வெற்றிபெற வேண்டுமென அவருடைய எண்பத்தைந்தாவது அகவை நிறைவு பெறும் இந்நன்னாளில் வாழ்த்துவதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றோம்.

பேராசிரியர் கலாநிதி ப.கோபாலகிருஷ்ண ஐயர்,
தலைவர், இந்துநாகரிகத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.



(அ...
சிவஞ...
வைத்...
தவர்...
சைவம்...
நமா...
நாடி...
உவ...
ஏற்...

## முதறிஞர் வாழ்நா...

| | |
|---|---|
| பிறப்பு | - 1916-09-22 |
| தந்தையார் | - சிவஸ்ரீ ச.கணபதீஸ்வரக்குருக்கள் (ஈழ... |
| தாயார் | - க.சிவயோகசுந்தராம்பாள். |
| ஆரம்பக்கல்வி | - காரைநகர் சுப்பிரமணிய வித்தியாசாலை... |
| உயர்கல்வி | - வளவெட்டி அருணோதயா கல்லூரி. |
| சமஸ்கிருதக்கல்வி | - பி.வி.சிதம்பரசாஸ்திரி அவர்களிடம். |
| பண்டிதர்க் கல்வி | - மகாவித்துவான் சி.கணேசையர் அவர்... |
| ஆசிரிய பயிற்சி | - திருநெல்வேலி ஆசிரிய பயிற்சிக் கலாசா... |
| ஆசிரிய சேவை | - 1940ல் - கொழும்பு விவேகானந்தக் க... |
| ஆசிரிய சேவையில் ஓய்வு | - 1979. |
| நிறுவிய அமைப்புகள்:- | 1. காரைநகர் மணிவாச... |
| | 2. காரைநகர் தமிழ் வள... |
| எழுதிய நூல்கள் | - ஈழத்துச் சிதம்பர புராணச் சுருக்கம்,... தொடர் மொழிக்கு ஒரு சொல்,க.பொ.... |
| மலராசிரியர் பணி | 1.மணிவாசக சபையாரின் திருவ... |
| | 2. காரைநகர் சைவ மகாசபை... |
| | 3. காரைநகர் மணிவாசகர் சபை... |
| | 4. வியாவில் ஐயனார் கோயில் கு... |
| பதிப்பாசிரியர் | - ஈழத்துச் சிதம்பர புராணம், திருவ... திக்கை அந்தாதிநல்லூரம்... நாவலர் பிள்ளைத் தமிழ், அரு... விநாயகர்... விநாயகர்த்தொகை... |
| விருதுகள் | - 1995 இலங்கை கம்பன் கழகம் - ... கௌரவித்தது, ஈழத்துச் சிதம்ப... விருதுச் சான்றிதழ் இலங்கை... |

## அருளாசிச் ...

அன்புசால் பெருந்தகையீர்!

தனித்துவமான ஆலயமான ஈழத்துச் சிதம்பரத்தில் குருவாய் விளங்கிய சி... சிவஸ்ரீ வைத்தீஸ்வரக் குருக்கள் அடக்கம், அறிவு, பண்பு, சீலம், செந்நெறியாளர... வாழ்பவர். அவரது சேவை காரைநகர் மக்களுக்கு மட்டுமின்றி அனைத்து மக்களு... உரிய ஆறு கடமைகளைக் கொண்டு எளிமைக்கு உரியவராக வாழ்ந்து வழிகாட்... எல்லோரையும் சிந்தித்து செயற்பட வைக்கின்றது. ஈழத்துச் சிதம்பரம் ... உழைத்துக்கொண்டிருக்கும் குருக்கள் பல நூல்களை வெளியிட்டு நாம் தாமுஞ்சிய... வாழ வழி சமைப்பது மனநிறைவைத் தருகின்றது. இவரது பணி தொடர்வத... பணியைக் கௌரவிக்கும் காரைநகர் மணிவாசகர் சபையை வாழ்த்துகின்றோம். சி... இறைவன் ஆசீர்வதிக்கப் பிரார்த்திக்கின்றோம்.

வாழ்க வளமுடன்
"என்றும் வேண்டும் இன்ப அன்பு..."

(C/18339) ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானச...


**ஈஸ்வரன் ரேடஸ்**
(மிதிவண்டி - மிதிவண்டி உதிரிப்பாக விற்பனையாளர்கள்.)
இல. 69, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**குகன் ஸ்ரோர்ஸ்**
180 (380), ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

**மலர் வெளி...**
**காரைநகர் மணிவ...**

**கணேசன் ஸ்ரோஸ்**
201, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

**சீமாட்டி புடவைக் கடல்**
122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

**சிவகணேசன் ஸ்ரோஸ்**
41, பெரியகடை, யாழ்ப்பாணம்.

**இ. ச. பேரம்ப...**
இல.50, 52, ... யா...

**வெங்கடேஸ்வரா**
125A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**அற்புதா ரேடிங் கொம்பனி**
198, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

**மகாராணி**
50, பெரியகடை, யாழ்ப்பாணம்.

**க.கு.கந்தையாபிள்ளை**
களபூமி, காரைநகர்.

**பாரத...**
சாவ...

# ஈழத்துச் சிதம்பரம்
## சிவஸ்ரீ க.வைத்தீஸ்வரக் குருக்களின்
# ...ல் நல்வாழ்த்துச் சிறப்புமலர் 22-09-2001



(அறுசீர்க் கழி நெடில் விருத்தம்)
சிவாநுவார் இன்பநிதி மலைவளர்ந்து
வைத்தீச செம்மால் நீயும்
தவம்மலிந்த செந்தமிழின் கடல்குடித்தாய்
சைவம்தேர்ந்(து) ஏய்ப்பு விட்டு
நவமாகப் பண்டிதராய் நல்வரிசை
நாடுநினை வரவும் கண்டாய்
உவமையிலா ஆசானே உத்தமனே
சற்குருவே வாழி வாழி

வேறு

எண் சீர்க்கழி நெடிலடி விருத்தம்
மறைமிகுக்க வரம்பாகி நின்றாய் வாழி
மாண்புடையார் தலைவன் நீ வாழிவாழி
இறைதாளும் நற்புகழ்ச்சி இல்லாய் வாழி
இருள்பொறையின் கொள்கலமே வாழிவாழி
குறைவிடற்கறும் அன்னவருள் காப்ப வாழி
காசினியில் புகழ்நாட்டாய் வாழிவாழி
துறைபோய் தீதறிந்த வாழிவாழி
திருநிறைவே வைத்தீச வாழிவாழி.

காரைநகர் மணிவாசகர் சபையினர்.

## ...ர் வாழ்நாளில்.........

...தீஸ்வரக்குருக்கள் (ஈழத்துச் சிதம்பர பிரதம சிவாச்சாரியார்)
...தராம்பாள்.
...பிரமணிய வித்தியாசாலை.
...கேணாதயாக் கல்லூரி.
...ஸ்திரி அவர்களிடம்.
...சி.கணேசையர் அவர்களிடம்.
...ஆசிரிய பயிற்சிக் கலாசாலை,
...ம்பு விவேகானந்தக் கல்லூரி ஆரம்பம்.
... 1970.
...காரைநகர் மணிவாசகர் சபை (1940)
...காரைநகர் தமிழ் வளர்ச்சிக் கழகம் (1950)
...ர புராணத் தருக்கம், காரைநகரில் சைவ சமய வளர்ச்சி,
...கு ஒரு சொல், க.பொ.த. மாணவர்களுக்கான தமிழ் பயிற்சி நூல்கள்.
...சக சபையினரின் திருவாதிரை மலர்கள் (5)
...நகர் சைவ மகாசபை - பொன்விழா மலர்
...நகர் மணிவாசகர் சபை - பொன்விழா மலர்
...ல் ஐயனார் கோயில் கும்பாபிஷேக மலர் (அச்சில்)
...தம்பர புராணம், திருமுறைப் பெருமை, திண்ணபுர அந்தாதி,
...ந்தைதிருவள்ளுர் ...கையுரையும் நாவலர் பெருமானும்.
...பிள்ளைத் தமிழ், அருள்நெறித்திரட்டு, கௌரீகை...
...ச்சம், வீணைத்தொகை.
...ம்கை கம்பன் கழகம் - "நிறைவிழா" என்னும் விருது அளித்து
...தது, ஈழத்துச் சிதம்பர புராணமும் பதிப்புக்குரிய சிறப்பு
...சான்றிதழ் இலங்கை அரசால் வழங்கப்பட்டது.

# ...சிச் செய்தி

...தின் குருவாக விளங்கிய சிவஸ்ரீ கணபதீஸ்வரக் குருக்களின் மகனாகிய ...ன்பு, சீலம், சொற்திறமை, நேர்மை அனைத்துக்கும் எடுத்துக்காட்டாக ...டுமின்றி அனைத்து மக்களுக்கும் பயனுடையதாகின்றது. அந்தணருக்கு ...ரியவராக வாழ்ந்து வழிகாட்டிக் கொண்டிருக்கும் இவருடைய வாழ்க்கை ...து. ஈழத்துச் சிதம்பரம் ஆலயத்தில் வளர்ச்சிக்கு பல்லாண்டுகளாக ...வெளியிட்டு நூல் களஞ்சியங்களை உருவாக்கி எல்லோரையும் நன்மனிதராக ... இவரது பணி தொடர்வதற்கு இறைவனை வேண்டுகின்றோம். இவரது ...பணியை வாழ்த்துகின்றோம். சிவஸ்ரீ வைத்தீஸ்வரக்குருக்கள் குடும்பத்தினரை

...வாழ்க வளமுடன்.
...ம் வேண்டும் இன்ப அன்பு"

2ஆவது குருமஹா சந்நிதானம்.
...தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய ஸ்வாமிகள்.


...வெளியீடு:
...ணிவாசகர் சபை

ச. பேரம்பலம் சக நிறுவனம்
இல.50, 52, 54, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பாரதி பதிப்பகம்
காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.


## துர்க்கா துரந்தரியின் ஆசி!

*"அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும்*
*செந்தண்மை பூண்டொழுகலான்"*

- என்று பாடியருளினார் வள்ளுவப் பெருமான். அறப்பணியிலும் ஆன்மீகப் பணியிலும் சிவனை நினைந்து உருகும் சிந்தையிலும் தன்னிகரில்லாதவர் குருக்கள் ஐயா அவர்கள். இப் பெரியாருடைய காலத்திலே ஈழத்துச் சிதம்பரம் ஓங்கி உயர்ந்து மிளிர்கிறது என்பது முற்றிலும் உண்மை. அதுவுமன்றி எம்மைப் போன்ற பலரை அங்கு அழைத்து சொற்பொழிவுகள் ஆற்ற வைத்து கௌரவித்த சிறப்பும் ஐயா அவர்களுக்கு உண்டு.

உயர்ந்த பக்தியும் நிறைந்த புலமையும் ஒழுக்க சீலமும் ஒன்றாகப் பெற்றவர் குருக்கள் ஐயா அவர்கள். இதனைக் கடந்த ஐம்பது ஆண்டுகளாக நான் நன்கு அறிவேன். காரைநகர் மண்ணுக்குப் பக்தி வித்தை விதைத்து உரமூட்டியவர் இவர். ஆசிரியராக இருந்து அதிபராக உயர்ந்து ஆன்மீகப் பேரொளியாக வளர்ச்சி கண்ட பெருமை இவருக்கு உண்டு. ஐயா அவர்களுடைய ஆழ்ந்த நுண்ணிய கருத்துக்கள் இடம்பெறாத பத்திரிகைகளோ சஞ்சிகைகளோ இந் நாட்டில் இல்லை என்றே கூறலாம்.

ஈழத்துச் சிதம்பரத்திலே இடம்பெற்ற அத்தனை நிகழ்வுகளிலும் அறங்காவலர்களையும் மணிவாசகர் சபையினர்களையும் தனது சொல்லாலும் செயலாலும் ஊக்குவித்த பெருமை இவருக்கு உண்டு. ஆண்டு தோறும் மார்கழி மாதத்தில் திருவெம்பாவை காலத்தில் இடம்பெறும் மணிவாசகர் விழாவிலே இவருடைய ஆளுமையையும் ஆற்றலையும் கால் நூற்றாண்டு காலமாக நான் நேரில் கண்டு பெருமிதம் அடைந்தேன். 1970ஆம் ஆண்டு 'சிவத்தமிழ்ச் செல்வி' என்ற பட்டத்தை சுந்தரேசப் பெருமானின் வாக்குப் போல் எனக்கு எடுத்து வழங்கியவர் இவர். அன்றைய விழாவின் எழுச்சியைக் காரைநகர் சிவன் கோயில் முன்றிலிலே கண்டு இறும்பூது எய்திய மகிழ்ச்சி என்றும் நினைவு கூரத்தக்கது. அந்த ஆண்டு ஈழத்துச் சிதம்பரத்திலே குடமுழுக்கு நடந்த ஆண்டாகும். உலகெங்கணும் செறிந்து வாழும் காரைநகர் மக்கள் அவ்விழாவுக்கு வருகை தந்திருந்தனர். இந்த வருகையின் காரணமாகவே நான் மலேசியா சிங்கப்பூருக்குச் சொற்பொழிவு செய்வதற்கு அழைக்கப்பட்டேன். இந் நிகழ்வுகள் என் வாழ்நாளில் என்றும் பசுமையாகவே பதிந்துள்ளன. இதற்கு முக்கிய காரணராக அமைந்தவர் சிவத்திரு. வைத்தீஸ்வரக் குருக்கள் ஐயா என்பதை எடுத்துக் கூறுவதில் நான் மேதாம் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

கனடாவில் நற்பணியாற்றிவரும் 'சைவ சித்தாந்த மன்றம்' குருக்கள் ஐயாவின் பணிகளைப் பாராட்ட இருப்பது வரவேற்கத்தக்கதாகும். கனடா மாத்திரமல்ல; உலகம் முழுவதுமே ஐயாவின் பணிகளைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறது. எண்பத்தைந்து வயது எய்த இருக்கும் இப் பெரியாரை சைவத்தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் பாராட்டக் கடமைப்பட்டவர்கள் என்பதை நினைவில் இருத்தி ஐயா அவர்களின் திருவடிகளை வணங்கி அமைகின்றேன்.

கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி,
தலைவர்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை, ஸ்ரீலங்கா.

## யாம் இருவேம்.......

காரை மருத்துவனார் என்னும் புனைபெயர் கொண்ட சிவத்திரு க.வைத்தீஸ்வரக் குருக்கள் ஐயாவுடன், அவர் குடும்பத்தாருடன் - அவரை நூற்றாண்டுக்கு மிகையாகப் பழகி உள்ளேன். குருக்கள் ஐயாவை என்னும் போதெல்லாம் பத்துப் பாட்டினுள் ஒன்றாய திருமுருகாற்றுப்படையுள் இடம் பெற்ற சில வரிகள் என் மனத்திரையில் நிழலாடும். ஆம்

*——————— இகலொடு*
*செற்றம் நீக்கிய மனத்தினர்; யாவதும்*
*கற்றோர் அறியா அறிவினர்; கற்றோர்க்குத்*
*தாம்வரம் பாகிய தலைமையர்; காமமொடு*
*கடுஞ்சினம் கடிந்த காட்சியர்; இடும்பை*
*யாவதும் அறியா இயல்பினர்; ———*

திருமுருகு 131-136

"புகன் அழுக்கற்ற அந்தணாளனை" இப் குருக்கள் ஐயாவிடம் இத்துணை உயரிய விழுமியங்கள் அமைந்து கிடத்தல் உண்மை! உண்மை!! உண்மையே!!! "வெறும் புகழ்ச்சி இல்லை"

எங்கள் குருக்கள் ஐயாவுடன் பல்லாண்டுகளாகப் பழகியவன் என்று தொடக்கத்தில் கூறியிருந்தேன். ஐயா அவர்கள் முன்னாளில் ஈழமணித் திருநாட்டில் தலைசிறந்து விளங்கிய பேராசான்மார்களாகிய வித்துவ சிரோன்மணி கணேசையா, வித்தகம் கந்தையாபிள்ளை, முகாந்திரம் சிவத்திரு சதாசிவஐயர், வித்துவான் பண்டிதமணி நடராசபிள்ளை, நவநீதகிருஷ்ணபாரதியார் பல்கலைப்புலவர் க.நடேசபிள்ளை மற்றும் புலவர்மணி பண்டிதர் சோ.இளமுருகனார் ஆதியருடன் நெருங்கிப் பழகியிருந்தார். அவர்களின் சிறப்பையும் சொற்றிறமைகளையும் என்றும் பாராட்டிப் பேசுவார். பெரும் புலமைமிக்க புலவர்மணி பண்டிதர் சோ.இளமுருகனார், இவருக்கு அஞ்சல் எழுதும்போதெல்லாம் திருவடிகளைத் தொண்டுவிட்டு வணங்குகிறேன் என்று வரைவதனைக் கண்டுள்ளேன்.

விருந்தர் தமது இல்லத்தை மாதவம் செய்த சிறுகுடில் என்று குறிப்பிடுவார். குருக்கள் ஐயாவின் சிறு குடிலில் தென்னகத்துத் தமிழ்ச் சான்றோர்கள், ஈழத் தமிழ் அறிஞர்கள் எல்லோருமே சென்றுவந்துள்ளனர். அந்த மாதவம் செய்த குடிலுக்கு யானும் சென்றுவரும் வழக்கம். இக்கட்டுரையை எழுதும்போது அவ்வினிய இரவுகள் நினைவிற்கு வருகின்றன.

அங்கு பெரிய நூலகம் ஒன்று இருந்தது. தமிழ்த் தொன்னூல்கள் இருந்தன. வடமொழி நூல்களும் சிறப்பாக ஆகமம் பத்ததி போன்றவற்றின் ஏட்டுப் பிரதிகளும் இருந்தன. கணபதீஸ்வரக் குருக்கள், கார்த்திகேயப் புலவர் முதலிய முந்தையோர்களின் நூல்களும் காணப்பட்டன. நூலகத்தை உயிரினும் மேலானதாக ஓம்பினார். தமிழகத்து நாளிதழ், வார இதழ், மாத இதழ் முதலியனவும் ஈழத்துச் செய்தித்தாள்களும் சிறந்தனவும் சேமிக்கப்பட்டு இருந்தன. குருக்கள் ஐயாவே ஒரு நடமாடும் நூலகம்.

நுண்மாண் நுழைபுலம்மிக்க இவர், சமய குரவர், சந்தான குரவர்களிடம் இறுக்கமான பக்தியுடையார். தோத்திர சாஸ்திரங்களிலும் முழுமையான தேர்ச்சி உடையவர். திருவாசகத்தேனை அருந்தியுடன் மாந்தும் அமைதியின் தேவாரங்களில் ஈடுபாடுகொண்டு பொன்வேண்டும் போதும் தொழுதெழும்போதும் எல்லாம் "இடரினும் தளரினும்" "அங்கத்துறு நோய்கள்" முதலிய தேவாரங்களை ஓதுவார்....

வட்டுக்கோட்டையூர் புலவர்மணி பண்டிதர் க.மயில்வாகனனார்
ஓய்வு பெற்ற அதிபர்.

## ஈழத்தில் பிறக்கவேண்டும்

"அரிது அரிது மானிடர் ஆதல் அரிது" என்பது மூத்தோர் வார்த்தை. மானிடப் பிறவியிலும், சைவமாம் சமயம் சாருதல் அதனினும் அரிது. சைவசமயத்தில் பிறந்தாலும், தமிழால், இறைவன் திருமேனி தீண்டிப் பூசிக்கும் சைவ ஆசாரியர் குலத்தில் பிறத்தல் பூர்வ புண்ணியம் பெற்றாலேயே அமையும்.

சேக்கிழார் பெருமான் தம் பெரியபுராணப் பகுதியில், தடுத்தாட்கொண்ட புராணத்தில், சுந்தரமூர்த்தி சுவாமிகள் குலமரபு பேசவந்தவிடத்து, "மாதொரு பாகனாருக்கு வழிவழி அடிமைசெய்யும் வேதியர்குலம்" என்று சைவ ஆசாரிய மரபினரைப் புகழ்ந்துரைக்கின்றார்.

உலகில் பலரும், மாமன்னர்களும், குறுநில வேந்தர்களும், பெருஞ் செல்வர்களும், சைவத்தையும், சிவாலயங்களையும் பாதுகாத்து நின்றதாகக் கூறக்கேட்கின்றோம். உண்மையில், வறுமையில் வாடியபோதும் போர் மேகங்கள் சூழ்ந்தபோதும், பிறமதத்தார் படையெடுப்புக்களால் நாசம் வந்துற்ற போதும், மனந்தளராது சிவாலயங்களையும், இறைவன் திருமேனிகளையும் தங்கள் கண்களின் மணிகளாக காத்துநின்ற செம்மாப்பு உடையவர்கள் சைவ ஆசாரியப் பெருமக்களே ஆவர். தமிழர்களும், சைவப் பெருமக்களும் கைகூப்பி வணங்க வேண்டியது அன்னார் திருவடிகளையே என்பது சத்தியத்திலும் சத்தியமாகும்.

காரைநகர் மணிவாசகர் சபையின் காப்பாளரும், கனடா சைவசித்தாந்த மன்றத்தின் புரவலரும், "அன்பு நெறி" என்ற இதழின் சிறப்பாசிரியரும், காரைநகர் தமிழ்வளர்ச்சிக் கழகத்தின் நிறுவனருமாகிய பண்டிதமணி சிவத்திரு க.வைத்தீஸ்வரக் குருக்கள் பன்னூறு விழுதுகளுடன் வேர்விட்டு எழுந்து நிற்கும் ஓர் ஆலமரமாகத் திகழ்பவர்.

பணநாட்டம் சிறிதும் இன்றித் தம் 85ஆவது அகவையிலும் "செல்வன் கழல் ஏத்தும் செல்வம் செல்வமே" என்ற சிந்தை நிறைவோடு வறுமை வாழ்க்கையில் மகிழ்ந்திருக்கும் மாமனிதர்.

1962இல் நடைபெற்ற காரைநகர், ஈழத்துச் சிதம்பரம் மணிவாசகர் மன்ற வெள்ளிவிழா நிகழ்ச்சிக்கு தலைமைவகிக்க நானும், என் துணைவியார் திருமதி சந்திரா செல்வக்கணபதி அவர்களும் ஐயா அவர்களால் அழைக்கப்பட்டோம். அங்கே தங்கியிருந்த நாள்களில், குருக்கள் ஐயா அவர்களின் அன்பிலும், அரவணைப்பிலும் சிறுகுழந்தைகள் போல் மகிழ்ந்திருந்தோம். அவர்களின் அன்பையும், பண்பையும் வேதாகமக் கல்விப் பெருமிதத்தையும், நியமம் தவறாத பூசைச் சிறப்புக்களையும் அருகிலிருந்து கண்டு, அகம் மகிழ்ந்தோம். நட்பைப் போற்றும் பண்பாளராகிய ஐயா அவர்கள் கடந்த 19 ஆண்டுகளில் இடையறாது கடித வழியும், அன்பர்கள் வழியும் என்தொடர்பைப் போற்றி புதுப்பித்துவந்துள்ளார்கள்.

எண்பத்து ஐந்து அகவை நிறையும் ஐயா அவர்கள், நூறு ஆண்டுகள் வாழ்ந்து சைவத்திற்கும், தமிழுக்கும் தொண்டாற்றிமகிழ வேண்டும் என்று அன்னை சிவகாமி உடனமர் தில்லைபுர திருக்கூத்தன் திருத்தாள் மலர்களை வந்தித்து வாழ்த்துகின்றேன்.

மீண்டும் ஒரு பிறப்பு அமையுமானால் அப்போதும் எங்கள் மதிப்புக்குரிய குருக்கள் ஐயா அவர்கள் ஈழத்தில், தமிழ் மரபில், சைவம் வளர்க்கும் குலமரபில் அவதரித்து, தமிழ்ச் சைவத்தை ஈடேற்ற சிவ பெருமான் கருணை பாலிக்கப் பிரார்த்திக்கின்றேன்.

முனைவர் இரா.செல்வக்கணபதி
தருமபுரம் தமிழ்நாடு.

## விழாக் காண விழையாத வித்தகர்

செந்தமிழின் சிறப்பையும் மேன்மைகொள் சைவத்தின் நுட்பத்தையும் கட்டிக்காத்து வருகின்ற அறிஞர்களில் ஒருவராக விளங்கும் பண்டிதர் சிவஸ்ரீ க.வைத்தீஸ்வரக்குருக்கள் ஐயா அவர்கள் காரைநகர் மணிவாசகர் சபையை யோகர் சுவாமிகளின் அருளாசியுடன் 1940 இல் ஆரம்பித்தவராவர். ஆல்போல் தழைத்த இச்சபை பல கைங்கரியங்களைச் செய்து வந்ததை உலகறியும். இச்சபையை உந்துசக்தியாக இயக்கி பல பணிகளைச் செய்வித்த பெருமை ஐயாவைச் சாரும். சமயப் பணியோடு நின்றுவிடாது காரைநகர் தமிழ் வளர்ச்சிக் கழகத்தை ஆரம்பித்து கற்கும் மாணவச் செல்வங்களுக்கு வேண்டிய நூல்களை ஆக்கித் தந்துள்ளார். பல அறிஞர்களின் நூல்களை எழுத்துப் பிழையின்றிப் பதிப்பித்துத் தந்துள்ளார். திருவாதிரை மலர்கள், மணிவாசக சபையின் பொன்விழா மலர், சைவமகா சபையின் பொன்விழா மலர் போன்ற மலர்களை மலரச் செய்த பகலவனாவார்.

சைவத்தினதும் தமிழினதும் தொன்மையை உணர்த்துகின்ற, பழம்பெரும் பொக்கிஷங்களாக விளங்குகின்ற, ஆகமங்கள், இதிகாசங்கள், புராணங்கள், சங்க நூல்கள், காப்பியங்கள், நீதிநூல்கள், இலக்கணநூல்கள் யாவற்றையும் சேகரித்துப் பேணிப் பாதுகாத்து வைத்திருந்ததோடு துருவித் துருவி ஆராய்ந்த அறிஞருமாவார். இத்தகைய ஐந்து இலட்சத்துக்கு மேற்பட்ட பெறுமதியும் பெறுதற்கரியதுமான நூல்களை மணிவாசகர் சபையினருக்கு மனமுவந்து வழங்கிய புரவலருமாவார். மணிவாசகர் சபை இந்நூல்களை அறுபத்துநான்கு ஆண்டுகாலமாக ஈழத்துச் சிதம்பரத்தில் சிவாச்சாரியாராகப் பணிபுரிந்து வந்த இவரது தந்தையார் சிவஸ்ரீ ச.கணபதீஸ்வரக்குருக்கள் அவர்களின் நினைவு நூலகமாக இயக்கி வருகின்றது. நிரந்தர நூலகக் கட்டிடத்தை கட்டி இயக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறது.

ஐயா அவர்கள் மிக எளிமையும் அடக்கமும் பணிவும் மிக்கவர். பிறர் மனம் நோகாத வண்ணம் செயலாற்றும் தன்மை கொண்டவர். நடமாடும் நூலகமாகவும் அறிவுக் களஞ்சியமாகவும் விளங்குபவர். ஐயா அவர்கள் சிறு சிறப்புக்களை விரும்பாத ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோராவார். விழா பல கண்டவர் தனக்கென விழாகாண விழையாத வித்தகர்.

இன்றைய நன்னாளில், உடல் நலத்தோடு பணிசெய்து நெடிது வாழ ஈழத்துச் சிதம்பர சுந்தரேஸ்வரப் பெருமானுக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் காலை 10 மணிக்கு நடத்த ஒழுங்குகள் செய்துள்ளோம். யாவரும் கலந்துகொண்டு சுந்தரேஸ்வரப் பெருமானின் இன்னருள் வேண்டி நிற்போமாக!

பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளை.

## பிரதிபலன் பாராத நன்னட்பாளர் .....

*மொய்த்துவளர் பெருந்தமிழின் மூத்த வடிவமேயோ - பகை*
*சாய்த்து நிமிர் சாத்திரத்தின் சரித படிவமேயோ - வகை*
*வாய்த்து ஒளிர் காலத்தின் சுவடு வணங்குமேயோ - தொகை*
*தோய்த்து நிமிர் தமிழினத்தின் தவமும் உணங்குமேயோ.*

தோத்திர சாத்திரத் தமிழ்ப் பண்பாடு கால் கொண்டு இறுமாந்து எண்பத்தைந்து ஆண்டு காலமாய்த் தங்கள் திருவடி நிழலில் வீற்றிருந்த செம்மாப்புக்குத் தமிழ்கூறு நல்லுலகம் என்ன கைம்மாறு செய்யும்?

மாரிபோல் பிரதிபலன் எதிர்பாரா நன்னட்பாளராய் - வழிகாட்டியாய் எங்கள் முன் உதாரணமாய் வாழ்ந்து, சோற்றுச் செருக்கால் உலகூட்டி வாழ்ந்த உத்தமரே!

தங்களை நேரில் கண்டும் விருந்தாடியும் சொல்லாடியும் மகிழ்ந்த இந்தத் தமிழ் மகள் தங்கள் திருவடி தொழுது அவற்றைத் தலைக்கணியாய் ஏற்று வணங்குகிறாள். 'யான் வாழும் நாளும் பண்ணன் வாழிய' என்ற சங்கத் தமிழில் 'தமிழுள்ளளவும் தங்கள் வாழ்வு சிறக்க வேண்டும்' என வாழ்த்துகிறேன்.

*செய்தக்க செய்யாமை யானும் கெடும்* - என்ற பழி ஏற்காது காலமுண்டாகவே விழா எடுத்து வீறு பெறும் குழுவினருக்கு நேயம் தெரிவிக்கின்றேன். இன்னும் மின்னும் பணிசெய்து பிணியின்றி நூறு நூறாயிரத்தாண்டு வாழ ஸ்ரீ நடராஜப் பெருமான் அருளட்டும்.

'அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்'

செந்தமிழ்த் திலகம், வித்துவான், டாக்டர், ப.நீலா.எம்.ஏ.எம்.பில்.,பிஎச்.டி.
முதல்வர் (ஓய்வு)
தருமபுரம் ஆதீனம் கலைக்கல்லூரி, தருமபுரம், மயிலாடுதுறை - 609001.

## வாழ்க பல்லாண்டுகள்!

பண்டிதமணி சிவஸ்ரீ க.வைத்தீஸ்வரக் குருக்கள் அவர்கள் பெரும் புகழ் வாய்ந்த சிவஸ்ரீ ச.கணபதீஸ்வரக் குருக்கள் அவர்களின் மகன் ஆவார். அவர் ஈழத்துச் சிதம்பரத்திலே பிறந்த பெரும் புண்ணியவாளன் என்ற பெருமைவாய்ந்தவர். பிராமண குலத்திலே பிறந்து அக்குலத்திற்குத் திலகமாக விளங்குபவர். நானும் அவரும் காரைநகர் இந்துக் கல்லூரியில் மாணவர்களாய் ஒரே வகுப்பிற் கற்றோம். அதனால் எனக்கும் அவருக்கும் 70 வருடங்களுக்கு முன்னரே தொடர்பு ஏற்பட்டுவிட்டது. ஆனால் நான் வேறு இடங்களுக்குச் சென்றமையால் அவருடன் கொண்ட நெருங்கிய உறவு துண்டிக்கப்பட்டபோதிலும், கடிதங்கள்வாயிலாகவும் இருவருக்குமுள்ள மன அன்பு தொடர்பு மூலமும் ஒருவரையொருவர் மறவாதிருக்கின்றோம். வைத்தீஸ்வரக் குருக்கள் என்ற பெரியார் என்னிலும் பார்க்க அறிவிலும் வயதிலும் முதிர்ந்தவர். அவரைப் பற்றி வாழ்த்துரை எழுதுமாறு என்னை வேண்டிக்கொண்டதற்காகப் பெரும்மகிழ்ச்சியும், பெருமையும், அடைகின்றேன். குருக்கள்

*"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்*
*உயிரினும் ஓம்பப்படும்"*

என்ற வள்ளுவர் வாக்குக்கமைய தமது வாழ்க்கையை நடத்தி தர்மத்தைக் கையாள்பவர். இப்பெரியாரே காரைநகர் மணிவாசகர் சபையை ஏறக்குறைய 60 ஆண்டுகளுக்கு முன் ஆரம்பித்துத் தொடக்கத் தலைவராயும் இருந்தார். மேலும் இன்று காப்பாளராயுமிருந்து வருகின்றார். குருக்கள் அவர்களே ஈழத்துச் சிதம்பர புராணத்தின் பதிப்பாசிரியருமாவார். கல்வி விருதுகள் பலவற்றைப் பெற்றும் மிகுந்த பணிவுடன் வாழ்க்கையை நடத்தும் குருக்கள் இன்னும் பல்லாண்டுகள் பூரண சுகத்துடனும் கீர்த்தியுடனும் வாழவேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

திரு. இ.கனகசுந்தரம் M.A.B.S.Phd D.S.E. Hon.
பேராசிரியர், தேசிய பல்கலைக்கழகம், சிங்கப்பூர்.

## முத்தமிழ்போல் பல்லாண்டு வாழி! வாழி!

கலைமலரும் நிதிமலரும் சிவானந்தத் தேன்மலரும்
காரைநகர் மலரநின்ற
மலைமலரும் ஈழத்துச் சிதம்பரப் பெருமானின்
மலரடி பிடித்த வள்ளல்,
தலைமலரும் மறைமலரும் சைவ விதிமுறை மலரத்
தந்த கண பதீஸ்வ ரக்குரு
நிலைமலரும் மைந்தனாம் வைத்தீஸ்வ ரக்குருக்கள்
நீடூழி வாழி! வாழி!

அருளாளன் ஆதிசதுர் மறையாளன் அன்புவளர்
அறிவறிந்து தெளிந்த இன்பப்
பொருளாளன், பிறையாளன், பணியாளன், தெய்வீகப்
புண்ணியச் சிந்தையாளன்
தெருளாளன், ஆசிரியத் திறலாளன், தவமிக்க
சீராளன், வாய்மை தாங்கும்
திருவாளன், வேதாந்த சித்தாந்த பாஸ்கர
சிவ வைத்தீஸ்வரக் குருக்கள்.

புன்முறுவல் பூத்தமுகம் பொலிநீறு பூத்தநுதல்
புராண திரு முறை பேசும்வாய்
அன்பருவி பாயும் மனம் அணிந்தபூ ணூல் தாங்கும்
ஆகமச் சுருதிப் பண்பு
பொன்பெருகு கொடைக்கரம் தளராத செயல் நலம்
பூசை வழுவாத வாழ்க்கை
என்பன சிறந்த வைத் தீஸ்வரக் குருக்கள் உயர்
இமய மென வாழி! வாழி!

அருட்கவி சீ.விநாசித்தம்பி
(தலைவர், இந்துசமயப் பேரவை)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

LOVE BIRDS, FINCHES (இரும்புக் கூட்டுடன்) YAMAHA OCTERPAD MODEL NO. D.D.50 (SEVEN DRUMS) என்பன உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: பாலு அஸ்பரி, சேர்ச் ஒழுங்கை, அராலி வடக்கு. (92471)

புதிய PENTIUM 3 கணனி ஒன்று உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: திரு.T.ரகு, ஸோட்டன் றோட், மானிப்பாய். T.P. 2979 (92476)

இன்று நேற்று அல்ல என்றுமே அதி குறைந்த விலையில் புறொயிலர் இறைச்சிக் கோழி எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். தற்போதைய விலை 1kg 120/-. சுத்தம் செய்த இறைச்சி 1kg 175/-. தொடர்பு:- மாஸ்ரர், மூளாய் வீதி, வட்டுக்கோட்டை. (92348)

மில் மோட்டர் 25 H.P., 10 H.P. (England) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சிறிகெங்கபாலா, பலாலி வீதி, உரும்பிராய். (92512)

கடைக்குரிய சோக்கேஸ், 4'x6' றாக்கை, 8'x8' மீன் தொட்டி, 3'x1 1/2' குளிர்சாதனப் பெட்டி இரு கதவுள்ளது நஷனல் (புதியது), வீட்டுத் தளபாடங்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல.9, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர். (92513)

Laptop கணனி (U.S.A.) புதிய Audio CDக்கள், பதிவு செய்யப்பட்ட CDக்கள் ரூபா 100/- மட்டும். தொடர்புகளுக்கு: T.P.2979 (92516)

கண்ணாடி சோக்கேஸ், மரசெற்றி கட்டில்கள், கல்லுரல், சிங்கர் தையல் மெஷின் கந்தோர் மேசை மற்றும் பல வீட்டுத் தளபாடங்கள் உடன் விற்பனைக்கு உண்டு. 838, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (92518)

## திருத்துதல்

மூக்குக் கண்ணாடி கமெரா வகைகள் எலக்ரோனிக் பிளாஸ்க்கன் கையளவு கொண்ட பிளாஸ்ரிக் பாட்ஸ் ஒட்டியும், திருத்தியும் கொடுக்கப்படும். சு.நாராயணசாமி, 301, கஸ்தூரியார் வீதி(மேல்மாடி) (கன்னாதிட்டிச் சந்திக்கருகில்), யாழ்ப்பாணம். (92540)

## வகுப்புகள்

G.C.E (O/L) 2001 இற்கான கணித, ஆங்கில மீட்டல் பகல்நேர வகுப்புகளும் G.C.E (A/L) மாணவர்களுக்கான ஆங்கில வகுப்புகளும் ஆரம்பமாக இருக்கின்றன. தொடர்பு-இல.12, இராமுப்பிள்ளை வீதி, கொக்குவில் மேற்கு. (வீடுகளுக்கும் வந்து கற்பிக்கப்படும்) (92475)

## ஆட்டுக் கடாக்கள் விற்பனைக்கு

வளர்ப்பதற்குரிய நல்ல இன இரண்டு ஆட்டுக்கடாக்கள்(7மாதம்) விற்பனைக்கு உண்டு. 7/1, ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம்.(92539)

## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

புறொயிலர், கல்பேட்ஸ், சேவல் இறைச்சிக்கோழிகள் சுத்தம் செய்து (பாதிக்கோழி உட்பட) தினமும் பெற்றுக்கொள்ளலாம். 19, முருகேசர் ஒழுங்கை, (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) முத்திரைச் சந்தையடி, நல்லூர். (92429)

புறொயிலர், கல்பேட்ஸ், இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: ராஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி., T.P. - 3529, 2867 (92442)

புறொயிலர் மொத்தமாகவும் சில்லறையாகவும் தினமும் பெற்றுக் கொள்ளலாம். சனி,ஞாயிறு நாள்களில் பாதிக்கோழி உட்பட சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். 1kg 135/=. தொடர்பு: இல.30, நாயன்மார் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (92536)

இறைச்சிக்கோழி, புறொயிலர் சகல நிறைகளிலும் (பாதிக் கோழி உட்பட) பெற்றுக்கொள்ளலாம். 1kg 150/-. சுத்தம் செய்யப்பட்டது 1kg 220/-. தொடர்பு: இல.227, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (நரிக்குண்டுக்கும் கலட்டிச் சந்திக்கும் இடையில்) (92439)

இறைச்சிக் கோழி (BROILER) விற்பனைக்கு உண்டு. 1Kg 120/-, சுத்தம் செய்யப்பட்டது 1Kg 200/-. அத்துடன் கடைப்பாவனைக்குரிய Show Case ஒன்றும் விற்பனைக்குண்டு. தொடர்பு:- College Lane, Vaddkoddai. (92538)

இறைச்சிக் கோழி, விறாத்துக் குஞ்சு மொத்தமாகவும், சில்லறையாகவும் வேண்டிய நிறையில் தினந்தோறும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு:- லக்கி, மதவடி ஒழுங்கை, திருநெல்வேலி. (92537)

## தவறிவிட்டது

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியைச் சேர்ந்த வன்னியசிங்கம் சிவகௌரி என்பவரது தே.அ.அட்டை (இல.835972399V) 01.09.2001இல் கோப்பாய்க்கும் சிறுப்பிட்டிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் அ. வன்னியசிங்கம், சிறுப்பிட்டி கிழக்கு, நீர்வேலி என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (92534)

தனராசா நிமலன் என்பவருடைய தே.அ.அட்டை, வி.அ.அட்டை (இல. 0907010390) என்பன இணுவிலுக்கும் சுன்னாகத்திற்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் சுன்னாகம் தெற்கு, சபாபதிப்பிள்ளை வீதி, நலன்புரி நிலையம் (முகாம்), சுன்னாகம் என்ற முகவரியில் ஒப்படைத்துதவவும். (92548)

## பிறிமா பேட்டுக் குஞ்சுகள்

பிறிமா சிவப்பு (1 வாரம்) பேட்டுக்குஞ்சுகளும் பிறிமா புறொயிலர், கிறீன்வலி புறொயிலர் குஞ்சுகளும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: வை. சிவகுமார், 461, நாவலர் வீதி, அத்தியடி, றஞ்சிதன், மாலிசந்தி, அல்வாய். (92546)

## வீடு விற்பனைக்கு

திருநெல்வேலி மெடிக்கல் பக்கலிக்கு முன்பாக சகல வசதிகளுடன் நான்கு பரப்புக்காணி மாடி வீட்டுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- R.ஜெயரட்ணம் (ரமேஸ்), 124,கந்தன் கருணை லேன், கோயில் வீதி, நல்லூர். (92472)

## முன்பள்ளி கட்டடம் அமைப்பு

வடமராட்சி, செப்.22

தும்பளை கிழக்கு மகளிர் கிராம அபிவிருத்திச் சங்க முன்பள்ளி கட்டடம் ஒன்றரை இலட்சம் ரூபா செலவில் கட்டப்பட்டு வருகின்றது.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் இதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (ஐ-173)

## ஐந்தாவது ஆண்டு நினைவலைகள்

தாயின் மடியில் 20 - 06 - 1931



இறைவன் அடியில் 02 - 10 - 1996

**சைவப்புலவர் ஆ.இரத்தினசபாபதி**

(B.A.Dip.in.Edu.S.L.E.A.S)

(இளைப்பாறிய அதிபர், யா/தேவரையாளி இந்துக் கல்லூரி, முன்னாள் உப அதிபர், நெல்லியடி கொத்தணிப் பாடசாலைகள்)

திதி: 22-09-2001

"பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக் கல்'.' குறள்

**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்:-**

ஆரணி,ஸ்மிருதி, மஞ்சரி, ஆரூரன், ஆரபி, ஆரணன், நிரஜன், நிருஷாந். (92522)

*'திருவள்ளுவர் அகம்' கரவெட்டி வடக்கு, கரவெட்டி.*

## மாவட்ட நீதிமன்றம், மல்லாகம்

## அறிவித்தல்

வழக்கு இலக்கம்:- காணி/107

வலி.கிழக்கு பிரதேச சபை,
அச்சுவேலி.

- வழக்காளி -

*எதிர்.*

**பரமு தேவராசா,**
**அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி.**

- எதிராளி -

மேற்படி இலக்க வழக்கு 2001ஆம் ஆண்டு மாசி மாதம் 22ஆம் நாள் மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் வலிகாமம் கிழக்கு பிரதேச சபையினால் அவர்கள் பதிவு பெற்ற சட்டத்தரணி மூலம், அச்சுவேலி வடக்கைச் சேர்ந்த பரமு தேவராசா என்பவருக்கு எதிராக, வலிகாமம் கிழக்கு பிரதேச சபைக்குச் சொந்தமான கீழே குறிப்பிடப்பட்ட ஆதனடாப்பில் விவரிக்கப்பட்ட ஆதனத்திலிருந்து வெளியேற்றுவது தொடர்பாக ஒரு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி வழக்கில் உள்ள எதிராளியாகிய பரமு தேவராசா என்பவர் மரணமெய்திய காரணத்தினால், மேற்படி இவ்வழக்குத் தொடர்பாக அக்கறையுள்ள அல்லது உரிமையுள்ள எவரேனும் இருப்பின் அவர்கள் தாமாகவோ அல்லது ஒரு சட்டத்தரணி மூலமாகவோ 2001ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 30ஆம் திகதியோ அல்லது அதற்கு முன்னரோ இம்மன்றில் தோன்றி உரிய நடவடிக்கை எடுக்கலாம் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**ஆதன இடாப்பு**

**வடமாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டம், வலிகாமம் கிழக்குப் பகுதி, அச்சுவேலி கோவிற்பற்று, அச்சுவேலி இறை.**

**அச்சுவேலி பஸ்நிலையம் முன்பாக உள்ள 27ஆம் இலக்க கடை மாத்திரம் இதன் எல்லைகள் கிழக்கும் வடக்கும் மேற்கும் தெற்கும் அரசுக்குரிய வாதனம் இதடங்கலும்.**

*2001 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 11ஆம் திகதி என்னால் வரையப்பட்டது.*

**ச.சிவரூபன்**
*வழக்காளியின் பதிவு பெற்ற சட்டத்தரணி*

நீதிமன்றக் கட்டளைப்படி,
**விக்னேஸ்வரமூர்த்தி**
பதிவாளர்,
மாவட்ட நீதிமன்றம், மல்லாகம்.

(C/18348)

# போலியோ நோயை முற்றாக ஒழிப்போம்

## வடக்கு - கிழக்கு மாகாணங்களில் தேசிய போலியோ தடுப்பு மருந்தேற்றல் இயக்கம்

**இன்று (2001 செப்ரெம்பர் 22) சனிக்கிழமை**
**2001 ஒக்ரோபர் 20 சனிக்கிழமை**
**இரு தினங்களிலும்**



ஐந்து வயதுக்குட்பட்ட உங்களின் எல்லாப் பிள்ளைகளுக்கும் போலியோ தடுப்பு மருந்தூட்டுங்கள்.

**முன்னர் தடுப்பு மருந்து கொடுத்திருந்தாலும் இம்முறையும் *கட்டாயம்* கொடுங்கள்.**

விவரங்களுக்கு உங்கள் பகுதிக் குடும்ப சுகாதார சேவையாளரை அல்லது சுகாதார சேவை உத்தியோகத்தரை விசாரியுங்கள்!

PolioPlus unicef

(C/18326)

# அரசின் புதிய அமைச்சரவை 'சங்கீதக் கதிரை' போன்றதாம்!

## ஜி.எல்.பீரிஸ் கிண்டல்

கொழும்பு, செப்.22

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசின் இன்றைய புதிய அமைச்சரவையில் திடீர் திடீரென புதிதாக அமைச்சர்கள் தோன்றுவதும் மறைவதுமாக இருக்கின்றனர். இது சிறுவர்கள் விளையாடும் சங்கீதக் கதிரை விளையாட்டுப் போன்று இருக்கிறது.

முன்னாள் அமைச்சர் பேராசியர் ஜி.எல்.பீரிஸ் மேற்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.

ஜே.வி.பி. - பொ.ஐ.முன்னணி இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி அமைக்கப்பட்ட புதிய அமைச்சரவையில் தான் பங்கேற்காதது குறித்து அமைச்சர் பீரிஸ் மல்வத்தை மற்றும் அஸ்கிரிய பீடங்களின் பீடாதிபதிகளுக்கு அண்மையில் விளக்கினார். அச்சமயமே புதிய அமைச்சரவையை சிறுவர்களின் சங்கீதக் கதிரை விளையாட்டு என்று அதனை அவர் வர்ணித்தார்.

அமைச்சரவை என்பது ஓர் அரசின் அதியுயர் அமைப்பு. அதன் கௌரவத்தையும் அந்தஸ்தையும் உயர்வாகப் பேண முடியாவிட்டால் ஒருவர் அந்த அமைச்சரவையில் இருக்கக் கூடாது என்றும் ஜி.எல்.பீரிஸ் அப்போது தெரிவித்தார். (ஐ)

### இரு கன்றுகளை ஈன்ற பசு

கோண்டாவில் கிழக்கு அற்புத நர்த்தன விநாயகர் சனசமூக நிலையத்துக்கு அண்மையில் வசிக்கும் சுப்பிரமணியம் சிவராசா என்பவரது வீட்டில் பசு ஒன்று இரண்டு கன்றுகளை ஈன்றுள்ளது.

கடந்த செவ்வாயன்று இந்த அதிசய சம்பவம் இடம்பெற்றுள்ளது. இந்தக் கன்றுகளில் ஒன்று பசு. மற்றையது நாம்பன் ஆகும். கன்றுகள் இரண்டும் நலமேயுள்ளன. (ஐ-7)

# மிதிவெடியை மறைத்து எடுத்து வந்தவர் கைது!

தென்மராட்சி, செப். 22

சாவகச்சேரி கச்சாய் வீதிப் பகுதியிலிருந்து மிதிவெடி ஒன்றினை உடுப்புக்குள் மறைத்து எடுத்து வந்ததாகக் கூறப்படும் இளைஞரை சாவகச்சேரி நகரப்பகுதி படையினர் கைது செய்து கொடிகாமம் பொலீஸாரிடம் ஒப்படைத்தனர்.

இதே இடத்தைச் சேர்ந்த தியாகராசா அனிஷ்டன் (வயது 19) என்னும் இளைஞரே கைது செய்யப்பட்டவராவார். இவரைப் பின்னர் காங்கேசன்துறை பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு பொலஸார் கடந்த புதனன்று சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

சந்தேக நபரை ஒக்ரோபர் பத்தாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ஐ-117)


வணிகக் கல்வி
விசேட வகுப்புகள்
*A/L 2002* பகுதி II
*A/L 2001* பகுதி I
இற்குமான விசேட வகுப்புகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.
ஆசிரியர்:
திரு.V.K.ரவீகரன் B.Com.
*தொடர்புகளுக்கு:-*
*17, செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.* (92493)


# தேசிய போலியோ தடை மருந்து கொடுக்கும் தினங்கள் - 2001

## யாழ்.மாவட்டம்

போலியோ நோயை முற்றாக இந்நாட்டிலிருந்து ஒழிக்கும் நோக்குடன் கடந்த ஆறு வருடமாக போலியோ சொட்டு மருந்து கொடுக்கப்பட்டு வருகின்றது. தென்னிலங்கையில் கூடிய முன்னேற்றம் காணப்பட்ட போதிலும் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் கீழ்க் குறிப்பிட்ட காரணங்களால் இதில் எதிர்பார்த்த முன்னேற்றம் காணப்படவில்லை.

(01) காலத்துக்குக் காலம் மக்கள் இடம்பெயர்வதால் பிள்ளைகளைத் தேடிக் கண்டுபிடித்து மருந்து கொடுப்பதில் உள்ள சிரமம்.

(02) இடம்பெயர்வு காரணமாக மக்கள் குறிப்பிட்ட இடங்களில் நெரிசலாக வாழ்கின்றபடியால் சுகாதாரத்தைப் பேணுவது குறைவாகக் காணப்படுகின்றது.

இக் காரணங்களால் வடக்கு - கிழக்கில் இந்நோய் மறைமுகமாக இருக்கலாமென ஐயப்பாடு உண்டு. எனவே இவ்வருடமும் செப்ரெம்பர் 22ஆம் திகதியும், (இன்றும்) ஒக்ரோபர் 20ஆம் திகதியும் இரு தடவைகள் ஐந்து (05) வயதிற்குட்பட்ட சகல பிள்ளைகளுக்கும் போலியோ மருந்து கொடுக்க சுகாதார அமைச்சுத் தீர்மானித்துள்ளது.

யாழ். மாவட்டத்திலுள்ள சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள கீழ்க் குறிப்பிட்ட நிலையங்களில் போலியோ தடை மருந்து கொடுப்பதற்கான ஏற்பாடுகளை யாழ்.மாகாண பிரதிப் பணிப்பாளர் - சுகாதார சேவைகள் - மேற்கொண்டுள்ளார். இந்நிலையங்களில் காலை 8.00 மணிமுதல் மாலை 04.00 மணிவரை தடை மருந்து வழங்கப்படும். 05 வயதுக்குட்பட்ட பிள்ளைகளுக்கு முன்பு பல தடவைகள் கொடுக்கப்பட்டிருந்தாலும் இம்முறையும் கட்டாயமாக இது கொடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தப்படுகின்றது. நூற்றுக்கு நூறு வீதமான பிள்ளைகளுக்குத் தடை மருந்து கொடுப்பதன் மூலம் இக்கொடிய நோய் எமது பிள்ளைகளுக்கு வராமல் தடுப்பது மட்டுமல்லாது எம் நாட்டிலிருந்தே முற்றாக இந் நோயை ஒழித்து விடவும் முடியும்.

**சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு ரீதியாக சிகிச்சை நிலையங்களின் பெயர்ப் பட்டியல் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.**

### 01. சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, தெல்லிப்பழை

01. ஆரம்ப சுகாதார நிலையம், தாவடி.
02. ம.ம., இணுவில்.
03. இணுவில் மத்திய கல்லூரி.
04. ம.ம., உடுவில்.
05. மல்வம் சேச்.
06. உடுவில் மேற்கு அந்திரான்.
07. இராமநாதன் கல்லூரி, மருதனார்மடம்.
08. ம.ம., சுன்னாகம்.
09. யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி.
10. ம.ம.ம.ம., அளவெட்டி.
11. ஆ.சு.நிலையம், சங்குவேலி.
12. மல்லாகம் சிகிச்சை நிலையம் (தெல்லிப்பழை).
13. ம.ம., புன்னாலைக்கட்டுவன்.
14. ம.ம., ஏழாலை.
15. மயிலங்காடு சிகிச்சை நிலையம்.
16. ஏழாலை மாதர் சங்கம்.
17. ஏழாலை பிரதேச சபை.
18. வசாவிளான் சிகிச்சை நிலையம்.
19. ஆ.சு.நிலையம், குளமங்கால்.
20. ஆ.சு.நிலையம், ஈவினை.
21. பன்னாலை சிகிச்சை நிலையம்.
22. தாவடி காளி கோயிலடி.
23. இணுவில் கலாஜோதி வாசிகசாலை.
24. கல்லாரை.
25. பன்னாலை.

### 02. சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, பருத்தித்துறை

01. சோளன்கள் சிகிச்சை நிலையம்.
02. மணியகாரன் தோட்டம் பாடசாலை.
03. ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை.
04. வல்லிபுரக்குறிச்சி கிராம அலுவலர் காரியாலயம்.
05. திக்கம் சிகிச்சை நிலையம்.
06. அல்வாய் பிரதேச சபை பணிமனை.
07. அத்தாய் விநாயகர் பாடசாலை.
08. வியாபாரிமூலை சிகிச்சை நிலையம்.
09. சென்.அன்ரனி சிகிச்சை நிலையம்.
10. மாதனை மாதர் சங்கம்.
11. கற்கோவளம் சிகிச்சை நிலையம்.
12. தம்பசிட்டி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலையம்.
13. பருத்தித்துறை மத்திய மருந்தகம்.
14. விக்கினேஸ்வரா சிகிச்சை நிலையம்.
15. வதிரி சிகிச்சை நிலையம்.
16. கப்பூது வாசிகசாலை.
17. கரவெட்டி மத்திய மருந்தகம் மகப்பேற்று மனை.
18. இராஜ கிராமம் சிகிச்சை நிலையம்.
19. கிழவித் தோட்டம் வாசிகசாலை.
20. கட்டைவேலி சனசமூக நிலையம்.
21. கோயிற்கடமை சனசமூக நிலையம்.
22. அம்பிகை பாலர் பாடசாலை.
23. உடுப்பிட்டி சனசமூக நிலையம்.
24. பாரதி சனசமூக நிலையம்.
25. இலகடி சனசமூக நிலையம்.
26. இமையாணன் மாதர் சங்கம்.
27. கலைமகள் பாலர் பாடசாலை.
28. உடுப்பிட்டி பிரதேச சபை.
29. மாவட்ட வைத்தியசாலை, வல்வெட்டித்துறை.
30. வளர்மதி பாலர் பாடசாலை, தொண்டமனாறு.
31. கொற்றாவத்தை அ.த.க., பாடசாலை.
32. பொலிகண்டி இ.த.க., பாடசாலை.
33. கொற்றாவத்தை அ.மி.த.க., பாடசாலை.
34. வல்வெட்டி இ.த.க., பாடசாலை.
35. அம்பன் அ.ம.த.க., பாடசாலை.
36. மணற்காடு பாலர் பாடசாலை.
37. குடத்தனை சிகிச்சை நிலையம்.
38. பொற்பதி வாசிகசாலை.

### 03. சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, யாழ்ப்பாணம்

01. சிறுவர் பூங்கா பாலர் பாடசாலை.
02. ஈச்சமோட்டை பாலர் பாடசாலை.
03. திருநகர் சனசமூக நிலையம்.
04. குருநகர் சிகிச்சை நிலையம்.
05. ஆ.வே. மாயா பாலர் பாடசாலை.
06. யூப்ளி மகப்பேற்று நிலையம் - 1.
07. யூப்ளி மகப்பேற்று நிலையம் - 2.
08. ஆயுர்வேதக் கல்லூரி.
09. போதனா வைத்தியசாலை.
10. கொட்டடி பாலர் பாடசாலை.
11. நாவலர் சிகிச்சை நிலையம்.
12. நாவாந்துறை றோமன் கத்தோலிக்க பாடசாலை.
13. சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம், கண்டி வீதி.
14. காந்தி சனசமூக நிலையம், அரியாலை.
15. ஞானக்குழந்தை பாலர் பாடசாலை, சிவப்பிரகாசம் வீதி.
16. வள்ளுவன் சனசமூக நிலையம், வண்ணார்பண்ணை.
17. அங்கர் பாமசி முன்.
18. கந்தர்மடம் சிகிச்சை நிலையம்.
19. செட்டித்தெரு சனசமூக நிலையம், நல்லூர்.
20. நல்லூர் சிகிச்சை நிலையம்.
21. மூத்தவிநாயகர் சனசமூக நிலையம்.
22. வண்ணார்பண்ணை சிகிச்சை நிலையம்.

### 04. சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, மானிப்பாய்

01. சுற்றயல் கூறு, சங்கானை.
02. ஆரம்ப சுகாதார நிலையம், பண்ணாகம்.
03. மத்திய மருந்தகம், தொல்புரம்.
04. ஐக்கிய சங்கப் பாடசாலை, சுழிபுரம்.
05. மத்திய மருந்தகம், வட்டுக்கோட்டை.
06. வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி.
07. கிராமிய வைத்தியசாலை, வட்டுக்கோட்டை.
08. அராலி தெற்கு சரஸ்வதி மகா வித்தியாலயம்.
09. சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, மானிப்பாய்.
10. கிராமிய வைத்தியசாலை, பண்டத்தரிப்பு.
11. மத்திய மருந்தகம், இளவாலை.
12. சனசமூக நிலையம், மாசியப்பிட்டி.
13. மானிப்பாய் லயன்ஸ் கழகம்.
14. சனசமூக நிலையம், சுதுமலை.
15. ஆரம்ப சுகாதார நிலையம், சாவற்கட்டு.
16. ஆரம்ப சுகாதார நிலையம், முள்ளி, ஆனைக்கோட்டை.
17. வை.எம்.சி.ஏ.,நவாலி.

### 05. சுகாதார வைத்திய அதிகாரி, சாவகச்சேரி

01. மிருசுவில் வடக்கு பாடசாலை.
02. கச்சாய் பிரதேச சபை.
03. மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்.
04. கைதடி வடக்கு அம்பிகா மாதர் சங்கம்.
05. கைதடி தெற்கு சுமநல நிலையம்.
06. வரணி ம.ம.ம.ம.

### 06. சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, கோப்பாய்

01. இடைக்காடு சிகிச்சை நிலையம்.
02. சுற்றயல்கூறு அச்சுவேலி.
03. மத்திய மருந்தகம் புத்தூர்.
04. ஆரம்ப சுகாதார நிலையம், வாதரவத்தை.
05. சிறுப்பிட்டி சிகிச்சை நிலையம்.
06. அச்செழு சிகிச்சை நிலையம்.
07. நீர்வேலி சிகிச்சை நிலையம்.
08. ஊரெழு சிகிச்சை நிலையம்.
09. உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்.
10. சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, கோப்பாய்.
11. மாதா கோவிலடி, இருபாலை.
12. கட்டப்பிராய் சிகிச்சா நிலையம்.
13. கல்வியங்காடு சைவப் பாடசாலை.
14. திருநெல்வேலி கலாமன்றம்.
15. மத்திய மருந்தகம், கொக்குவில்.
16. கிராமிய அபிவிருத்திச் சங்கம், கொக்குவில்.
17. மத்திய மருந்தகம் மகப்பேற்று மனை, கோண்டாவில்.
18. ஆசையப்பர் கோவிலடி.
19. கிராமசபை, புத்தூர்.
20. ஆரம்ப பாடசாலை சைவத்தமிழ், உரும்பிராய்.
21. செருக்கப்புலம் அன்னங்கை சிகிச்சை நிலையம், கோண்டாவில்

### 07. சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, ஊர்காவற்றுறை

01. மாவட்ட வைத்தியசாலை, ஊர்காவற்றுறை.
02. தம்பசிட்டி சனசமூக நிலையம்.
03. மெலிஞ்சிமுனை சேச்.
04. ஆரம்ப சுகாதார நிலையம், புளியங்கூடல்.
05. ஆரம்ப சுகாதார நிலையம், நாரந்தனை.
06. சுற்றயல்கூறு காரைநகர்.
07. களபூமி கிராம அலுவலர் காரியாலயம்.
08. வார்வளவு ஆரம்பப் பாடசாலை.
09. சுற்றயல்கூறு அனலைதீவு.
10. ஆரம்ப சுகாதார நிலையம், எழுவைதீவு.
11. கிராமிய வைத்தியசாலை, வேலணை.
12. சாட்டி மாதா சேச்.
13. பராசக்தி வித்தியாலயம்.
14. மண்டைதீவு.
15. மாவட்ட வைத்தியசாலை, புங்குடுதீவு.
16. சுற்றயல்கூறு, நயினாதீவு.
17. மாவட்ட வைத்தியசாலை, நெடுந்தீவு.
18. நெடுந்தீவு மேற்கு - நிலையம்.
19. சுப்பிரமணியம் வித்தியாலயம்.

**மாகாண பிரதிப் பணிப்பாளர், சுகாதார சேவைகள், யாழ்ப்பாணம்.**

(C/18308)

# நிறுவுநர் நினைவு தினம்

யாழ்ப்பாணம்,செப்.22

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியின் நிறுவுநர் நினைவு தினமும் பரிசளிப்பு விழாவும் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கல்லூரி அதிபர் சோ.விஸ்வலிங்கம் தலைமையில் நடைபெறவிருக்கின்றன.

இந்த நிகழ்வில் ஜி.ரி.சற்.நிறுவனத்தின் திட்டக் கணக்காளர் லயன் செ.ஞானராசா பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்வார்.

கல்லூரியின் பழைய மாணவனும் மக்கள்வங்கி சுன்னாகம் கிளையின் முகாமையாளருமான க.ஆனந்தராசா நினைவுப் பேருரையை நிகழ்த்துவார். திருமதி வசந்தி ஞானராசா பரிசில்களை வழங்குவார். (ஐ-3)

## மின்னல் தாக்கி மற்றொருவர் மரணம்

முல்லைத்தீவு மாவட்டத்தில் முள்ளிவாய்க்கால் என்னும் இடத்தில் கடந்த 16 ஆம்திகதி மின்னல் தாக்கி ஒருவர் மரணமாகியுள்ளார்.

முள்ளிவாய்க்காலைச் சேர்ந்த சுப்பிரமணியம் தெய்வேந்திரன் என்பவரே உயிரிழந்தவராவார்.

அதேதினம் பரந்தனில் வண்டிலில் சென்ற இருவர் மின்னல் தாக்கி உயிரிழந்தது தெரிந்ததே. (உ-3)

## வவுனியாவில் தேடுதல்

வவுனியா பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தின் 7ஆம், 8ஆம், 9ஆம் யூனிட்டுக்கள் நேற்றுமுன்தினம் காலையில் படையினரால் சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

இந்தத் தேடுதலைத் தொடர்ந்து ஐவர் கைது செய்யப்பட்டு பொலீஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டதாகவும் -

அவர்கள் மாலையில் விடுவிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

# அமைச்சர்கள் எண்ணிக்கை தொடர்பாக வர்த்தமானியை எதிர்பார்த்திருக்கிறோம்

## ஜே.வி.பி. பிரசாரச் செயலாளர் கூறுகிறார்

கொழும்பு,செப்.22

அமைச்சரவையின் எண்ணிக்கை 20இற்குக் கூடுதலாக வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டால் அடுத்த நிமிடமே அரசும் நாமும் செய்து கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கையை முறித்துக்கொள்வோம்.

ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ இவ்வாறு அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அமைச்சரவை எண்ணிக்கை தொடர்பாக இன்னமும் உறுதியான முடிவெதுவும் எடுக்கப்படாமையால் சிக்கல் ஏற்பட்டிருப்பதாகக் கூறியுள்ள விமல் வீரவன்ஸ, ஜனாதிபதி காலம் தாழ்த்தாது உடனடியாக வர்த்தமானி அறிவித்தலை வெளியிட வேண்டுமெனக் கேட்டுள்ளார்.

இது தொடர்பாக விமல் வீரவன்ஸ மேலும் கூறியதாவது:-

அமைச்சரவை விவரங்கள், எண்ணிக்கை குறித்து ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுவதைத் தாமதப்படுத்தி வருகின்றார். இது எமக்கு சந்தேகங்களைத் தோற்றுவித்துள்ளது. உடனடியாக வர்த்தமானி அறிவித்தலை வெளியிட வேண்டுமென நாம் ஜனாதிபதியை வலியுறுத்தியுள்ளோம்.

20 உறுப்பினர்களுக்குக் கூடாத வகையிலேயே அமைச்சரவை இருக்க வேண்டுமென்று புரிந்துணர்வு உடன்படிக்கையில் இணக்கம் காணப்பட்டுள்ளது.

தற்போது 21 அமைச்சர்களின் பெயர்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. எனினும், நாடாளுமன்ற செயலாளருக்கு அறிவிக்கப்பட்டிருக்கும் பட்டியலில் விஜேபால மெண்டிஸின் பெயர் குறிப்பிடப்படவில்லை எனத் தெரிய வருகிறது. எனினும், அவர் அமைச்சராக செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்.

20 அமைச்சர்களை விட ஒருவராவது அதிகரிக்கப்படுமானால் புரிந்துணர்வு உடன்படிக்கை முறிந்துவிடும். ஆனால், வர்த்தமானி அறிவித்தல் வெளியாகும் வரை ஜே.வி.பி. எந்த முடிவையும் மேற்கொள்ளாது. உடன்படிக்கையை மீறும் சிறிய செயலுக்கும் ஜே.வி.பி. அரசுடன் ஒத்துப்போக மாட்டாது. தவறான வகையில் அரச வளங்கள் பயன்படுத்தப்படுவதையும் ஜே.வி.பி. தொடர்ந்து கடுமையாக எதிர்க்கவே செய்யும்.

அரசாங்கம் நேர்மையாகச் செயற்படாது போனால், அதன் மூலம் ஏற்படும் விளைவுகளுக்கு அவர்களே பொறுப்பாளர்களாவர் - என்றார். (ஐ)

## குருநகர் சாரணர் வெளிக்கள தின விழா

குருநகர்,செப்.22

யாழ்.மாவட்ட குருளைச் சாரணர் வெளிக்கள தினவிழா அடுத்த மாதம் 6ஆம் திகதி நடைபெற உள்ளது.

இவ்விழாவையொட்டி நடைபெற உள்ள போட்டிகளில் கலந்துகொள்வோர் விண்ணப்பங்களை எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் உதவி மாவட்ட ஆணையாளர் திருமதி ஈ.ஐ. தேவமித்திரனுக்கு அனுப்பி வைக்குமாறு சாரணர் குழுத்தலைவர்களை யாழ்.மாவட்ட ஆணையாளர் ஹோறஸ் வி.மு.இராசசிங்கம் கேட்டுள்ளார். (க-51)

## சாட்டிக்கு விசேட பஸ் சேவை

இன்று நடைபெறவுள்ள சாட்டி சந்தாத்திரை மாதா ஆலய வருடாந்த திருவிழாவுக்கு செல்லும் சில்லாலை, பண்டத்தரிப்பு பகுதி பக்தர்களின் நலனை முன்னிட்டு விசேட பஸ் சேவை நடத்தப்படவுள்ளது.

இன்றையதினம் காலை 7 மணிக்கு சில்லாலையிலிருந்து சாட்டிக்கு இரு பஸ்கள் புறப்படும் என்றும் -

பின்னர் சாட்டியிலிருந்து பிற்பகல் 3.30 மணிக்கு இரண்டு பஸ்கள் சில்லாலைக்கு புறப்படும் என்றும் -

சில்லாலை பஸ் பிரயாணிகள் சங்க செயலாளர் சி.எம் ஜோசவ் தெரிவித்தார். (ஐ-135)

## லொறியில் வெடிப்பொருள்கள்

கண்டி - கொழும்பு வீதியில் நிறுத்தப்பட்டிருந்த லொறியொன்றில் இருந்து பெரும் தொகையான வெடிப்பொருள்கள் பொலீஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வியாழனன்று மாவத்துகம பகுதியில் இருந்து வந்த லொறியொன்று குறிப்பிட்ட வீதியில் நிறுத்தப்பட்டிருந்த போதே பொலீஸ் மோப்பநாய்களால் இந்த வெடிப் பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

சம்பவம் தொடர்பாக லொறிச் சாரதி உட்பட மூவர் கண்டி பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.(உ-10)


# பரத நாட்டிய அரங்கேற்றம்



ஸ்ரீமதி நிறைஞ்சனா சந்துரு
அவர்களின் மாணவியும்
திரு.திருமதி தவத்துரை
தம்பதிகளின் புதல்வியுமான
செல்வி கஜனி
அவர்களின் பரத நாட்டிய அரங்கேற்றம்
இன்று (2001-09-22) சனிக்கிழமை மாலை
கனடா "கலைமன்றத்தில்"
நடைபெறுகின்றது. ஆகவே,
செல்வி கஜனி தவத்துரை
அவர்களின் அரங்கேற்ற நிகழ்வு சிறப்புற அமைவதுடன், அவர் புகழ் நானிலம் போற்றிட எம் நல்வாழ்த்துக்கள்.

*வாழ்த்துவோர்:-*
திருமதி சி.சின்னையா,
திருமதி செ.முருகேசு,
திருமதி கௌரி சின்னத்துரை,
திரு.திருமதி பரமேஸ்வரன்,
*(C.T.B.பருத்தித்துறை)*
குடும்பத்தினர்.

*வரணி இயற்றாலை,*
*வரணி.*
(92378)


# நீங்காத நினைவலைகள்

| *31ஆம் நாள்* | *16ஆம் ஆண்டு* |
|---|---|
|  |  |
| *செல்லக்கிளி ஜெகதாஸ்* | *செல்லக்கிளி யசோராணி* |
| 07.04.1965 | 17.09.1960 |
| 23.08.2001 | 22.06.1985 |

07.04.1965 மண்ணில் 17.09.1960
23.08.2001 விண்ணில் 22.06.1985

திதி:- 22-09-2001 சனிக்கிழமை

சோதனையின் விளிம்பினிலே சோதரர்கள் நீர் சென்ற
பாதையினை, வேல்தனைப் பாய்ச்சிய வேதனையில்
எம் விழிகள் நோக்கி நிற்க....
ஐயிரண்டு மாதங்கள் சுமந்து பெற்றவள் தனியே நின்று
- தவிக்க
ஊர் போற்ற உமை வளர்த்த தந்தை மனம்
- வெந்து நோக
உடன்பிறந்த சகோதரர்கள் ஓலமிட்டு அழுதிட
அன்பு காட்டி உபசரிக்கும் மனைவியவள் மனம்
- கொதிக்க
பாசத்துடன் நீ வளர்த்த பிள்ளை மனம்
- பரிதவிக்க
எம்மைக் கவலையில் ஆழ்த்திவிட்டு - ஆறாத
கண்ணீரில் மிதக்கவிட்டு - காலனவன்
உங்களைக் கவர்ந்து சென்றதேனோ?
உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகிறோம்.

*மடத்தடி,*
*ஊரிக்காடு,*
*வல்வெட்டித்துறை.* (92478)

- தாய், தந்தை, மனைவி,
பிள்ளை, சகோதரர்கள்,
உற்றார், உறவினர்.

# 6ஆம் ஆண்டு கண்ணீர்ப் பூக்கள்



**ஈ.விஜிதா (பபி)**
மலர்வு: 27-01-1983
(பரு/மெதடிஸ்த பெண்கள் கல்லூரி)

**ஈ.திலீபன் (நிபா)**
மலர்வு: 10-05-1984
(பரு/ஹாட்லிக் கல்லூரி)

**ஈ.விஜிஹரன் (சூட்டி)**
மலர்வு: 28-08-1988
(தும்பளை/சிவப்பிரகாச மகாவித்தியாலயம்)

**ஈ.சஜீதா (அம்மு)**
மலர்வு: 31-12-1992

அநியாய அழிப்பு: 22-09-1995

"பாடித்திரிந்த குயில்கள் பாதியிலே பறந்து சென்றீர்கள் .....
கூடி வாழ்ந்த எங்கள் நெஞ்சங்கள் வேதனையில் வாடுதம்மா".

*'ஈஸ்வரன் உணவகம்',*
*ஆஸ்பத்திரி முன்பாக,*
*மந்திகை - புலோலி.*

(C/18324)

*உங்கள் பிரிவால் வாடும்:*
அம்மா, அப்பா,
தங்கைகள்: பவித்திரா, விஜித்திரா.

சனீஸ்வரனை புரட்டாதி மாதச் சனிக்கிழமைகளில் வழிபட்டு வந்தால் வேண்டுவதைக் கொடுப்பார். ஏழரை, அட்டமத்துச் சனி தாக்கம் உள்ளோருக்கு தீயபலன்கள் குறையும்.

| | | | |
|---|---|---|---|
| | | சனி | வி ரா |
| | இராசி சக்கரம் | | |
| | | | வெ |
| செ கே | சந் | | சூ▲ புத |

மாற்றம்

*23 – 09 – 2001* இல் கேட்டை நட்ஷத்திரம் விருச்சிகம் இராசியில் சந்திரன் நிற்கும்.

அரசியலில் பிடிவாதத் தன்மை ஏற்படும். சிலர் திடீரெனக் கட்சி மாறுவார்கள். யுத்த நிலைகளால் மக்கள் பதற்றப்படுவார்கள். இடமாற்றங்கள் சிலருக்கு நடக்கலாம். இந்தியாவில் வன்செயல்கள் தீவிரவாதிகளால் திட்டமிட்டு நடக்க வாய்ப்பு உண்டு. அமெரிக்கத் தாக்குதல்கள் மத்திய கிழக்கு நாடுகளிலும், ஆப்கானிஸ்தானிலும் நடக்க வாய்ப்பு உண்டு. திசைதிருப்பங்கள் திடீரென ஏற்படலாம். அணுஆயுதங்கள் பாவித்து சேதங்கள் ஏற்பட இடமுண்டு 'நெருப்பில் கைவிட்டால் சுடும்' என்பதைச் சிலர் உணர்வர். அமெரிக்க மக்களுக்கு அனுதாபஅலை முஸ்லிம்நாடுகளுக்கு வேதனைகள் ஏற்பட்டு அழிவுகளைச் சந்திக்க நேரிடும். பசுபிக், அத்திலாந்தி, இந்துசமுத்திரக் கரையோர நாடுகளுக்கு இயற்கையின் சீற்றத்தால் அழிவுகளும், இமயமலை நாடுகளுக்கு செயற்கையின் சீற்றத்தால் பதற்றம், அழிவுகளும் கொடுக்கும் எனக்கிரகநிலைகள் காட்டுகின்றன.

## மேடம்

பலவான் பக்கமே உலகம் நிற்கும். இதனால் பலவீனமானவன் கௌரவமாக வாழமுடியாதநிலை ஏற்படும். எனவே தொழில் ஸ்தானத்தில் பெரியவர்களை அனுசரித்து நடவுங்கள். சிலர் சொல்வது பிடிக்காது தான் ஆயினும் பொறுமையாக இருக்கவும். கட்டுமீறிய செலவு, குடும்பக்கவலை, இடமாற்றங்கள் என்பன ஏறபடும். எதிர்ப்பாலார்கள் குறைகேட்பார்கள். உஷ்ண பீடைகள், சலப்பிரச்சினை, பதற்றநிலை அடிக்கடி வரலாம். காணி பூமியில் செலவுகள் அதிகரிக்கும். பிரயாணத்துறை, பாதுகாப்புத் துறை, மருந்துத்துறை, வியாபாரத்துறை போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் இலாபங்கள் அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- புதன், வெள்ளி பிற்பகல்.

## இடபம்

இசையினால் உலகமே அசையும். ஒலி, ஒளிதான் உலகம் முழுதும் கலந்துள்ள சக்தியின் பிரதிபலிப்பாகும். தொழில் ஸ்தானத்தில் புதிய திட்டங்களைப் போடுவீர்கள். பொதுத் தொண்டு செய்வீர்கள். கலைத் தொடர்பு, புதிய நண்பர்கள் வரவு, கொடுக்கல், வாங்கலால் பிரச்சினைகள் என்பன வர இடமுண்டு. நாரி உளைவு, பித்தம், தொண்டை வருத்தம் என்பன வர இடம் உண்டு. இசைத் துறை, ஹோட்டல்துறை, செய்தித் துறை, வியாபாரத்துறை போன்ற துறையினர்களுக்கு மாற்றங்களும், நன்மைகளும் ஏற்படும்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- புதன், வெள்ளி பிற்பகல்.

# இந்த வார இராசி பலன்

# 23 - 9 - 2001 - 29 - 9 - 2001

## மிதுனம்

அது வேண்டும், இது வேண்டும் என்று அவசரப்படாதீர்கள். உலகில் எந்தச் செயற்பாட்டிலும் ஒரு பகுதி வீணாகத்தான் போகும். நாம் சாப்பிடும் சாப்பாடு முழுவதும் செமிக்கின்றதா? இடமாற்றங்களால் அவதி ஏற்படலாம். கற்பனை உலகில் சஞ்சரிக்கின்றீர்கள். உலகம் முழுவதும் கவர்ச்சி மயம் தான். அதற்காகச் சிலரின் பசப்புவார்த்தைகளை நம்பி ஏமாறாதீர்கள். தலைவலி, யோசனை, சலிப்பு, களைப்பு தோல் வருத்தம் என்பன வர இடமுண்டு. சட்டத் துறை, வங்கித்துறை, வியாபாரத்துறை, செய்தித்துறை போன்ற துறையினர்களுக்கு மாற்றங்கள் ஏற்படும்.

★ அதிர்ஷ்டநாள்:- புதன்.

## மகாதேவா ஜோதிடம்

## கடகம்

கைகளைக் கோத்து நின்றால் போல் சமாதானம் வந்துவிடுமா? உள்ளத்தால் விட்டுக்கொடுக்கும் சமாதான உணர்வுகளால்தான் சமாதானம் வரும் நாம் ஒருவரை ஒருவர் நம்பவேண்டுமே. தொழில்ஸ்தானத்தில் பதற்ற நிலை விட்டுவிட்டு வந்தாலும் அமைதியாக இருப்பீர்கள். புதிய நண்பர்கள் உதவுவார்கள். வாகனச் செலவுகள் அதிகரிக்கும். இடமாற்றங்கள் ஏற்பட இடமுண்டு. கலக்கம், பிறசர், சலவருத்தம், மனப்பயம் என்பன ஏற்படும். கடல்துறை, போக்குவரத்துத்துறை, நகைத்துறை, கமிஷன் வேலைகள், அரசியல் துறை போன்ற துறையினருக்கு இலாபங்கள் அதிகரிக்கும்.

★ அதிர்ஷ்டநாள்கள்:- புதன், வியாழன்.

## சிங்கம்

பிறரின் பொறாமையாலும் பிடிவாத தன்மையாலும் எதையும் உங்களிடம் தட்டிப்பறிக்க முடியாமல் இருப்பதனாலும் சிலர் உங்களைப் பற்றி வீணாகக் கதைகளைப் பரப்புவார்கள். எதற்கும் நிதானமாக, பொறுமையாக இருங்கள். உண்மைப்படி நடப்பவர்களுக்கு எந்தவித சோதனைகள் வந்தாலும் உறுதியுடன் இருந்து செயற்படுங்கள். கைகால்நோ உஷ்ணபீடைகள், தொண்டைநோ, மூட்டுவலி, சலவருத்தம் என்பனவரும். தோல்கடி வரலாம். சட்டத்துறை, ஆலயத்தொண்டு, மரத்துறை, வங்கித்துறை, குருத்துறை, நிர்வாகத்துறை போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் அதிக நன்மைகள் அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- புதன், வியாழன், சனி.

## கன்னி

என்ன பிரச்சினை? உலக வாழ்வில் பலவித அனுபவங்கள் வரத்தான் செய்யும். பொறுமையுடன் இருக்கப் பழகிக் கொள்ளல் வேண்டும். காசுக்காக இந்த உலகம் பலதையும் செய்யும். தொழில் ஸ்தானத்தில் மாற்றங்கள் ஏற்படும். தூரதேசப் பிரயாணங்கள் சிலருக்குக் கொடுக்கலாம். எதிர்ப்பாலார்கள் எதிர்ப்பார்கள். கிருமித்தாக்கம். வாதரோகம், உஷ்ணபீடைகள் என்பன கொடுக்க இடமுஉண்டு. மூலச்சூடு வேதனை தரும். வைத்தியம் செய்ய நேரிடும். செய்தித்துறை, வியாபாரத் துறை, ரி.வி, வீடியோ, கொம்பியூட்டர், மின்சாரத் துறை, குருத்துறை போன்ற துறையினர்கள் நன்மை அடைவார்கள். சிலருக்கு மாற்றங்கள் கிடைக்கும்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- புதன், வியாழன், வெள்ளி பிற்பகல், சனி.

## துலாம்

உத்தயபூீர்கள் எடுத்த பொறுப்பை திறமையுடன் செய்ய வேண்டுமெனப் போராடுவார்கள். குறை குற்றம் சகஜம். தொழில் ஸ்தானத்தில் அதிக பொறுப்புக்களால் அடிக்கடி களைப்பு, மனச்சோர்வு ஏற்படும். ஆயினும் தொடர்ந்து பொறுமையுடன் முன்னேறுவீர்கள் எதிரிகளை வெல்வீர்கள். பெரியவர்கள், நண்பர்களின் உதவிகள் கிடைக்கும். வீட்டுச் செலவுகள் அதிகரிக்கும். தலைவலி, வயிற்றுவருத்தங்கள், யோசனை என்பன அதிகரிக்கும். குருத்தொழில், சட்டத் துறை, பிரயாணத்துறை, நகைத்துறை, சந்தைத்துறை போன்றோருக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- புதன், வியாழன், சனி.

## விருச்சிகம்

வேண்டுவது ஒன்று, கிடைப்பது இன்னொன்று. நாம் எவ்வளவு போராடினாலும் – கிரகங்களின் அமைப்பில் நிர்ணயிக்கப்பட்டபடியே தான் எமக்கு எதுவும் கிடைக்கும். எனவே தொழில் ஸ்தானத்தில் பொறுமையாக இருப்பீர்கள். உங்களை எதிரிகள் வெல்ல முடியாது. பொறுமையை அடிக்கடி கையாளுவதனால் நன்மைகள் அதிகரிக்கும். எதிர்ப்பாலார்கள் எதிர்ப்பார்கள். மூக்கு, தொண்டை, முதுகு, நரம்பு, சலவருத்தம், கண்நோய், உஷ்ணபீடைகள் என்பன வருத்தலாம். புத்திரர்களால் யோசனை, சந்தோஷம் ஏற்படும். புடைவைத் துறை, வங்கி, சந்தை, வியாபாரம், கம்பியூட்டர், குருத்துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு மாற்றங்கள் ஏற்படும்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- புதன், வியாழன், சனி.

## தனுசு

இந்தக் காலத்தில் கூட்டு முயற்சிகளால் குறையும், குற்றமும் தான் வரும். எனவே தனித்து நின்று உங்கள் தனித்துவத்தை நிலைநாட்டுங்கள். தொழில் ஸ்தானத்தில் நன்மை, தீமை கலந்து நடக்கும். அடிக்கடி சிலருடன் விவாதங்கள் ஏற்படும். தூரதேசச் செய்திகள் நிறைவைத் தரும். இடமாற்றம் சிலருக்கு ஏற்பட இடமுண்டு. அதிகாரிகள் உதவிகள் தருவார்கள். நாரிநோ, கைகால் விறைப்பு, இரத்த வருத்தம், வயிற்றில் புகைச்சல், உஷ்ணபீடைகள் என்பன வரும். கடல்துறை, மருந்துத்துறை, செய்தி, சாய்ப்புச்சாமான் சம்பந்தமான துறைகள், பாதுகாப்புத்துறை, குருத்துறை, தொடர்பானவர்களுக்கு நன்மைகள் ஏற்படும்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- புதன், வியாழன், சனி.

## மகரம்

கண்ணில் தோன்றாத எத்தனையோ விஷயங்கள் சுற்பனை வளர்ச்சிகளைத் தரும். தொழில் ஸ்தானத்தில் ஆதரவுக்கரங்களை பலர் நீட்டுவார்கள் ஆயினும் அடிக்கடி மனச்சோர்வு கொடுக்கும். அடிக்கடி ஒருவரில் ஆத்திரப் படுவீர்கள். அது ஏன் எனச்சிந்தியுங்கள். இடமாற்ற யோசனை வரும். விட்டுவிட்டுப் பதற்ற நிலை நீங்கள் இருக்கும் இடங்களில் ஏற்பட இடமுண்டு. வாய்வுத் தொல்லை, நாரிநோ, கைகால் பிடிப்பு, மனக்குழப்பம் என்பன ஏற்படலாம். குருத் துறை, சட்டத்துறை, பாதுகாப்புத்துறை, வியாபாரத் துறை, கடல் வேலைகள், மருந்துத்துறை போன்ற துறையினர்கள் அதிக நன்மை அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- வியாழன், வெள்ளி பிற்பகல்; சனி.

## கும்பம்

மனிதர்கள் ஒருவரை, ஒருவர் ஏமாற்றுவதிலும் பழிதீர்ப்பதிலுமே காலத்தைக் கழிக்கின்றார்கள். அமெரிக்கா ஏன் பழிதீர்க்க யோசிக்கின்றது? ஏழை மக்கள் துன்பப்படப் போகின்றார்கள். உங்கள் தொழில் ஸ்தானத்தில் பழிதீர்ப்பவர்களால் வேதனைகள் வரலாம். செய்திகளால் நன்மைவரும். அடிக்கடி ஏன் பயப்படுகிறீர்கள்? குடும்பத்தினருக்காகவும் பொதுத் தொண்டுக்காகவும் ஓடியாடித்திரிய நேரிடும். உங்கள் குழந்தைகளுக்கு சுகயீனம் வர இடமுண்டு. கவனமாக இருக்கவும். எண்ணெய்த் துறை, வியாபாரத்துறை, குருத்துறை, செய்தித்துறை போன்றதுறையினர்கள் நன்மைகள் அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- வியாழன், சனி.

## மீனம்

காரியங்கள் கைகூடுவதனால் மகிழ்ச்சியும் உற்சாகமும் வரத்தான் செய்யும். தொழில் ஸ்தானத்தில் பல அனுகூலங்கள் சாதகமாகும். மேலதிகாரிகள் உதவுவார்கள். வசிகரத்தன்மை பலன் தரும். வீடு, வாகனச் செலவுகள் அதிகரிக்கும். தூரத்துச் செய்திகள், பிரயாணங்கள் நன்மை தரும். உறவினர்கள், நண்பர்கள் உதவி செய்வார்கள். சளித் தொல்லை, நாரிநோ, அஜீரணம், உஷ்ண குளிர் பீடைகள், பித்தவருத்தம் என்பன வரும் பிரயாணத்துறை, செய்தித்துறை, மருந்துத்துறை. குருத்துறை போன்ற துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- வியாழன், சனி.


# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை விவசாயப் பயிற்சி ஆசிரியை
**திருமதி குணவதி தெய்வேந்திரம்**
அவர்களின் கணவர்

**வைத்திலிங்கம் தெய்வேந்திரம்**

அவர்களின் மறைவை ஒட்டி அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர்கள். ஆசிரியர்கள்,
ஆசிரியர்கள் நலன்புரிச்சங்கம்.
யா/அரியாலை கிழக்கு அ.த.க. பாடசாலை,
(92549) யா/பூம்புகார் அ.த.க.பாடசாலை.

நீங்கா நினைவுகளின்

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 23 – 08 – 1919



உதிர்வு 04 – 09 – 2000

# அமரர் இளையதம்பி இராசையா (J.P.)

(ஓய்வுபெற்ற தலைமைப் பாதுகாவலர்,
புகையிரதத் திணைக்களம்)

திதி:- 22–09–2001

பாசத்தின் ஒளிவிளக்காய் எமை வளர்த்த அன்புப்பப்பா, அப்பப்பா ஆண்டு ஒன்று சென்றாலும் உங்கள் நினைவுகள் அழியாது!

சிறப்புமிகு சீர்வாழ்வும், பெருஞ் செல்வப் பேறும் விட்டு, இறப்பதனைச சாட்டாக்கி எமை விட்டுப் பிரிந்தீர் ஏனோ? வீட்டின் பேரொளி விளக்கே! திடீரென நீங்கள் அணைந்ததேனோ?
என்றும் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

221, கண்டி வீதி.
கச்சேரியடி,
யாழ்ப்பாணம். (92543)

25 வருடங்களாக வெளிவாரிப் பட்டப் படிப்புகளுக்கு
தனித்துவமாக இயங்கும் நிறுவனம் யாழ்நகரில்



# THE COLLEGE OF DEGREE STUDIES

*57/13, Stanley Rd., Jaffna*

**வெளிவாரிப் பட்டப் படிப்புகள்**
**கல்வியாண்டு 2002/2003**

யாழ்., பேராதனைப் பல்கலைக்கழகங்களின் பட்டப் பாட நெறிகளான

- ✣ கலை முதற்தேர்வு (G.A.Q.)
- ✣ வர்த்தக முதற்தேர்வு (First in Commerce)

க.பொ.த.உயர்தரம் 3 பாடங்களில் சித்தி அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்கள், அண்மையில் க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி முடிவுகளை எதிர்பார்த்திருப்பவர்களும் விண்ணப்பிக்கலாம்.

விவரத்தினையும் விண்ணப்பப் படிவத்தினையும் ரூபா 10/= செலுத்தி நேரில் அல்லது தபால் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

*விண்ணப்ப முடிவு திகதி:* 06.10.2001
*விரிவுரைகள் 07.10.2001இல் ஆரம்பமாகின்றன.*

*இயக்குநர்,*
**பட்டப் படிப்புகள் கல்லூரி**
*57/13, ஸ்ரான்லி வீதி,* (இலங்கை வங்கி முன்பாக) *யாழ்ப்பாணம்.*

(92528)


# நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்

***அமரகவி சனசமூக நிலையம், கோண்டாவில்.***

எமது சனசமூக நிலையத்துக்கு திருத்த வேலைகளுக்காக ரூபா ஐம்பதாயிரமும், பாலர் பாடசாலைக் கட்டடத்துக்காக ரூபா 3 1/2 லட்சமும் ஒதுக்கீடு செய்து உதவியதுடன், எமது பகுதி வீதிகள் பலவும் திருத்தஞ் செய்துமுதவியவர்களான –



வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகாரங்கள் அமுலாக்கல் இந்து கலாசார அமைச்சரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமுமான மாண்புமிகு அமைச்சர்

**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களுக்கும்



நல்லூர் பிரதேச சபைத் தலைவரும்
ஈ.பி.டி.பியின்
யாழ்.மாவட்ட பிரதி அமைப்பாளருமாகிய
**உயர்திரு. க.மணிபல்லவராஜன்**
**(நிஷாந்தன்) J.P.U.M.**
அவர்களுக்கும்


நல்லூர் பிரதேச சபை உபதலைவர்
**துரை.தவராசா**
அவர்களுக்கும் மற்றும்

அலுவலகத் தோழர்கள் யாவருக்கும்
எமது சனசமூக நிலையத்தின் சார்பிலும்
இப்பகுதிப் பொதுமக்கள் சார்பிலும்
எமது நன்றிகளையும் பாராட்டுக்களையும்
தெரிவிப்பதுடன், மேன்மேலும் அவர்களது
சேவை தொடரவேண்டும் என்று
உளமார வாழ்த்துகின்றோம்.

*பாரதி வீதி,*
*கோண்டாவில் மேற்கு,*
*கோண்டாவில்.* (92550)

- நிர்வாகிகள்
"அமரகவி"
சனசமூக நிலையம்.

# நெஞ்சை விட்டகலாத முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 02 - 11 - 1929

உதிர்வு 02 - 10 - 2000

**அமரர் செல்லையா ஐயாத்துரை**
*(செம்பியன்பற்று)*

*திதி: 22-09-2001*

"யாக்கை அகன்று ஒன்றல்ல - ஆண்டு ஆயிரம் சென்றாலும் அகலாது நும் நினைவு".

*ஆத்மா சாந்திபடையப் பிரார்த்திக்கின்றேன்.*

*புலோலி.*

ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன்,
*தலைவர்,*
*பருத்தித்துறை பிரதேச சபை.*

(C/18351)

## சிற்றூழியருக்கு நிரந்தர நியமனம்

யாழ்ப்பாணம்,செப்.22

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்விச் செயலாளரின் அனுமதி பெற்று யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளில் கடமையாற்றி வருகின்ற அமைய நிவாரண சிற்றூழியர்களுக்கு விரைவில் நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளது.

நிரந்தர நியமனம் கிடைக்காத சிற்றூழியர்கள் அனைவரையும் உரிய ஆவணங்களுடன் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.வலயக் கல்விப் பணிமனைக்கு வருகை தருமாறு நிர்வாக உத்தியோகத்தர் இ.நாகராசா தெரிவித்துள்ளார். (ஐ-10)

## தபால்கள் வந்தன

யாழ்ப்பாணம்,செப்.22

காங்கேசன்துறைக்கு நேற்றுமுன்தினம் வந்த செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பலில் குடாநாட்டுக்கான வெளியூர்த் தபால்கள் அடங்கிய 392 தபாற்பொதிகள் எடுத்து வரப்பட்டன.

இதே கப்பலில் குடாநாட்டில் சேகரிக்கப்பட்ட தபால்கள் அடங்கிய 47 தபாற்பொதிகள் அனுப்பி வைக்கப்பட்டதாகத் தபாற்திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை -

யாழ்.பிரதம தபாலகம் தவிர்ந்த குடாநாட்டின் சில தபால் நிலையங்களுக்குச் சாதாரண முத்திரைகளும் இக்கப்பலில் எடுத்து வரப்பட்டதாக அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (ஐ-10)

## வலைப்பந்தாட்ட நடுவர் பரீட்சை

யாழ்ப்பாணம்,செப்.22

இலங்கை வலைப்பந்தாட்ட சங்கத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட வலைப்பந்தாட்ட சங்கத்தினால் நடுவர்களைத தெரிவு செயவதற்கான பரீட்சை நடத்தப்படவுள்ளது.

வலைப்பந்தாட்ட நடுவர்கள் தரம் 'சி' மற்றும் தரம் 'பி' ஆகிய பரீட்சைகளில் தோற்ற விரும்புவோர் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை எதிர்வரும் 27ஆம் திகதி வியாழக்கிழமைக்கு முன்பு ஒப்படைக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பப் படிவங்களை 'பொருளாளர், யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கம், உடற்கல்வி அலகு, யாழ். பல்கலைக்கழகம்' எனும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம் என்றும் - மேலதிக விவரங்களுக்கு யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி திருமதி ஏ.எப்.ஜே.ரூபசிங்கத்துடன் தொடர்பு கொள்ளலாம் எனவும் - அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-10)

## இளைஞர் சேவைகள் மன்றத்தின் கலாசார போட்டி

யாழ்ப்பாணம்,செப்.22

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ்மாவட்ட அலுவலக இளைஞர் விருது வழங்கும் கலாசாரப் போட்டிகள் இன்றும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் காலை 9 மணிக்கு ஸ்ரான்லிக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இன்று சனிக்கிழமை குறுநாடகம், அபிநயநடிப்பு, நாட்டுக்கூத்து ஆகிய போட்டிகளும் -

நாளை ஞாயிற்றுக்கிழமை பரதநாட்டியம், கிராமியப்பாடல், சாஸ்திரியப்பாடல், மிருதங்கம், ஓர்கன், வயலின், அறிவிப்பாளர் ஆகியவற்றுக்கான போட்டிகளும் இடம்பெறவுள்ளன.

போட்டிகளில் கலந்துகொள்வதற்கு விண்ணப்பித்தோருக்கு இதுவரையும் அழைப்புக் கடிதங்கள் கிடைக்காது விட்டிருந்தால் போட்டி நடைபெறும் குறிப்பிட்ட தினங்களில் அங்கு சமுகமளிக்குமாறு மன்றத்தின் உதவி இயக்குநர் அறிவித்துள்ளார்.(ஐ-10)

## கராத்தே கழகங்களின் கூட்டம்

யாழ்ப்பாணம்,செப்.22

மானிப்பாய் பிரதேச சபையின் அனுசரணையுடன் நடத்தப்பட உள்ள 'யாழ்.மாவட்டத்திற்கான கராத்தே வெற்றிக் கிண்ணப் போட்டிகள்' தொடர்பான கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு யாழ் மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் யாழ்.மாவட்டத்திலுள்ள சகல கராத்தே கழகங்களையும் பங்குபற்றுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஐ-ரி)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



**திரு.அ.விஜயநாதன்**
B.A. Dip. in Ed. S.L.P.S. I
*(அதிபர், யா/அல்வாய் வடக்கு றோ.க.த.க.பாடசாலை)*

அதிபர் தரம் Iக்கு திறமை, சேவை மூப்பு அடிப்படையில் பதவி உயர்த்தப்பட்டுள்ளார். அவர் மேலும் பல பதவி உயர்வுகளைப் பெற்று, பல்லாண்டு காலம் வாழ்கவென்று ஆலடிப் பிள்ளையாரை வேண்டுகின்றோம்.

*அல்வாய்.*

ச.சி.பரஞ்சோதி, து.ஶ்ரீதரன்,
மா.சின்னராசா, ந.யோகரத்தினம்,
திரு.மனோகரா.

(92556)

## அளவெட்டி சைவ வாலிப சங்கம் நடத்தும் பண்ணிசை, பேச்சு, கட்டுரைப் போட்டிகள - 2001

மேற்படி போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் மாணவர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

**போட்டி விவரம்:**

அளவெட்டியைப் பிறப்பிடமாகவோ அல்லது வதிவிடமாகவோ கொண்ட பாடசாலை மாணவர்கள் மட்டும் இப்போட்டிகளில் பங்குபற்றத் தகுதியுடையவர்கள் ஆவர். இப்போட்டிகளுக்கு விண்ணப்பம் செய்வதற்கான விவரங்களை, "தலைவர், சைவ வாலிப சங்கம், கும்பழாவளைப் பிள்ளையார் கோயில், அளவெட்டி" என்னும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

*விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய இறுதித் திகதி:* 05.10.2001.

**போட்டிகள் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியில் 31.10.2001 புதனன்று நடைபெறும்.**

க.நாகலிங்கம், காரியதரிசி.
செ.வேலாயுதபிள்ளை தலைவர்.

(92547) அளவெட்டி சைவ வாலிப சங்கம்.

## மானிப்பாய் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் பயிற்சி அச்சுக்கோப்பாளர்

எமது சங்கத்திற்கு மேற்படி பதவிக்கு பயிற்சி அடிப்படையில் பின்வரும் தகைமைகளுடன் விண்ணப்பம் கோரப்படுகின்றது.

க.பொ.த. (சா/தரம்) சித்தியுடன் ஆங்கிலம், தமிழ் ஆகியவற்றில் அச்சுவேலை தெரிந்திருத்தலும், இயந்திரம் இயக்குதல், புத்தகம் கட்டுதல் போன்றவற்றில் அனுபவமும் இருத்தல் வேண்டும்.

வயது: 30 - 45 வரை.

விண்ணப்பிக்க விரும்புவோர் சங்கத்தினால் வழங்கப்படும் விண்ணப்பப் படிவத்தினைப் பூர்த்திசெய்து *தலைவர், மானிப்பாய் பல நோக்குக் கூ. சங்கம், மானிப்பாய்* என்ற விலாசத்துக்கு 28.09.2001 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

தலைவர்,
மானி.ப.நோ.கூ.சங்கம்,
மானிப்பாய்.

(C-18350)

கௌரவ மாண்புமிகு அமைச்சர்
**கே.என்.டக்ளஸ் தேவானந்தா** அவர்களுடன்

## யாழ்.மாவட்ட விவசாயிகள் சந்திப்பும் - கலந்துரையாடலும்

*காலம்:* 2001.09.25 செவ்வாய்க்கிழமை
காலை 10.00 மணி

*இடம்:* வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு யாழ்.அலுவலகம்.

*கலந்துரையாடப்படவுள்ள விடயங்கள்*

- ☆ விவசாயச் செய்கையை ஊக்குவித்தலும் சந்தைப்படுத்தலும்.
- ☆ செய்கைபண்ணப்படாத தரிசு நிலங்களைச் செய்கைக்குக் கொண்டு வருதல்.
- ☆ வாழை அழிவு நஷ்டஈடு.
- ☆ மரக்கறி கொள்வனவும் உற்பத்தியும்.
- ☆ மரம் நடுகைத் திட்டம்.
- ☆ விவசாயிகளுக்கு உபகரணம் வழங்கல்.
- ☆ புதிய கமநல கேந்திர நிலையம் இரண்டு அமைத்தல்.
- ☆ விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர் நியமனம் (கொவிநியாமக)
- ☆ விவசாய உள்ளீடுகளை நியாய விலைக்கு வழங்கல்.
- ☆ விவசாய ஓய்வூதியம் சம்பந்தமான பிரச்சினைகள்.

அனைத்து விவசாய சம்மேளனங்களையும், விவசாயிகளையும் இக்கலந்துரையாடலில் பங்குபற்றி பயன்பெறுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

கமநல அபிவிருத்தித் திணைக்களம்,
யாழ்.மாவட்டம்.

(C/18349)

## சரவணையில் தடகளப்போட்டி, வண்டிச் சவாரி

நாரந்தனை விவசாய சம்மேளனத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மாட்டுவண்டிச் சவாரியும், தடகளப் போட்டிகளும் இன்றும் நாளையும் சரவணை, நாய்க்குட்டியான் வாய்க்கால் சவாரித்திடலில் நாரந்தனை விவசாய சம்மேளனத் தலைவர் தி.சூரியகாந்தன் தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வுக்கு ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் ஜேஎக்ஸ் செல்வநாயகம் பிரதமவிருந்தினராகவும், ஊர்காவற்றுறை பிரதேச சபைத தலைவர் ந.மதனராஜா, யாழ்.மாவட்ட விவசாய உதவி ஆணையாளர் க.சுநதரேசன் ஆகியோர் சிறப்புவிருத்தினர்களாகவும் கலந்துகொள்வர்.(க-16)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### செல்வி அ.கனகரத்தினம்

*(அதிபர், யா/வட.இந்து மகளிர் கல்லூரி)*

அயராப் பணியினால் அனைவர் மனங்களிலும் நிறைந்து, சேவையே மூச்சாக நின்று, சீர்பெறக் கருமமாற்றி, அதிபர் சேவை தரம் I இற்குப் பதவியுயர்வு பெற்றமையைப் பாராட்டுகின்றோம். பாசப் பிணிப்புடன் பல்லாண்டு அவர் சேவை தொடர ஆண்டவன் ஆசி வழங்கட்டும்.

*'தொடரட்டும் அவர்பணி*
*வளரட்டும் இந்துமகள்'*

- வாழ்த்தும் பாடசாலைச் சமூகம்.

## பாராட்டுகின்றோம்



### திருமிகு வேலுப்பிள்ளை பாலசுப்பிரமணியம்

(B.A. Dip. in. Edu., PGDEM, S.L.P.S. - I)

*(அதிபர், யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்)*

வரணி, இயற்றாலை கலைவாணி சனசமூக நிலையஸ்தாபகரும், யா/வரணி மகாவித்தியாலய பழைய மாணவருமான திரு.வே.பாலசுப்பிரமணியம் அவர்கள் கற்றலில் சிறப்புப் பட்டங்களும், கடமைதனில் நல் ஆளுமையும், பொதுப் பணிகளில் ஆர்வமும் ஒருங்கிணைந்து உயர் பதவியொன்றினைப் பெற்றமையையிட்டு மனதாரப் பாராட்டுவதுடன், மேன்மேலும் பல உயர்வுகளைப் பெற்று பணிதனில் சிறப்புற சுட்டிபுரம் கண்ணகை அம்பாளின் அருளாசியை வேண்டி நிற்கின்றோம்.

கலைவாணி சனசமூக நிலையத்தினர்,
வரணி, இயற்றாலை.

(C/18360)

## இலங்கை வங்கி அறிவித்தல்

யாழ்.மாவட்டத்திலுள்ள சகல இலங்கை வங்கி கிளைகளிலும் எதிர்வரும் திங்கட்கிழமை (24.09.2001) தொடக்கம் வாடிக்கையாளர்களுக்கான வியாபாரக் கொடுக்கல் வாங்கல் நேரம் காலை 9.00 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணிவரை நடைபெறும் என்பதை சகல வங்கி வாடிக்கையாளர்களுக்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

பிரதேச முகாமையாளர்,
இலங்கை வங்கி,
யாழ்ப்பாணம்.

(C-18356)

## இவரைக் காணவில்லை



### ஜெயரட்ணம் கனோஜி (வயது15)

39, கொண்டலடி வீதி, நல்லூரைச் சேர்ந்த ஜெயரட்ணம் கனோஜி (யா/பரியோவான் கல்லூரி மாணவன், **Yr.10**) என்பவரைக் கடந்த 20-09-2001 இல் இருந்து காணவில்லை. பாடசாலைச் சீருடையுடனும், புத்தகங்களுடனும் சயிக்கிளில் சென்ற இவரைக் கண்டவர்கள் கீழ்க்குறிப்பிட்டுள்ள விலாசத்துக்குத் தொடர்பு கொள்ளவும்.

தகவல்:
சு.ஜெயரட்ணம் (தகப்பன்)

*39, கொண்டலடி வீதி,*
*நல்லூர்.*

(92567)

## பிரதேச இணைப்புக் குழு கூட்டம்

யாழ்ப்பாணம்,செப்.22

பச்சிலைப் பள்ளி பிரதேச செயலகத்தால் நேற்று நடத்தப்படவிருந்த பிரதேச இணைப்புக் குழுக் கூட்டம் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 10 மணியளவில் புலோலியில் அமைந்துள்ள பளை பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக பிரதேச செயலர் தெரிவித்துள்ளார். (க-3)

## வங்கிப் பயிற்சி உத்தியோகத்தருக்கு தகுதிகாண் பரீட்சை

யாழ்ப்பாணம்,செப்.22

இலங்கை வங்கியின் பயிற்சி உத்தியோகத்தருக்கான தகுதிகாண் பரீட்சை நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9.30 மணிமுதல் நண்பகல் 12.30 மணிவரை வேம்படி மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இந்தப் பரீட்சையில் தோற்றவுள்ளவர்களை அடையாள அட்டை, அனுமதி அட்டை ஆகியவற்றுடன் சமுகமளிக்கும்படி கேட்கப்பட்டுள்ளது.

இந்தப் பரீட்சையில் தோற்றவிருப்பவர்களின் பெயர், விவரம் வருமாறு:-

கே.தர்மபாலன் (மானிப்பாய்), செல்வி எம்.மைதிலி (ஆனைக்கோட்டை),செல்வி கே. சரவணபவான் (தாவடி), என்.நரேந்திரா (கொக்குவில் கிழக்கு), செல்வி எஸ். தர்மலிங்கம் (திருநெல்வேலி), எஸ்.உதயபாலன் (சுதுமலை தெற்கு), செல்வி ரீ.தங்கவேலு (துர்க்காபுரம்) -

செல்வி பீ. குணராசா (நீராவியடி), வி.கலைச்செல்வன் (கந்தர்மடம்), என். கிருஷ்ணகுமார் (நல்லூர்), செல்வி எல்.தனபாலசிங்கம் (யாழ்ப்பாணம்), ரீ.தனேந்திரன் (கொட்டடி), செல்வி தீ.வல்லிபுரநாதன் (யாழ்ப்பாணம்), செல்வி எம். சுந்தரலிங்கம் (கைதடி), செல்வி எஸ். வான்மதி (நல்லூர் கிழக்கு). (க-3)

**DCS**
**COLLEGE OF COMPUTER TECHNOLOGY**

எமது நிறுவனத்தினால் நடத்தப்படவிருக்கும் புலமைப்பரிசில் பரீட்சை அநேக மாணவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க 30.09.2001 வரை நீடிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பிக்கத் தவறியவர்கள் உடனடியாக விண்ணப்பிக்கவும்.

124/2, Palaly Road,
Thirunelvely,
Jaffna.

N.M.M.V. Road,
Nelliyadi.

(C-18359)

**புலமைப்பரிசில் - 2001**

பயிற்சிப் பரீட்சை 2 இல் பரிசுக்குரிய மாணவர்கள்

வ.தனுயன் - 189
*(யா/இந்து ஆ.பாடசாலை)*
ந.சதீஸ்காந்த் - 184
*(யா/ஆனைப்பந்தி மெ.மி.வி.)*
வி.தீபன்ராஜ் - 178
*(யா/ஆனைப்பந்தி மெ.மி.வி.)*

*அடுத்த பரீட்சை -*
நாளை ஞாயிறு - 8.30 மணி

**நாவலர்** ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம

(92569)

**ராஜா** யாழ்ப்பாணம்

அர்ஜுன், சோனாலி
*மற்றும் பலர் நடிப்பில்*

**கண்ணோடு காண்பதெல்லாம்**

தினசரி :- 10.30, 2.30 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு :- 10.30, 2, 5 (புதிய நேரம்)
24-09-2001 முதல்

**அலாவுதீனும் அற்புத விளக்கும்**

(C/18274)

**நாகம்ஸ்** சுன்னாகம்

*அர்ஜுன், மனிஷாகொய்ராலா, ரகுவரன்*
நடிப்பில்

**முதல்வன்**

(ரீல்ஸ்)

காட்சிகள்:- 11.00, 2.00 (புதியநேரம்)
ஞாயிற்றுக் கிழமைகளில் மட்டும் விசேட காட்சி பி.ப. 6.00

(92570)

## கேள்வி அறிவித்தல்

கீழ்வரும் வேலைக்கான கேள்விகள் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகக் கேள்விச் சபையினரால் 2001ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 3ஆம் திகதி புதன்கிழமை காலை 11.00 மணிவரை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டு அன்றைய தினமே முற்பகல் 11.30 மணிக்குத் திறக்கப்படும். அச்சமயம் கேள்விதாரர் அல்லது அவருடைய பிரதிநிதி சமுகமளிக்கலாம்.

| வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்வி வைப்புப் பணம் |
|---|---|---|
| பொது மீன் சந்தை நிர்மாணித்தல் சென்.தோமஸ், பருத்தித்துறை. | 5,000.00 | 300.00 |

1. மேற்படி வேலைக்கு இக்ராட் (ICTAD) நிறுவனத்தின் கட்டடம் நிர்மாணிப்பதற்கு தரம் எம் 9இலும் அல்லது அதற்குமேலும் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களும், பருத்தித்துறை பிரதேச செயலக எல்லைக்குள் பதிவுசெய்யப்பட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களும் விண்ணப்பிக்கத் தகுதி யுடையவர்களாவார்கள்.

2. தகுதியுடையோர் மட்டும் உரிய கேள்வி வைப்புப் பணத்தைச் செலுத்த அனுமதிக்கப்படுவர். வைப்புப் பணத்தை நல்லூர், செட்டித்தெரு இல.29 இல் அமைந்துள்ள அலுவலகத்தில் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்று, கேள்விப் பத்திரங்களை 2001ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 28ஆம் திகதி நணபகல் 12.00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.

3. இவை தொடர்பான மேலதிக விவரங்களைப் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், இல.29, செட்டித்தெரு, நல்லூர்.
அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம். மேலும் கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பார்வையிடலாம்.

**பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,**
பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம்,
இல.29, செட்டித் தெரு,
நல்லூர்.

(C-18355)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி அல்லியம்மா நடராசா

யாழ்ப்பாணம், அத்தியடியைச் சேர்ந்தவரான திருமதி அல்லியம்மா நடராசா நேற்று (21.09.2001) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான (அத்தியடி) சபாபதிப்பிள்ளை - வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகளும் கந்தர்மடத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற சதாசிவம் நடராசாவின் அன்பு மனைவியும் வடிவாம்பாள் (ஜேர்மனி), காலஞ்சென்ற பத்மநாதன் (தேசிய கடதாசிக் கூட்டுத்தாபனம், வாழைச்சேனை) மற்றும் கணேசநாதன், தர்மாம்பாள், ஜெகதாம்பாள், தேவாம்பாள், காலஞ்சென்றவர்களான விசுவநாதன் (விசு), கணநாதன் (சபா) ஆகியோரின் அன்புத் தாயாரும் சண்முகராஜா (ஜேர்மனி), காலஞ்சென்ற ஸ்ரீ ஞானரஞ்சிதம் மற்றும் நித்தியானந்ததேவி ஆகியோரின் அன்பு மாமியும் ஜெசிந்தன், சஜீவன், கௌசிகன், கல்பனா (ஜேர்மனி), கஜன், சோபிகா (சுவிஸ்), துளசிகா (யா.இ.ஆ.பா.) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இன்று (22.09.2001) சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*30/13, அத்தியடி குறுக்கு வீதி,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
ந.கணேசநாதன்
(மகன்)

(92563)

### சின்னையா அம்பிகாபதி

கல்வயல், சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் தற்போது நீர்வேலி மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா அம்பிகாபதி நேற்று (21.09.2001) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - அன்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் சிவகுமார் (ஜேர்மனி), அருட்குமார் (லண்டன்), பாலகுமார் (கொழும்பு), செல்வமலர் (சுவிஸ்), இராசமலர் (சுவிஸ்), சிவமலர் ஆகியோரின் பாசமிகு தந்தையும், திருமதி தம்பிஐயா சிதம்பரம், திருமதி தம்பு அம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் மட்டுவில் வடக்கு செட்டியார் கணவதிப்பிள்ளை - சின்னம்மா தம்பதியினரின் மூத்த மருமகனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*நீர்வேலி மத்தி,*
*நீர்வேலி.*

தகவல்:
க.வேலாயுதபிள்ளை
(பெரியையா - மைத்துனர்)

(92565)

### திருமதி நல்லதம்பி வள்ளிமுத்து

மீசாலை வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி நல்தம்பி வள்ளிமுத்து நேற்று (21.09.2001) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லதம்பியின் அன்பு மனைவியும், வயிரமுத்து (முன்னாள் நடத்துநர் இ.போ.ச) மற்றும் காலஞ்சென்ற தங்கமுத்து ஆகியோரின் பாசமிகு தாயாரும், சிவபாக்கியம் (S.P.H.M. ஊர்காவற்றுறை), பேரம்பலம் (கல்வயல் ப.நோ.கூ.ச., சாவகச்சேரி) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், பிரசாந்தினி, மதியானந்தன், சுதர்சினி, புவிவதனி, கோகுலன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (21.09.2001) வெள்ளிக் கிழமை பி.ப 4.00 மணிக்கு நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவுவம்.

*தற்காலிக முகவரி:-*
*110/15, சட்டநாதர் வீதி,*
*நல்லூர்,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:-
ந. வயிரமுத்து
(மகன்)

(92561)

## அறிவுறுத்தல்

குழந்தைகளுக்கு போலியோ சொட்டுமருந்து வழங்கும் தினங்களான இன்றும் ஒக்ரோபர் 20ஆம் திகதியும் பதில் பாடசாலைகள் நடத்த வேண்டாம் என்று பாடசாலை அதிபர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

## அரசமைப்பின் 17ஆவது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பித்து உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தன. அவற்றினது சட்டத்தரணிகள் நீதிமன்றில் ஆஜராகி தேர்தல் ஆணைக்குழு அமைப்பது தொடர்பான அரசமைப்புத் திருத்தத்தில், அந்த ஆணைக்குழு தேர்தல் காலத்தில் வெகுஜனத் தொடர்பு சாதனங்களைக் கட்டுப்படுத்த அதிகாரம் அளிக்கப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டினர்.

இது ஊடகச் சுதந்திரத்தையும், கருத்து வெளியிடுவது தொடர்பாக அரசமைப்பில் வழங்கப்பட்ட அடிப்படை உரிமைகளையும் மீறுவதாக அவர்கள் நீதிமன்றத்திடம் முறையிட்டனர்.

இதனை ஏற்றுக்கொண்ட பிரதம நீதியரசர், தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்களுக்கு தேர்தல் காலத்தில் ஊடகங்களைக் கட்டுப்படுத்தும் அதிகாரத்தை வழங்காமல், அதற்குப் பதிலாக ஊடகங்களுக்கு ஆலோசனைகளை வழங்கும் நெறிமுறைகளை விதிக்கும் அதிகாரத்தை வழங்கலாம் என்றும் ஆலோசனை கூறினர்.

அதற்கேற்றவாறு சட்டப்பிரமாணங்களை மாற்றும்படி பிரதம நீதியரசர் குறிப்பிட்டதை சட்டமா அதிபர் நீதிமன்றில் ஏற்றுக்கொண்டார்.

17 ஆவது அரசமைப்புத் திருத்தத்தை நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் நிறைவேற்றினால்போதுமா அல்லது சர்வஜன வாக்கெடுப்பு மூலம் அதற்கு மக்கள் அனுமதி பெறவேண்டுமா என்பது தொடர்பான தனது தீர்ப்பை உயர் நீதிமன்றம் சபாநாயகருக்கும் ஜனாதிபதிக்கும் உடன் அனுப்பி வைக்குமெனத் தெரிவிக்கப்பட்டது.

பொருளியல்
PAPER CLASS
நடைபெறுகின்றது.
திங். - செவ். - 5 மணி
R.இராஜேஸ்வரன்
பிரத்தியேக வகுப்பு
கைலாச பிள்ளையார் கோயிலடி,
நல்லூர்.
A/L மாணவர்களுக்கான
ஆங்கிலம்
M.ஜோன்சன் (92560)

# சிவஞானம் இராஜினாமா

யாழ்ப்பாணம்,செப்.22

யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் பதவியிலிருந்து தாம் விலகிக்கொள்வதாக சி.வி.கே.சிவஞானம் கடிதமொன்றைச் சமாசத்துக்கு நேற்று அனுப்பிவைத்திருக்கிறார்.

தனிப்பட்ட காரணங்களுக்காகவே தாம் இந்த முடிவை எடுத்ததாக அவர் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

நாளை இடம்பெறும் சமாசத்தின் இயக்குநர் சபைக் கூட்டத்தில் இக்கடிதம் குறித்து விவாதிக்கப்படவிருப்பதாக சமாச வட்டாரங்கள் தெரிவித்தன. (க-3-17)

## வாஜ்பாய்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமரின் முழுஅளவிலான கொடும்பாவி ஒன்றையும் தீயிட்டுக் கொளுத்தினர்.

இதற்கிடையில், ஆர்ப்பாட்டக்காரர்களில் ஒருவரான பெண் ஒருவர் தனது உடல்மேல் மண்ணெண்ணையை ஊற்றித் தீக்குளிக்க முயற்சி செய்தார். எனினும் அருகில் இருந்தோர் அவரைத் தடுத்துவிட்டனர்.

## யாழ்.மாவட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிட்டி இந்துக்கல்லூரியில் நடைபெற்றன.

நேற்று பதக்கங்கள் பெற்ற மாணவர்கள் பெயர், விவரம் வருமாறு:-

**தங்கப்பதக்கம்**

★ செல்வி ந.தனசொரூபி (கொக்குவில் இந்துக்கல்லூரி - இசை, தனிப்பிரிவு V)

★ செல்வி விவேகானந்தன் ஜீவிகா (யூனியன் கல்லூரி - நடனம்)

★ செல்வன் குலேந்திரன் ஜெகதீசன் (யூனியன் கல்லூரி - இசை, தனி-III. இந்த மாணவர் கண்பார்வையற்றவர்)

★ வில்லுப்பாட்டு (திறந்த போட்டி - குழு, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி)

★ செல்வன் து.கேசவன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி - இசை - தனி - IV)

**வெள்ளிப்பதக்கம்**

★ செல்வி எலிஸபெத் சுபத்திரா பீற்றர்சிங்கம் (வேம்படி மகளிர் கல்லூரி - நடனம் - தனி - IV)

தேசிய மட்டப்போட்டிகளில் கலந்துகொள்ளச் சென்ற யாழ். மாணவர்கள் தாம் கலந்துகொண்ட அனைத்து நிகழ்வுகளிலும் பதக்கங்கள் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

தேசியமட்டத் தமிழ்த்தின விழாவும், பரிசளிப்பும் கலைநிகழ்வுகளும் இன்று பம்பலப்பிட்டி கதிரேசன் மண்டபத்தில் நடைபெறவுள்ளன. முன்னாள் கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

## 17ஆவது.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்கம் வகிக்கும் ஆணையாளர்களை நியமிக்கின்ற அரசமைப்புக் கவுன்ஸில் தொடர்பாக அரசுக்கும் ஐ.தே.கட்சிக்கும் பெரும் கருத்து முரண்பாடு நிலவிவந்தது.

பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர், சபாநாயகர் ஆகியோரின் பொது இணக்கத்தின் பேரில் கவுன்ஸிலுக்கு ஐந்துபேர் நியமிக்கப்படும் - ஆரம்பகால - திட்டத்தை வரவேற்ற ஐ.தே. கட்சி, அந்தக் கவுன்ஸிலுக்கு மேலதிகமாக ஓய்வுபெற்ற நீதியரசர் ஒருவரை ஜனாதிபதியும் நியமிக்கலாம் என்ற சட்ட ஏற்பாடு சேர்க்கப்பட்டதைக் கடுமையாக ஆட்சேபித்துவந்தது.

இந்தக் கருத்து முரண்பாட்டைத் தீர்த்து வைப்பதற்காக அரசுத்தரப்புக்கும் ஐ.தே.கட்சிக்கும் இடையில் ஜே.வி.பி. பேச்சு நடத்தியது.

அதனை அடுத்து -

அனைத்து எதிர்க்கட்சிகளினதும் கருத்தொற்றுமையுடன் மற்றொரு ஓய்வுபெற்ற நீதியரசரை எதிர்க்கட்சிகளும் கவுன்ஸிலுக்கு நியமிக்கலாம் என்ற ஏற்பாட்டையும் சேர்த்துக் கொள்ள உடன்பாடு காணப்பட்டதை அடுத்து -

இந்த அரசமைப்புத் திருத்தம் தொடர்பாக பொதுஇணக்கம் காணப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. (உ-3-7)

## வடக்கு - கிழக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாகாண சுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தென்மராட்சி, வடமராட்சி கிழக்கு, பச்சிலைப்பள்ளி ஆகிய இடங்களில் இருந்து இடம்பெயர்ந்தோர் தமக்கு அருகில் உள்ள எந்தவொரு நிலையத்திலும் போலியோ சொட்டு மருந்தை குழந்தைகளுக்குப் பெற்றுக் கொடுக்க ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யுனிசெவ்வின் போலியோ தடுப்புப்பிரிவு, சுகாதார அமைச்சு, ரோட்டறிக் கழகம் ஆகியவற்றின் அனுசரணையுடன் இந்தப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதேவேளை -

போலியோ சொட்டு மருந்து வழங்கும் நிகழ்வை முன்னிட்டு விடுதலைப் புலிகள் நேற்றுமுதல் இரண்டு தினங்களுக்கு யுத்தநிறுத்தம் செய்துள்ளதாக முன்னரே அறிவித்திருந்ததும் அரசுப் படைகளும் யுத்த நடவடிக்கைகளை நிறுத்தி அமைதி பேணும் என்று தாம் எதிர்பார்ப்பதாக விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் தெரிவித்திருந்ததும் தெரிந்ததே. (க-7-10-15-17-173)

BITSMANS
கல்வி நிறுவனம் - மானிப்பாய்
பிரிவு 2
SPOKEN ENGLISH WITH GRAMMAR
M.A.HARI
ஆரம்பம்: 25.09.2001 செவ். 9.00 a.m
(92517)

BRIGHTMAN
பிரவுன் வீதி, நீராவியடி, யாழ்நகர்
பிரிவு 4
சரளமாக உரையாட
சிங்காரம்
BY:-லீலாக்கிருஸ்ணன்
ஆரம்பம்: 23.09.2001 SUN 4.30
SPOKEN ENGLISH வகுப்பு
புதிய பிரிவு ஆரம்பமாகிவிட்டது
(92542) செவ்.,வியாழன 2.00p.m

தொலைத்தொடர்பு நிலைய (மோட்டறோலா) உரிமையாளர் சங்கம்
அவசர பொதுக்கூட்டம்
காலம் : நாளை (23.09.2001) ஞாயிற்றுக்கிழமை மு.ப - 10மணி
இடம் : கொக்குவில் இந்துக் கல்லூரி மண்டபம்
இந்தப் பொதுக் கூட்டத்தில் அனைத்து சங்க உறுப்பினர்களையும் மோட்டறோலா உரிமையாளர்களையும் தவறாது கலந்துகொள்ளும்படி அன்புடன் அழைக்கின்றோம்.
த.தேவராஜா தலைவர். (92541) காங்கேசன்துறை வீதி, மருதனார்மடம். ஐ.நற்குணநாதன் செயலாளர்.

மிற்சுயி (MITSUI) சிமெந்து விநியோகம்
எதிர்வரும் வார முற்பகுதியில் வரவிருக்கும் மிற்சுயி (MITSUI), அட்லஸ் (ATLAS) சிமெந்துகளின் ஓடர்களை பதிவுசெய்துகொள்ளுமாறு வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.
※ MITSUI NO. 1 CEMENT IN SRI LANKA ※
❖ மிற்சுயி நம் நாட்டின் முதல் தர சிமெந்து ❖
தொடர்பு: ஜெசிபா ஏஜென்சி
132, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. - 2407
(C/18342)

BIT இரண்டாம் அரையாண்டிறுதிப் பரீட்சை முடிவுகள்
BIT இரண்டாம் அரையாண்டிறுதிப் பரீட்சை முடிவுகள் வெளியாகியுள்ளன. எமது நிறுவனத்தில் கல்விகற்று பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் 100% சித்தியடைந்துள்ளனர். அவர்களுக்கு எமது பாராட்டுகள்.
IBMS No.701, K.K.S. Road, Jaffna. (C/18357)

Computer Courses
DIPLOMA IN MICROSOFT OFFICE XP
- Introduction to Computer
- MS Word 2000 / XP
- MS Excel 2000 / XP
- MS Access 2000 / XP
- MS Power point 2000 / Xp
- MS Outlook 2000 / XP
- Photo Draw 2000 / XP
Full Syllabus Covered
Duration: 6 months
Special Offer Rs. 1750/=

DIPLOMA IN COMPUTER PROGRAMMING
- Introduction to Computer
- Programming Techniques
- MS Word 2000 / XP
- MS Excel 2000 / XP
- MS Windows me
- Visual Basic 6.0
- C/C++
- HTML Programming
- E - Mail & Internet
Full Syllabus Covered
Duration: 9 months
Special Offer Rs. 3250/=

பயிற்சிகள் ஆரம்பம் 29.09.2001 11 a.m.
Note:-
➢ இப்பிரிவுக்கு மட்டும் பதிவுக்கட்டணம் அறவிடப்படமாட்டாது.

CERTIFICATE COURSES
MS Word 2000 / XP
MS Excel 2000 / XP
MS Access 2000 / XP
Page maker 6.5
Auto Cad 2000i
(Each 3 months)
Visual Basic 6.0
Corel Draw 10.2
Pascal
Dbase III+
Java
C/C ++
(Each 4 months)

JAFFFNA TECHNICAL INSTITUTE
No. 07, Palaly Road,
Jaffna.
(C/18358)

IBMS இன்
புலமைப்பரிசில் பரீட்சை 2001/2002
மேற்படி பரீட்சைமுடிவுகள் தனித்தனியே தபாலில் சேர்க்கப்பட்டுள்ளன. கிடைக்கப்பெறாதவர்கள் பரீட்சைக்கு விண்ணப்பித்தகாரியாலயத்தில் அல்லது தலைமைக்காரியாலயத்திற்கு வந்து பெறுபேற்றினை பார்வையிடலாம்.
2001/2002கல்வியாண்டிற்குரியவகுப்புக்கள் எதிர்வரும் 29/09/2001(சனிக்கிழமை) ஆரம்பமாகவிருப்பதால் 26/09/2001ற்கு முன்னர் தங்கள்பதிவினையும், தங்களுக்குரிய வகுப்பு நேரத்தினையும் உறுதிப்படுத்திக்கொள்ளவும்
Note:- A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்குரிய (September SCH III Batch)வகுப்புக்களும் 29/09/2001 அன்று ஆரம்பமாகவிருப்பதால்26/09/2001ற்குமுன்னர் தமது நேரத்தினைஉறுதிப்படுத்திக்கொள்ளவும். SCH III Batch புலைமைப்பரிசிலில்தோற்றி இது வரை பதிவு செய்யாத மாணவர்களும் பதிவு செய்து கொள்ளலாம்.
Head Office
IBMS
[Affiliated to Barrington University of USA]
No.701 K.K.S Road,
Jaffna. Phone: 021-3165
Branches
☒ NMMV Road, Nelliyady.
☒ Main Road, Chankanai.
IBMS ☑ IT EDUCATION FOR THE NEW GENERATION

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22.09.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.